
# என்டெ ஜீவியத்திலிருந்து...

எஸ்.எல்.எம்.ஹனிபா

பாகம் 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ரை இதயத்திலிருந்து...

014173_2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்டெ ஜீவியத்திலிருந்து...

பாகம் 01

எஸ்.எல்.எம்.ஹனீபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்டெ சீவியத்திலிருந்து...**

பத்திகள்

© எஸ்.எல்.எம். ஹனீபா

முதல் பதிப்பு: ஜனவரி 2023 (கஸல்)
பக்கங்கள்: 140
முகப்பு ஓவியம்: ட்ராட்ஸ்கி மருது
நூல் வடிவமைப்பு: ஜீவமணி

**Enda Siviyaththilirunthu...**

**Columns**

© S.L.M. Haniffa

First Edition: January 2023 (Ghazal)
Pages: 140
Cover Art: Trotsky Marudu
Layout: Jeevamani
ISBN: 978-624-5816-14-9

இந்திய விற்பனை உரிமை
CommonFolks
No: 9/2, Second floor, Sembudoss Street,
Mannady, Broadway, Chennai 600 001
TamilNadu, India.
Whatsapp: +91-75501 74762

கஸல் பதிப்பகம் | Ghazal Publications
219, ஏ.கே.எம். வீதி, ஏறாவூர், இலங்கை | 219, A.K.M.Road, Eravur, Srilanka
+94 770807787 | +94 770807787
mail@ghazal.press | mail@ghazal.press
Website: ghazal.press

விலை: இலங்கை ரூ. 600 □ இந்தியா ரூ. 150

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

எனது ஆசிரியரும் நண்பருமான
திரு. அருணாசலம் தம்பிப்பிள்ளை அவர்களுக்கு
இந்நூலை சமர்ப்பணம் செய்கின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீவியங்கள்


□ படிக்க இனிக்கும் பத்திகள் – ஸபீர் ஹாபிஸ் ...... 11
□ என்டெ சீவியத்திலிருந்து... – எஸ்.எல்.எம். ஹனீபா ...... 13

1. On your mark, Get zet, Go ...... 15
2. அருணாசலம் தம்பிப்பிள்ளை அவர்கள் ...... 17
3. நானும் எழுத்தும் ...... 19
4. வாப்பாவின் பூனை ...... 21
5. கால்நடைக்கோ காட்சிகள் ...... 23
6. ராணி ...... 25
7. இளவரசி ...... 27
8. இஸ்தான்புல்லில் ஒரு மகன் ...... 29
9. நானும் எனதினிய தேவராஜூம் முப்பது பவுன் நகைகளும் ...... 31
10. "மருத்துவம்" கதை பிறந்தது ...... 34
11. நானும் பலாவும் ...... 37
12. ஆதம் மாமாவும் பலா மரத்தடியும் ...... 39
13. காணாமல் போன பலாப்பழம் ...... 41
14. கறவைப் பசுக்களும் கன்றுகளும் ...... 43
15. இனப்பிரச்சினையும் மூறா எருமைகளும் ...... 45
16. இனப்பிரச்சினையும் இறைச்சிக் கோழிக் குஞ்சும் (புரொய்லர்) ... 47
17. புத்தனே வருக! ...... 48
18. சு.ரா. ...... 50
19. எத்தளம் சென்றாலும் புத்தளம் செல்லாதே! ...... 52
20. மகானும் மூன்று சிங்கங்களும் ...... 54
21. சூறாவளிக் கதை – 1 ...... 56
22. சூறாவளிக் கதை – 2 ...... 58




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. சூறாவளிக் கதை - 3 .................... 60
24. சூறாவளிக்கதை - 4 .................... 62
25. துறைக்காரருடைய மகன் - 01 .................... 64
26. துறைக்காரருடைய மகன் - 02 .................... 66
27. துறைக்காரருடைய மகன் - 03 .................... 70
28. இன்று வந்தான் ஒரு மனிதன் .................... 72
29. டாக்டர் குகதாசன் ஐயா .................... 75
30. அஷ்ரஃபைக் கண்டேன்! .................... 78
31. மூணாம் நம்பர் .................... 80
32. மர்ஹூம் அல்ஹாஜ் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் .................... 83
33. செவ்வந்தி நீ எங்கே...? .................... 85
34. அவர்கள் வந்தார்கள்! .................... 88
35. தீரா நினைவுகள் .................... 90
36. கறுப்பியன் குளமே சௌக்கியமா? .................... 94
37. பறைமேளக் கூத்து .................... 96
38. நொச்சிமுனையாரும் காஞ்சிரங் கொட்டையும் .................... 97
39. கறி மணக்கும் .................... 99
40. சீமாட்டி .................... 101
41. பிஞ்சு பலாக்கறி .................... 104
42. பனையான் மீன் பாலாணம் .................... 106
43. உப்புக் கண்டம் .................... 108
44. இறால் வேட்டை .................... 110
45. காணாமல் போன கண்டல்காடு .................... 112
46. பாலை .................... 114
47. வில்வம் (வில்வெத்திரி) .................... 116
48. சல்லி மரம் .................... 118
49. என் இனிய மாமரமே! .................... 120
50. காட்டு மா .................... 122
51. சாறணை .................... 124
52. மண்டூர் பெனி வர்க்கா .................... 126
53. காதல் சுதந்திரம் .................... 128
54. எங்கள் முதுசொம் - அதிபர் பிரின்ஸ் காசிநாதர் .................... 130
55. சுலக்சன .................... 134
56. பொன்விழாக் காணும் எனது சைக்கிள் வண்டி .................... 137



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“

கார்மேகங்களாய்த்
திரண்டு வரும் நினைவுகள்
வழிமறித்து வழிமறித்து
ஊழிக் கூத்தாடுகிறது
காலடி வாழ்வு

ஆனாலும் என்ன
நினைவுகள் ஒரு சோடி...
மினுமினுக்கும் ரோஜா இதழ்களை
நனைத்துவிட்டு..
நகர்கிறது..
தோழியே நீ அறிவாயா?

”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிக்குரியோர்

ஸபீர் ஹாபிஸ்
ஸப்ரி (கஸல் பதிப்பகம்)
மருது
எம். பௌசர்
இஸ்ஸத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிக்க இனிக்கும் பத்திகள்

எஸ்.எல்.எம். ஹனீபா அவர்கள் எனக்குப் பெரியப்பா என்பதைக் கண்டடைவதற்கு முன்னமேயே இலக்கியம் எங்களை இறுகப் பிணைத்து விட்டிருந்தது. குடும்ப உறவு உரிமைகளை பரஸ்பரம் பகிர்ந்து வழங்கியது.

முகநூல் பதிவுகளாக தமிழுலகெங்கும் சுற்றியலையும் எஸ்.எல்.எம்.மின் எழுத்துகளில் தெரிவு செய்யப்பட்ட சிலவற்றை ஒரு தொகுப்பாக இந்நூலில் கொண்டு வந்துள்ளோம். இதிலுள்ள ஒவ்வொரு பத்தியும் சுவையான வரலாற்று நிகழ்வுகளை விபரிக்கின்றன. அவற்றை விபரிப்பதற்காக அவர் பயன்படுத்தியுள்ள உத்தியும் சிறுகதையின் வடிவிலான போக்கும் படிப்பவர்களுக்கு அலுப்பற்ற வாசிப்பு அனுபவத்தை வழங்க வல்லவை.

இதிலுள்ள பல பதிவுகள் எஸ்.எல்.எம். சொல்லச் சொல்ல எனது கைப்பட தட்டச்சு செய்து முகநூலில் பதிவேற்றியவை. அந்த சந்தர்ப்பங்களில் அவரின் வேகமான விபரிப்புக்கும் எனது விரைவான தட்டச்சுக்கும் இடையே பலத்த போட்டி நடக்கும். நாள் தவறாமல் எங்கள் சந்திப்பு நிகழும். சுமார் பதினைந்தாண்டுகளுக்கும் மேலாக அன்பை மட்டும் ஊதியமாகப் பெற்று அவரது தட்டெழுத்தாளராகப் பணியாற்றிய பெருமை எனக்குண்டு.

பதிவைச் சொல்லும் போது அவருக்குத் தடுமாற்றம் ஏற்படுவதில்லை. சொல்லி முடித்த பின் திருத்தங்கள் தேவைப்படுவதுமில்லை. ஆற்றொழுக்கான நடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது நாவிலிருந்து தமிழ் மலர்ந்துதிரும். எந்தவொரு எளிய நிகழ்வையும் மிக சுவாரசியமாக விபரிப்பதிலும், சம்பவங்களை சுவையான கோர்வையாகச் சொல்லி முடிப்பதிலும் அவர் வெளிப்படுத்தும் புலமை வியப்பை ஏற்படுத்தும்.

பின்னாளில் அவரே முயன்று செல்போனில் தட்டச்சு செய்யப் பழகிக் கொண்டதால் எங்களது சந்திப்புகள் குறைந்து போயின. அவரது விடாமுயற்சி கண்டு நான் அதிசயித்த நிகழ்வுகளில் இதுவும் ஒன்று.

இத்தொகுப்பில் செழிப்பான அனுபவங்கள் கலைநயத்தோடும் கருத்தாழத்தோடும் திரண்டு வருகின்றன. இலக்கியத்தை நேசிக்கும் ஒவ்வொரு வாசகனுக்கும் அவை பெரு விருந்து படைக்கக் காத்திருக்கின்றன.

கடந்த கால வரலாற்றில் உள்ள சுவையையும் இனிமையையும் இப்பத்திகளில் முழுமையாக அனுபவிக்கலாம். அதனால் இவற்றை படிக்க இனிக்கும் பத்திகள் என அழைப்பது மிகவும் பொருத்தமாகும்.

**ஸபீர் ஹாபிஸ்**
12.12.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்டெ சீவியத்திலிருந்து...

என்னால் அவ்வப்போது *எங்கள் தேசம், எழுச்சிக்குரல், சரிநிகர்* போன்ற சில பத்திரிகைகளிலும் எனது முகநூல் பக்கத்திலும் எழுதப்பட்ட பத்திகளின் தொகுப்பு இது.

78 வயதை வலியோடும் நோயோடும் எதிர்கொள்ளும் இந்நாளில் இப்பத்திகளைத் திரும்பிப் படித்துப் பார்க்கிறேன். ஒரு சராசரி ஏழைக் குடும்பத்திலிருந்து வந்த நான் எப்படியான வாழ்க்கையை வாழ்ந்து வந்துள்ளேன் என்பதை இந்த பத்திகள் எனக்குத் துலாம்பரமாக்குகின்றன.

எனது வாழ்நாள் பூராகவும் சிங்கள, தமிழ், முஸ்லிம் உறவுகளுக்காகவும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்காகவும் பாடுபட்டுள்ளேன். பயிர் வளர்ப்பதிலும் கால்நடைகளைப் போஷிப்பதிலும் உபதேசம் வழங்குவதிலுமாக பொழுதுகளைக் கழித்துள்ளேன்.

ஒரு நாற்பதாண்டு காலம் வேளாண்மை செய்திருக்கிறேன். அதில் இலாபம் என்பதை விட நஷ்டந்தான் அதிகம் சந்தித்திருக்கிறேன். அதற்கான உடலுழைப்பு ஏராளம்.

அரசியல் காரணங்களுக்காக இந்தத் தீவு பூராகவும் அலைந்திருக்கிறேன். சந்தோஷமாக அந்த இடமாற்றங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். புதுப்புது ஊர்களையும் புது மனிதர்களையும் காண்பதில் அடங்காத ஆசை கொண்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பதை ஒரு தவமாகவே கொண்டிருக்கிறேன். இலௌகீக வாழ்தலுக்கான தேடலில் இலக்கியத்தை ஊழியமாகக் கொள்ள முடியவில்லை. என்னளவில் அதுவொரு பொழுது போக்கு. எழுத்து என்பது ஒரு வரம் என்றால், வாசிப்பு தவம் என்று சொல்வேன்.

இனி... வாசியுங்கள் நண்பர்களே!

**எஸ்.எல்.எம். ஹனீபா**
ஓட்டமாவடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# On your mark, Get zet, Go

இரசிகர்களின் ஆரவாரங்களுக்கிடையே ஒரு கணம் விலகி நிற்கிறேன்.

100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தின் ஆரம்பக் கோட்டில் நான்...

எனது இடது பக்கம் என்னைப் பார்த்த விதமாக அந்த 32 வயது இளம் ஆரம்பிப்பாளர்.

இரண்டு தடவைகள் பாய்ந்து விட்டதால், மூன்றாவது தடவை என்னை வெளியேற்றுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார். அவர் யாருமில்லை, எனது இனிய ஆசானும் நண்பருமான அருணாசலம் தம்பிப்பிள்ளை அவர்களே.

யாழ்ப்பாணம் சிறுபிட்டியை தாயகமாகக் கொண்டவர். வட்டுக்கோட்டை ஜஃப்னா கல்லூரியின் பழைய மாணவர்.

தனது 15 வயதிலேயே பாடசாலையின் பாஸ்கட் போல் அணியில் இணைந்து மட்டக்களப்பு சென்மைக்கேலோடு விளையாடி தனது குழுவுக்கு வெற்றியைச் சுவீகரித்துக் கொடுத்தவர்.

கிட்டத்தட்ட அறுபதாண்டு காலமாக மட்டக்களப்பின் மண்ணுக்கு வளமூட்டுபவர்.

நேற்று இரண்டு மணி, நல்ல வெயில். எனது கேட்டில் யாரோ தட்டும் ஒலி. ஒலியோடு போட்டி போட்டுக் கொண்டு பலாப்பழமும் மணத்தது.


அந்த மணம், தம்பிப்பிள்ளை சேர் வீட்டு பலாப்பழத்தின் மணம். நாசித்துவாரங்கள் இலகுவாக அடையாளங் கண்டன.

ஆசிரியர், மாணவருக்கு பலாப்பழம் கொண்டுவரும் அந்த அரிய காட்சியை சொல்வதற்கு என்னிடம் வார்த்தையில்லை.

இதற்கு முன்னரும் நான் ஐயா பற்றி எழுதியிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாடு வளர்ப்பு, பயிர்ச்செய்கை என்று இந்த வயதிலும் அவருடைய செயற்பாட்டைக் கண்டு வியந்திருக்கிறேன்.

ஐந்து ஏக்கர் தென்னந்தோப்பும், 22 பசுக்களும், வீட்டில் காய்கறித் தோட்டமும். இந்த வாழ்க்கை எத்தனை மனிதர்களுக்கு சித்திக்கும் நண்பர்களே!

நேற்று எனது மனைவி ஆச்சரியப்பட்டார்.

"நீங்களென்றால், இந்த வயதில் இவ்வளவு தூரம் செல்வீர்களா?" என்று கேட்டார்.

"எனது நண்பர்களைத் தேடி, இதை விடவும் நூற்றுக்கணக்கான கிலோமீற்றர் தூரம் நானும் செல்பவன்தான்" என்றேன்.

"அன்புக்கும் நட்புக்கும் இடம், காலம், மதம், சாதி, மொழி எதுவும் இடையூறு இல்லியே என் இனியவளே!" என என் மனம் உரத்துச் சொன்னது.

நீடூழி வாழ வாழ்த்துகிறேன். என் ஆசானே!

□ ஜூலை 8, 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணாசலம் தம்பிப்பிள்ளை அவர்கள்

நேசத்திற்குரிய அருணாசலம் தம்பிப்பிள்ளை அவர்கள், யாழ்ப்பாணம், வலிகாமம் கிழக்கு, சிறுப்பிட்டியைச் சேர்ந்தவர்.

நண்பருடன் உரையாடும் போதெல்லாம், உலகப் புகழ்பெற்ற பேரறிஞர் சீ.வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் பிறந்த மண்தான் எனது ஊர் என்பார். அத்துடன் மூதறிஞர் உ.வே. சாமிநாதையர் பற்றிப் பேசுபவர்கள், உ.வே.சா.வுக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கிய சீ.வை.தா பற்றிப் பேசமாட்டார்கள் என்று தன்னூரின் பெருமையைச் சொல்லிக் கொள்வார்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த அவர், எட்டு வருட காலங்கள் யாழ்ப்பாணத்தில் தோட்டம் செய்தேனென்று பெருமையாகச் சொல்வார்.

01.11.1968ல் ஆசிரியர் நியமனம் பெற்று முரசு மூட்டை முருகானந்த வித்தியாலயத்தில் பணியாற்றினார். பின்னர் 01.01.1972லிருந்து வாழைச்சேனை இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்தார். அங்கு எனது அரிவரி வகுப்பு ஆசிரியரான மதிப்புமிகு வடிவேல் ஆசிரியர் அவர்களுடைய மகள் ஜீவராணியை 22.08.1975ல் திருமணம் செய்கிறார்.

ஜீவராணி அவர்கள், ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியவர். கடந்த நான்கு வருடங்களுக்கு முதல் திடீரென்று காலமானார்.

தற்பொழுது, தனது மனைவியின் தாய் தகப்பனையும் பராமரித்துக் கொண்டு வாழைச்சேனை விபுலானந்த வீதியில் வாழ்கிறார்.

படிக்கின்ற காலத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியில் வலைப்பந்தாட்ட குழுவுக்குத் தலைமை தாங்கினார். கிரிக்கட், தடகளம், உயரம்பாய்தல் என்று விளையாட்டுத் துறையில் இளமையில் கொடிகட்டிப் பறந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1977, 78 காலப்பகுதியில் அவரும் நானும் ஆளுக்கொரு பசு வளர்த்தோம். மாலை வேளையில் இருவரும் வயல் வெளிக்குச் சென்று புல்லறுத்துக் கட்டிக் கொண்டு வருவோம். பிரதான வீதியைக் கடந்து வரும் பொழுது பலரும் எங்களை ஒரு விதமாகப் பார்ப்பார்கள். அவ்வாறு உழைத்து முன்னுக்கு வந்த பெரும் மனிதர்.

அவருக்கு ஏராளமாக முஸ்லிம் நண்பர்களே உண்டு. அவரின் புத்தக அலுமாரியில் குர்ஆன் மொழி பெயர்ப்புக்குத் தனி இடம் கொடுத்து வைத்திருக்கிறார். ஓரளவு குர்ஆனை பொருள் விளங்கிக் கற்றுமிருக்கிறார்.

75 வயதைத் தொட்டு நிற்கும் நண்பர் தம்பிப்பிள்ளை அவர்கள், உடல் நலக்குறைவு என ஒரு நாளும் சொல்லியிருக்க மாட்டார். அவரோடு பழகுகின்ற நண்பர்கள் பலரும் உடல் நலமில்லை என்று சொன்னால், “அல்லாஹ்ட்ட பாரங்குடுத்துட்டு ஆகிற வேலெயப் பாருங்க” என்று ஒரு ஞானி போல் சொல்வார்.

இன்று காலையில் என்னைக் காண வந்த வேளையில், இருவரும் இரண்டு மணி நேரங்கள் அலாதியாக உரையாடினோம். என்னைப் பார்க்க வரப் போகிறேன் என்று அவர் சொன்னதும் அவர் வீட்டுப் பலாப்பழத்தின் மணம் என் நாசித் துவாரங்களை நிறைத்தது. அவருடைய சின்னஞ்சிறிய மோட்டார் சைக்கிளில் ஒரு பலாப்பழத்தைக் கட்டிக் கொண்டுதான் இன்றும் என்னைக் காண வந்தார்.

விளையாட்டு, விவசாயம், கல்வி, வாசிப்பு, உடற்பயிற்சி என்று அவரின் பொழுது கழிகிறது.

□ ஆகஸ்ட் 28, 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் எழுத்தும்

இருபது வருடங்களுக்கு முதல் இணைந்த வடகிழக்கு மாகாண சபையின் இலக்கிய விழா கல்முனை மஹ்மூத் பாலிகாவில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

அந்த விழாவில் நானும் நண்பர் உமா வரதராசன் அவர்களும் சிறப்புரை ஆற்றினோம். "நானும் எழுத்தும்" என்ற மகுடத்தில் எனது உரை அமைந்திருந்தது. அந்த உரையின் கடைசிப் பந்தியை முகநூல் நண்பர்களுக்கு இங்கு பதிவு செய்கிறேன், அந்த நாவலை எழுதும் தருணம் இன்னும் எனக்குக் கிட்டவில்லை என்ற ஆற்றாமையோடு!


என் இனிய நண்பர்களே! உங்களிடமிருந்து விடைபெறும் தருணம் கருக்கொள்கிறது. எனது பால்ய வயதில் சோலைக்காட்டில் ஆனைக்குட்டிகள் பிடிப்பதை வாப்பா கதை கதையாகச் சொல்வார். எனது மனச்சோலையில் குட்டியாக வலம் வந்த சின்னப்பணிக்கன் இத்தனையாண்டுகளில் தனித்தலையும் கொம்பனாகி நிற்கிறான். அவன் கதைதான் சின்னப்பணிக்கன் கதை.

அந்த அனுபவங்களை நினைத்தால் மனம் எழுச்சி பெற்று அலைமோத நான் அள்ளுண்டு போவேன். சோலைக்காட்டில் எனது சின்னவரோடு நானும் காணாமல் போய்விடுவேன். எனது குடும்பத்தில் சின்னவரென்று சாச்சா இருந்தார். எனது சின்னஞ்சிறு வயதில் அவர் பிடித்த ஆனைக்குட்டியில் என்னை அமர்த்தி எங்களூரைச் சுற்றி வலம் வருவார். யானைக் குட்டிகள் வரும் ஒவ்வொரு தெருவிலும் பெண்டுகள் வட்டமாக நின்று குரவை ஒலியெழுப்பிக் கொண்டாடுவார்கள்.

பலாக்கொத்துகளையும் குருத்தோலைகளையும் வெட்டி வெட்டிப் போடுவார்கள். ஒரு நாள் அந்தச் சின்னவர், யானைக்குட்டிகள் பிடிக்கப் போனவர் காணாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போனார். பெரும் சோலையாகவும் வெட்டவெளிச் சூன்யமாகவும் திகழும் நிலம். அன்று காணாமல் போனவரைத் தேடிய பயணந்தான் சின்னப் பணிக்கன் கதை. நானெழுதக் காத்துக் கிடக்கும் கதை.

சோலை வனங்களில் ஆனைக் கூட்டங்களை மோப்பம் பிடித்து, அழைத்து வரும் மந்திரக்காரரின் பேரனாக்கும் நான். ஆனைக் குட்டிகளின் தொம்பைக் கால்களுக்கிடையில் தவழ்ந்து சென்று சுருக்கிட்டு மடக்கும் சின்னவரின் மகன் நான். இன்று எனது கற்பனை வானில் உருண்டு திரண்டெழுந்து செல்லும் ஆனைக் கூட்டங்களுக்கிடையில் நானும் எழுத்தெனும் வடம் கொண்டு தவமிருக்கிறேன்.

நான் சுருக்கிடும் தருணம் பார்த்து யானைக் கூட்டங்கள் மேகத் திரள்களாக மாறும் விந்தை எனது மனதை அலைக்கழித்தாலும் நவீன தமிழிலக்கியச் சோலையில் நானொரு ஆனையை மடக்கிப் பிடிப்பேன். அதற்கான வடத்தை இதழ் இதழாகப் புரிப்புரியாக முறுக்கிக் கொண்டிருக்கிறேன். சுருக்கிட்டுப் பிடிக்கும் அந்தத் தருணத்திற்காகத் தவமிருக்கிறேன்.

எனது தவம், எனது தேடல் எனக்கே சொந்தம். இன்று இந்தத் தேடலின் தருணத்தில் நீங்களும் நானுமாக. தேடலில் ஏதும் அகப்பட்டதோ அவஸ்தைப்பட்டதோ நானறியேன். உங்களுக்கும் எனக்குமிடையில் காலத்தின் பட்டுத்திரை விழுந்து ஜொலிக்கிறது. மீண்டுமொரு தளத்தில் மீண்டுமொரு தேடலில் நாம் இணைவோம்.

☐ அக்டோபர் 24, 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாப்பாவின் பூனை

1970ம் ஆண்டு இடமாற்றம் பெற்று திருக்கோணமடு அரசினர் கால்நடைப் பண்ணைக்குச் சென்றேன். அங்கு ஐந்து வருடங்கள் வாழ்ந்தேன். எனது 50 ஆண்டுகால (1968-2018) திருமண வாழ்வின் ஐந்து வகை நிலங்களும் அருட்கொடையாக வாய்த்த திருக்கோணமடுக் கிராமத்தில்தான் நான் வாழ்ந்தேன்.

50 ஆண்டுகளுக்கு 5 ஆண்டுகள் தேறிய அறுவடை. இந்த பூலோகத்தின் சுவர்க்க பூமி, வேறு எதுவும் எனக்கு சொல்லத் தெரியவில்லை. இப்படியான நாட்களில் தான் எனது தகப்பனார் அழகியதொரு பூனையை ஊரில் வளர்த்து வந்தார். எங்களை விடவும் பூனை மீது அவருக்கு அபார பாசம். பூனை இல்லாமல் உண்ணவும் மாட்டார், உறங்கவும் மாட்டார். அந்தப் பூனையும் அவருடன் உண்டு, அவருடன் உறங்கியது.

அவ்வப்போது பூனை உம்மாவின் கோழிக் குஞ்சுகளையும் ருசி பார்க்கத் தொடங்கியது. திடீர் என பூனை பாய்ந்து ஒரு கோழிக் குஞ்சைப் பிடித்து ஓடி மறையும். வாப்பாவின் முகத்தில் புன்னகையும், உம்மாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும்.

> "பூனைக்குச் சோப்பினா, பூனைட புருசன் உப்பு மஞ்சள் தேய்ச்சி பூசுவாரு."

வாப்பா கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டு கட்டிலில் சாய்ந்து விடுவார். சற்று நேரத்திற்கெல்லாம் வாப்பாவின் கமக்கட்டுக்குள் அந்தக் கடுவன் பூனை வந்து படுத்துக் கொள்ளும்.

திருக்கோணமடுவிலிருந்து நான் ஊரிற்கு வந்ததும் உம்மா எனது காதுக்குள் குசு குசுத்தார். "மகன் நாளைக்கு திருக்கோணமடுவுக்கு போககொள பூனையர எப்படியும் கொண்டு போய் சேர்த்துடனும்" உம்மாவும் நானும் காரியத்தில் இறங்கினோம். பூனையர் கோச்சிலும், காரிலும், டிரக்டரிலும் ஆக 45 கிலோமீற்றர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணித்து திருக்கோணமடுவை அடைந்தார். உம்மாவிற்கு இனி இல்லை என்ற சந்தோஷம்.

பூனையை நாங்கள் கடத்தி 40 நாள் போனது. திடீர் என்று எனக்கு ஒருநாள் ஒரு போஸ்ட்கார்ட் வந்தது. எனது தங்கை பௌசியா அனுப்பியிருந்தார்.

"அன்புள்ள காக்கா! வாப்பாட பூனை ஒரு ஆபத்தும் இல்லாம ஊட்ட வந்துட்டு. வாப்பாக்கு இனி இல்ல என்ட சந்தோஷம். பிரசரும் குறஞ்சிட்டு. வாப்பா பூனைக்கு சவுக்காரம் போட்டு கழுவுற அழகே அழகுதான்."

73 வயதில் நானும் ஒரு பூனையை வளர்ப்பதற்கான ஆயத்தங்களை செய்து கொண்டிருக்கிறேன். அன்பர்களே! பூனைகள் வாழட்டும்...!

டிசம்பர் 20, 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடைக்கோ காட்சிகள்

சிலருக்கு பட்டம் வலு சோக்காகப் பொருந்திவிடும். அந்த வகையில், இரண்டு வருடங்களுக்கு முதல் எனக்கு ஒரு ஏழு பக்க மொட்டைக் கடிதம் மூலம் இந்தப் பட்டம் கிட்டியது. தமிழ் இலக்கிய உலகின் ஏராளம் பட்டங்களுக்குச் சொந்தமான எனது சொந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஓர் இலக்கிய மாமணியால் இந்தப் பட்டம் எனக்கு வழங்கப்பட்டது. காலங்கடந்தாவது நான் இதற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மட்டக்களப்பு மாவட்டத்திலேயே இந்தக் கால்நடைத் துறை பற்றி கற்றுக் கொள்வதற்காக வெளி மாவட்டத்திற்குச் சென்ற முதலாவது மாணவன் நான்.

என்னுடைய சின்னப் பருவத்திலிருந்து கோழி, ஆடு, மாடு, யானைக் குட்டிகள், பேசும் மைனா என்று உலகம் அவர்களுடனேயே கழிந்தது. எப்பொழுதும் இந்த ஜீவராசிகளை நான் உயர்திணையாகவே ஆதரித்து அபயமளித்து வந்திருக்கிறேன்.

30 வருடங்களுக்கு முன்னரே 10 லிட்டர் பால் தரும் லட்சுமி என்ற பசுவை வீட்டிலேயே வளர்த்து அதிகாலை 5 மணிக்கே பசும்பால் குடித்து விடுவோம் நானும் பிள்ளைகளும். லட்சுமியின் பரம்பரை, கிழக்கு மாகாணத்தின் பல ஊர்களிலும் வாழ்கிறார்கள்.



4ம் திகதி ஊரில் கடும் மழை. எனக்கும் எனது உறவினர் எச்.எம்.எம். ஹனீபாவுக்கும் பாலைநகரில் ஓர் ஆட்டுப் பண்ணை உண்டு. ஆடு மேய்க்கும் சிறுவனுடன் அன்று நானும் ஆடு மேய்க்கச் சென்றேன். வீதியின் இரு மருங்கிலும் நிறைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டாற் சுருங்கி இருந்ததனால், அவற்றில் ஆடுகளை மேய விட்டு காவல் பாக்க இருவர் வேண்டும். அதில் ஒருவனாக நான்கு மணி நேரம் ஆடுகளை மேய்க்கும் சிறுவனானேன்.

இஸ்லாமிய வரலாற்றில் நபிமார்கள், பெரும் தீர்க்கதரிசிகள், அரசர்கள் என்று பலரும் ஆடு மேய்த்திருக்கிறார்கள். ஆடுகள் ஓரிடத்தில் நின்று ஒழுங்காக மேயாது. சிதறிச் சிதறிச் சென்று மேய்வதில்தான் அவைகளுக்குத் திருப்தி. மனித குலமும் அவ்வாறே. சாதி, மதம், இனம், தேசம், கோத்திரம் என்று சிதறுண்டு கிடப்பவர்களை ஒன்று சேர்ப்பதற்காக ஆடுகளின் மூலம் இறைவன் அவர்களுக்குப் பயிற்சியை வழங்கினான்.

□ நவம்பர் 6, 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராணி

1970களில் என்னிடம் ராணி என்றொரு கலப்பினப் பசு இருந்தது. ராணியின் மகனின் பெயர் கண்ணன். மாஜிதாவைத் துரத்தி விளையாடுவதில் கண்ணனுக்கு இனி இல்லையென்ற குஷி.

மாஜிதா வீட்டுக்குள் புகுந்து கதவைப் பூட்டிக் கொண்டாலும், தனது நெற்றியால் கதவை இடித்து இடித்து முட்டும்.

மாலை வேளைகளில் நானும் வாழைச்சேனை விபுலானந்த வீதியில் வாழ்ந்து வரும் என் அன்புக்குரிய ஆசிரியர் தம்பிப்பிள்ளை சேர் அவர்களும் எங்கள் பசுக்களுக்கு புல் வெட்ட வயல் வெளிக்குச் சென்று வருவோம். ஐயா அவர்கள், இன்றும் பசுக்களை வளர்க்கிறார்.

காற்சட்டை டீசேட் சகிதம் பைசிக்கிள் கரியரில் புல் கட்டுடன் ஓட்டமாவடிச் சந்தியில் நாங்கள் பயணிப்பதும் எங்களை ஊரின் பணக்கார மனிதர்கள் பரிதாபமாகப் பார்ப்பதும் வாலாயமான காட்சி.

ராணிக்குப் புல்லும் தவிடு கலந்த புண்ணாக்கும்...


சட்டியை வழித்து வழித்து நக்கி நக்கித் தின்னும் அழகு இன்னும் என் மனக்கண்ணில். நான் கண் கொட்டாமல் பார்த்து ரசிப்பேன்.

எனது சம்பளத்தில் மறு பாதியை ராணி மூலம் கிடைக்கும் பத்து போத்தல் பாலிலிருந்து நான் பெற்றுக் கொள்வேன்.

எனது கிடுகு வேலியில் முப்பது இப்பிலி இப்பிலி மரங்களை நட்டிருந்தேன். நாளாந்தம் ஒவ்வொரு மரத்தையும் வெட்டி ராணிக்கு உணவூட்டுவேன். மாதமுடிவில் முதல் வெட்டிய மரம் மீண்டும் துளிர்த்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்று ஒரு போத்தல் பால் ஐந்து ரூபா. இன்று நூறு ரூபா. பத்து போத்தல் தரும் ஒரு மாட்டுக்கு இன்றைய நிலையில் இரு நூறு ரூபா செலவாகும். தொழில் இல்லையென்று சொல்லும் இளைஞன் வீட்டிற்கொரு மாடு வளர்த்தால் அந்த உழைப்பில் வாழ்வது எவ்வளவு பெருமையானது.

இந்தப் பசுவும் கன்றுகளும் எனது காணிக்கு முன்னாலுள்ள எனது நண்பனுக்குச் சொந்தமானவை.

காய்ந்த புல்லும் பழக்கடைகளில் மிஞ்சும் வாழைப்பழம், அப்பிள் பழம், திராட்சைப் பழம் என்றும் தாயும் மக்களும் சாப்பிட்டு வருகிறார்கள்.

தனது மகளுடன் மாற்றாந்தாய் மகனையும் பாலூட்டி வளர்க்கும் இந்தப் பசுவின் அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்.

☐ ஜூன் 12, 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவரசி

*1987*ல் ராணியை விற்ற கையோடு பொலன்னறுவை அரசினர் கால்நடைப் பண்ணைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று விட்டேன்.

காலையில் 8 மணிக்கு கிளம்பி, 20 கி.மீ. தூரத்தை மூன்று மணித்தியாலங்களில் கடந்து மீண்டும் 11 மணிக்கு காரியாலயத்தை அடைந்து 12 மணிக்கு வீட்டுக்கு வந்து விடுவேன்.

சின்னச் சின்ன எட்டு சிங்களக் கிராமங்கள்.

ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு பசுவை வளர்த்துக் கொண்டிருந்தார்கள்.

வாய்க்கால்களில் பசுக்களை கழுவி வீட்டுக்கு அழைத்துச் செல்லும் காட்சி எனக்குள் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தும். எனது ராணியை அடிக்கடி நினைவுபடுத்தும்.

நாலாம் வாய்க்காலில் பண்டார என்று எனக்கொரு வயசாளி நண்பர். ஒரு சிறிய மண் வீடு. முற்றத்தில் தென்னை, மா, பலா என்று அந்த வீட்டுக்குக் குளிர்ச்சி ஊட்டிக் கொண்டிருக்கும்.

ஒரு பந்தல் போட்டு அதில் வாங்கை அடித்து அதில் பண்டார வெற்றிலைக் குட்டானுடன் இருக்கும் காட்சியை இப்பொழுதும் எண்ணிப் பார்க்கிறேன்.

ஆதிமூலத்தின் கோட்டோவியம் மனத்தில் நெளிகிறது.


பண்டாரவின் இரண்டு மக்களும் இராணுவத்தில் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் சண்டையில் இருந்த காலம்.

பண்டாரவின் முற்றத்தில் பசுவும் கன்றும். அந்தக் கன்றின் அழகு சொல்லி மாளாது. ஒவ்வொரு நாளும் அந்தக் கன்றைத் தடவிக் கொடுத்து விட்டே அந்த வழியால் நான் செல்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் திடீரென்று பண்டார உங்களுக்கு அந்தக் கன்றுக் குட்டியைத் தரவா என்று கேட்டார். நாகு கன்று, பேரழகியும் கூட.



500 ரூபா காசைக் கொடுத்து விட்டு பத்து மாதக் கன்றை நான் வீட்டுக்கு சாய்த்து வந்து விட்டேன்.

ராணிக்கு பதிலாக இளவரசி.

தலைக் கன்றிலேயே ஐந்து லிட்டர் பால் கறந்து விடுவேன்.

பொலன்னறுவை முஸ்லிம் கொலனியில் வாடகை வீட்டில் நான் வாழ்ந்தேன். அந்தக் கிராமத்தைச் சுற்றி இளவரசி டயானா வலம் வரும்.

மாலை வகுப்புக்கு சிங்களம் படிக்கப் போகும் மாஜிதா, ஒவ்வொரு நாளும் இளவரசியோடு வீட்டுக்கு வருவாள். அல்லது இளவரசி மாஜிதாவைக் கூட்டி வரும்.

1990ம் ஆண்டு மீண்டும் நான் ஊருக்கு வந்த பொழுது, இளவரசியையும் எனக்குத் தெரிந்த ஒரு சிங்கள நண்பருக்குக் கொடுத்து விட்டு வந்தேன்.

அதற்குப் பிறகு நான் இளவரசியைக் காணவேயில்லை.

இளவரசிகள் வாழட்டும்!

□ ஜூன் 21, 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்தான்புல்லில் ஒரு மகன்

2017 ஜனவரி மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை. அதிகாலைத் தொழுகைகளை முடித்துக் கொண்டவனாக பனி படர்ந்த மதீன மாநகரின் எங்கள் நெஞ்சில் நிறைந்த முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் அடக்கஸ்தலத்திற்கு முன்பாக அமர்ந்திருந்து அவர்களின் பெயரில் சோபனங்கள் சொல்லிக் கொண்டிருந்தேன்.

என்னருகே 50 மீற்றர் தூரத்தில் ஒரு இளம் தம்பதியினர் என்னைப் போல் முன்னோக்கி அமர்ந்திருந்தனர். நான் அவர்களின் அருகே சென்றேன். எனக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில் பேச்சைக் கொடுத்துக் கொண்டிருக்கும் போது நான் முதல் நாள் சந்தித்து உரையாடிய திருவனந்தபுரத்தைச் சேர்ந்த இஸ்மாயில் வந்து கொண்டிருந்தார்.

"நீங்கள் எவடம்?"

"நாங்கள் துருக்கி இஸ்தான்புல்"



இஸ்மாயிலுக்கு துருக்கி மொழியும் தண்ணி பட்டபாடு. எனக்கு வசதியாக போய்விட்டது.

முதல்நாள் இரவு எனது உறவினர் மதீனாவின் புறநகர்ப் பகுதியிலுள்ள துருக்கி தேசத்தின் ரெயில்வே நிலையத்தைக் காண்பித்து வந்தார். துருக்கிய சாம்ராஜ்ஜியத்தின் ஆட்சிக்குள் இருந்த 19ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் கட்டப்பட்ட ஒரு கலைக்கூடம்தான் அந்த ரெயில்வே ஸ்டேசன். சுற்றி வளைத்து பாதுகாப்பு வேலி அமைத்திருந்தனர்.

இந்தப் பத்தியைப் பதிவு செய்யும் போது மிகவும் பதற்றப்படுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துருக்கியைச் சேர்ந்த அந்த சகோதரனிடம் நான் உரையாடுகிறேன். நாங்கள் மூவரும் அந்த பட்டுத் தரையில் ஒரு பக்கமாகப் போகிறோம்.

துருக்கிய சாம்ராஜ்ஜியத்தின் அந்த மகோன்னதமான நாட்களை அவன் நினைவுகளில் படர விடுகிறேன். எனது உரையாடலை இஸ்மாயில் மொழிமாற்றம் செய்து கொண்டிருக்கிறார். எங்களை விட்டும் சற்றுத் தொலைவில் எங்களின் உரையாடலைக் கேட்டவராக அந்த சகோதரனின் துணைவியார் அமர்ந்திருக்கிறார். அந்த முகத்தின் தேஜஸும் அழகும் என் நெஞ்சில் இப்பொழுதும் சுடர் விடுகிறது. நான் பேச்சை முடிவுக்கு கொண்டுவருகிறேன்.

"ஷபீக், நோபல் பரிசு பெற்ற உங்கள் தேசத்தவரான ஓரான் பாமுக் இனை தெரியுமா?" எனக் கேட்டேன். அவரின் புகழ் பெற்ற நாவல்களின் பெயர்களை எல்லாம் சொல்லி அது தமிழ் மொழியில் மாற்றம் பெற்ற வரலாற்றையும் சொன்னேன். எனது பேச்சை அவர் மிகவும் உன்னிப்பாக கேட்டுக் கொண்டிருந்தார்.

நாங்கள் இருவரும் நிறைய உரையாடினோம். அவற்றைப் பதிவு செய்ய இது களமல்ல.

"ஷபீக், எனது பயணம் ஆரம்பமாகப் போகிறது. இந்தப் புனித பூமியிலிருந்து நான் விடைபெறப் போகிறேன். இஸ்தான்புல்லில் இருந்து மீண்டும் அந்த ரயில் மதீனா நகரத்தை நோக்கி வரும் காட்சி என் கண்களில் மிதக்கிறது. அந்த நாளில் நீங்களும் நானும் இருப்பது நிச்சயமில்லை. நமக்கு விதிக்கப்பட்ட மறுமை நாளில் நானும் நீங்களும் துருக்கியிலிருந்து மதீனாவிற்கு பயணிப்போமாக."

எழுந்த ஷபீக் என்னைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டு மாய்ந்து போனார். 50 மீற்றர் தூரத்தில் ஷபீக்கின் வருகையை அவரின் மனைவி பார்த்துக் கொண்டிருந்தார்.

எனது கரங்களிலிருந்து காம்பிலிருந்து பூ தழுக்கென்று கழன்று விழுவது போல் ஷபீக்கின் கரங்கள் நழுவியது. மனைவியின் அருகே சென்ற ஷபீக் என்னைக் கூவி அழைத்தார்.

"Sir, Oran Famuk Problem Muslim."

☐ ஜூன் 17, 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் எனதினிய தேவராஜும் முப்பது பவுன் நகைகளும்

கடந்த சில மாதங்களாக நண்பன் தேவராஜைக் காண வேண்டுமென்று மனது துடித்தது. நேற்று மாலை அவனை சந்திக்க வந்தாறுமூலைக்கு சென்றேன்.

நேற்றுப் போலிருக்கிறது... 33 வருடங்கள்...

1986 ஜனவரி 1ம் திகதி இந்த மனிதனை பொலன்னறுவை அரசினர் கால்நடைகள் அபிவிருத்திப் பண்ணையில் சந்திக்கிறேன். அவனுக்கு அது முதல் நியமனம். அந்தப் பாரிய பண்ணையில் நாங்கள் இருவரும் சிறுபான்மை இனத்தவர்.

தேவராஜ் பார்த்த மாத்திரத்திலேயே அடித்து வீழ்த்தி விடும் உருவம், கண்களைக் கவரும் ஆணழகன். அவனுடைய கம்பீரமும், அட்டகாசமான சிரிப்பும் என்னை அவன்பால் ஈர்த்த ஆளுமைகளாகும்.

சந்திரிக்கா அம்மையாரின் ஆட்சியில் அமைச்சராக இருந்த பெர்னான்டோ பிள்ளையோடு கண்ணி வெடியில் காலமான இலங்கையின் குறுந்தோட்ட ஓட்ட வீரரும், எனது பயிற்றுவிப்பாளருமான லக்ஸ்மன் டி அல்விஸ் ஐ மீண்டும் பார்த்த ஞாபகத்தை எனக்கு தேவராஜ் தரிசனமாக வழங்கினான்.

தேவராஜ் சம்பூரைப் பிறப்பிடமாகக் கொண்டவன். தற்போது வந்தாறுமூலையில் மனைவி, மக்கள், பேரப் பிள்ளைகளோடு வாழ்கிறான்.


எல்லா தமிழ் இளைஞர்களையும் போல அவனும் ஔல் பரீட்சையில் சித்தியடைந்த கையோடு தமது இனத்தின் விடுதலைக்காக ஈரோஸ் இயக்கத்தில் தனது 17 வயதில் இணைந்தான்.

ஒரு வருடத்தின் பின்னர் சம்பூரில் இடம்பெற்ற சுற்றிவளைப்பில் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டு இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்கள் பூசாவிலிருந்து விடுதலை பெற்றான்.



தேவராஜ் ஓர் சிறந்த ஆடுகள ஆட்டக்காரன். கரப்பந்தாட்டம், கால்பந்தாட்டம். அவனுடைய கரப்பந்தாட்டம் அட்டகாசமாக இருக்கும். அந்த உயரமும் அவனுடைய உறுதியான நீண்ட கரங்களும் எதிரணியினரை அச்சமூட்டி எச்சரிக்கும். திடீரென்று ஒரு டேஷ் இடிபோல இறங்கி நிலைகுலையச் செய்யும் நான் தூரத்தே நின்று அப்படிப்போடு என்று உரத்த குரலில் ஆர்ப்பரிப்பேன். அதுவொரு பொன்மாலைப் பொழுது தேவராஜ் கமக்காரன் என்ற வார்த்தையின் அழகிய வடிவம். அவனுடைய வயலை விதைப்பதும் உரமிடுவதும் கிருமினாஷினி தெளிப்பதும். அனைத்துக் கருமங்களும் அவன் கையாலேயே நிறைவேறும். அவன் பிறந்த மண்ணின் மகிமை அவனுடலிலும் உதிரத்திலும் உறைந்து கிடந்தது. அது சம்பூர் மண்.

அவனைப் பற்றி எழுத நிறைய உண்டு. ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் பதிவு செய்கிறேன்.

1990, மூன்றாவது ஈழப் போரின் உச்சகட்டம். காத்தான்குடியிலும், ஏறாவூரிலும் பள்ளிவாசல்களில் முஸ்லிம்கள் படுகொலை. முஸ்லிம் கிராமங்களுக்குள் எந்த தமிழரும் பிரவேசிப்பதில்லை. இப்படிப்பட்ட ஒரு நாளில் ஊரெல்லாம் அடங்கிக் கிடந்த இரவு வேளையில் எனது வீட்டின் கேற்றின் கதவுகளில் சிறுசிறு தட்டல்கள். உள்ளே வாசித்துக் கொண்டிருந்த நான் மெதுவாக ஜன்னலைத் திறந்து பார்க்கிறேன். எனது மதில் சுவருக்கு மேலால் தேவராஜின் முகம். அந்த இருளிலும் அவனை நான் அடையாளம் கண்டேன். அவசர அவசரமாக கேற்றைத் திறந்தேன். அங்கே அவனுடைய மனைவியும், அழகிய இரண்டு வயதுப் பெண் குழந்தையும் ஒரே பதற்றத்தில் இருந்தார்கள்.

உள்ளே அவர்களை அழைத்த எனக்கு வியர்த்துக் கொட்டியது. தேவராஜ் என்ன? என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மச்சான் இராணுவம் ஊருக்குள்ள நுழையுது. (கிண்ணையடி) என்னைக் கண்டால் என் கதி அதோதான்." அந்த இக்கட்டிலும் கடகடவென்று சிரித்தவன் இந்தக் கூடையைப் பிடி மச்சான் என்றான். நான் கூடையைக் கொண்டுபோய் கட்டிலுக்கு அடியில் போட்டு விட்டேன். என்ன ஏது என்று பார்க்கவில்லை, அவனும் அது பற்றி சொல்லவில்லை. அப்படியொரு பயங்கர சூழல் அங்கே குடிகொண்டிந்தது. மெதுவாக அவர்களைத் தூங்க வைத்து விட்டு விடிய விடிய நான் காவல் காத்தேன். அதிகாலை 5 மணிக்கு அரவம் இல்லாமல் அவர்களை எழுப்பிய போது கலங்கிய முகத்துடன் எனது மனைவி தேநீரோடும் பழங்களோடும் வந்தாள்.

தேவராஜும் மனைவி, குழந்தையுடன் தனது மோட்டார் சைக்கிளில் என் பின்னால் வர நான் அவர்களை பொலிஸ் நிலைய சந்தி வரையிலும் அழைத்துச் சென்று இந்துக் கல்லூரியில் தொடங்கப்பட்டுள்ள அகதி முகாமிற்கு வழிகாட்டி விட்டு வீட்டுக்கு வந்து விட்டேன். ஊரில் யாரும் இந்தக் காட்சியை காணவில்லை.

மூன்று மாதங்களுக்குப் பிறகு தேவராஜை வாழைச்சேனை மக்கள் வங்கியில் சந்தித்த போது "மச்சான் நான் உனட்ட தந்த கூடைய கொண்டருவியா" எனக் கேட்டான். எனக்கு தூக்கி வாரிப் போட்டது. நான் "எந்தக் கூட" என்று கேட்டேன். அவன் அதிர்ச்சியுடன் "மச்சான் அந்த சிவப்பு நிற வயர் கூட" என்று சொன்னான். அவன் முகத்தில் ஒரு பதற்றம் தெரிந்தது. எனக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை.

மூன்று கிலோமீற்றர் தூரத்தினையும் ஐந்து நிமிடத்தில் கடந்து வீட்டுக்கு வந்து கூடையைத் தேடிய போது கோழித் தீன் மற்றும் உர வகைகள் அடுக்கும் வீட்டின் பின்புறத்தின் ஒரு மூலையில் ஒட்டடை தூசியுடன் அந்த கூடை தொங்கிக் கொண்டிருந்தது. கூடையைக் கவிழ்த்துக் கொட்டினேன். ஏராளம் நகைகள் என்னைப் பார்த்து கண்சிமிட்டின. அதிர்ச்சியும், மகிழ்ச்சியும். கிட்டத்தட்ட முப்பது பவுன் நகைகள்.

தேவராஜின் கையில் அந்த அமானிதத்தை கையளித்த போது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

☐ ஜனவரி 01, 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மருத்துவம்" கதை பிறந்தது

1990ம் ஆண்டு இந்திய இராணுவம் எமது பகுதியிலிருந்து விடைபெற்றுக் கொண்டது. புலிகள் மீண்டும் ஆட்சியதிகாரத்திற்குள் வந்தார்கள். இந்தக் காலத்தில்தான் வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலைக்கு ஒரே ஒரு வைத்திய அதிகாரியாக (DMO) சின்னத்தம்பி தட்சணா மூர்த்தி அவர்கள் பதவி வகிக்கிறார்கள். அன்றிலிருந்து இன்று வரை டாக்டர் எனது நண்பர், எங்கள் குடும்ப வைத்தியர்.

1989, 1990களில் வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலைக்கு எதிராக எங்கள் ஊரில் ஒரு கதை காற்றில் அலைகிறது. கதையின் நாயகியான கஸ்ஸா மருத்துவிச்சி இதோ கதை சொல்கிறார்.

"என்னெ தம்பி செய்யிறெ - நாமெ ஆஸிபத்திரிக்கெல்லாம் போவலாமா? மவுத்தாயினாலும் வூட்டோட கிடந்து சாவம்."

"மறுவாலைக்கி நஞ்சூசப் போட்டாலும் போடுவானுகள். ஆரும் ஆஸ்பத்திரிப் பக்கம் போற கதய்யக் கதைக்கப்படாது."

இதே காலகட்டத்தில் இந்தக் கதையை மையமாகக் கொண்டு எங்கள் பகுதியில் கவிஞராக அறியப்பட்ட ஒருவர் வாழைச்சேனை ஆஸ்பத்திரிக்கு எதிராகவும், வைத்திய அதிகாரிக்கு எதிராகவும் ஒரு கதையை... ஒரு இஸ்லாமிய சஞ்சிகையில் எழுதுகிறார். கதையின் சாராம்சம் இதுதான்.

"ஆஸ்பத்திரியில் முஸ்லிம் நோயாளிகளுக்கு நஞ்சூசி போட்டு சாகடிக்கிறார்கள்."

அந்தக் கதைக்கு மறுப்பாகவே நான் "மருத்துவம்" கதையை எழுதுகிறேன்.

இதோ "மருத்துவம்" கதையில் மாவட்ட வைத்தியசாலையின் தாதி கதை சொல்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னயிது சவத்தக் கொண்டு வந்திரிக்கியள்? சோனிகளுக்குப் புத்தியில்லெ..."

மஜீது கூனிக் குறுகினான்.

கங்காணிப் பொம்புள்ளெ ஒரு பாட்டம் திட்டித் தீர்த்துவிட்டு, எம்.ஓ. விடம் போய்ச் சொல்ல - அவர் வந்து பரிசோதித்து...

"யார் கொண்டு வந்தது?"

"நான்தான் சேர்!" மஜீது.


"உங்கெட மனைவிதானெ. வருத்தம் கண்ட கையோட கொண்டு வந்திருக்கலாமெ. எல்லாம் கெட்டுப் போச்சு."

டாக்டரின் முகத்தில் இயலாமையின் தவிப்பு.

"இரண்டு மணிக்குத்தான் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஜீப்பு பொலன்னறுவைக்குப் போனது. நேரகாலத்தோடு வந்திருந்தால் அந்த ஜீப்பில் அனுப்பியிருப்பேன்."

அவர் குரல் தொய்ந்து இழுபட்டது.

மீண்டும் காரில் அவன் மனைவியை பக்குவமாகத் தூக்கி ஏற்றினான். உதவிக்கு அவன் மாமி சுலைஹா ராத்தாவும்.



"இதுக்குத்தான் இஞ்ச வாரல்ல... எல்லானும் புலிகள்."

"வாயப் பொத்திகிட்டு இருக்கனும். எல்லாம் அறிவு கெட்டதுகள்ட கதைய கேட்டு வந்தது."

கார் பறந்து ஆறாம் கட்டை இராணுவ முகாமைத் தாண்டும் வேளை...

மஜீதின் மனைவி செய்னம்பு காலையும் கையையும் போட்டு அடித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவாலையும் இறைக்கத் தொடங்கிட்டு.

கார் புனாணையில் சென்றியில் நிற்க செய்னம்புவின் கண்கள் மேலே சொருகிக் கொண்டன.

வெட்டுண்ட கழுத்து விழுந்ததைப்போல அவள் தாயின் மடியில் கெளிந்தாள்.

"என்ட மகளேய்... எங்களயெல்லாம் உட்டுப்போட்டுப் பெய்த்தியாடிய்..."

ஒவ்வொரு சமாதான காலத்திலும் கிழக்கில் புலிகளின் பாய்ச்சல் முஸ்லிம்களுக்கு எதிராகவும் புலிகளுக்கு எதிரான மாற்று இயக்கங்களுக்கு எதிராகவும் செயற்பட்டது. அந்த நாட்களில் எங்களின் வாழ்வு பெரும் துயரமிக்கது.

இந்தக் கதையில் வருகின்ற டாக்டர் வேறு யாருமில்லை. எனது இனிய நண்பர் சின்னத்தம்பி தட்சணா மூர்த்தி அவர்கள்.

எனது இந்தக் கதையை பேராதனை மருத்துவ பீட மாணவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்ததாகவும் அறிந்தேன்.

இந்தக் கதையில் மரணத்தைத் தழுவும் அந்தச் சகோதரியை இன்றும் என்னால் மறக்க முடியவில்லை.

குழந்தை கிடைப்பதற்காக கற்பப்பையை விரியச் செய்யும் அந்த ஊசியைப் போட்ட டாக்டர் இன்றும் எங்கள் ஊரில் டாக்டராகவே கொண்டாடப்படுகிறார்.

□ ஜூலை 6, 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் பலாவும்

சின்னப் பருவத்திலிருந்தே பலா மரங்களுக்கிடையில் வளர்ந்தவன் நான். எங்கள் வீட்டு வாசலில் பிரமாண்டமான பலா விருட்சம் நின்றது.

பத்து வருடங்களுக்கு முதல் ஒரு நாள், தம்புள்ளை அரசினர் விவசாயப் பண்ணைக்குள் நுழைந்தேன். விதை நிலக்கடலை கொள்வனவு செய்வதற்காகச் சென்றிருந்த நான், அங்கிருந்த அதிகாரியிடம் பண்ணையைச் சுற்றிப் பார்க்கும் ஆசையைத் தெரிவித்தேன்.

எனக்கு நேரெதிரில் இன்னுமொருவர் நின்றிருந்தார். எனது ஆதங்கத்தைப் புரிந்து கொண்டவர் போல, என்னைப் பார்த்துப் புன்னகைத்தார். விவசாயத் துறையில் டிப்ளோமா பட்டம் பெற்ற திரு. விபுல அவர்கள், என்னைப் பண்ணையைக் காட்ட அழைத்துச் சென்றார்.

காலையில் எட்டு மணி தொடக்கம் பத்து மணி வரையிலும் பண்ணையை ஒரு புரட்டுப் புரட்டினோம். அங்கு கல்வி கற்கும் விவசாயப் பாடசாலை மாணவர்களின் விரிவுரையாளர்களில் திரு விபுல அவர்கள் முக்கியமானவர். பட்டறிவும் படிப்பறிவும் மிக்கவர். நானும் அவருக்கு ஈடாக அந்தத் துறையில் உரையாடினேன். கூடவே, என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்தேன்.

ஐம்பது வருடங்களுக்கு முதல் விவசாயப் பாடசாலை மாங்கன்று ஒட்டுவதற்கு மட்டுமே பழகியிருந்த நான், பலாக் கன்று ஒட்டப் பழக வேண்டும் என்ற எனது ஆசையை வெளிக்கிட்டேன்.

உடனே அவர், மறுப்பில்லாமல் அடுத்த வாரமே வாருங்கள் என்று பணித்தார். தொடர்ந்து மூன்று நாட்கள் ஓட்டமாவடியிலிருந்து தம்புள்ளைக்குச் சென்று பொழுதுபடும் நேரத்தில் வீடு திரும்புவேன். பயிற்சியின் போது நிறைய பண்ணையிலிருந்த பழங்களையே பசிக்குத் தின்று தீர்த்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிட்டத்தட்ட இருபது பொலிஸ் சாவடியில் ஏறி இறங்கி தம்புள்ளைக்குச் செல்ல வேண்டும். இருந்தாலும் எனது முயற்சியை நான் தளரவிடவில்லை. அவரின் அபாரமான வழிகாட்டலில் நான் பலாக் கன்றுகள் ஒட்டுவதில் பின் நாட்களில் கெட்டிக்காரனானேன்.

நூறு கன்றுகளுக்கு மேல் உருவாக்கி நண்பர்களுக்கெல்லாம் கொடுத்து வந்தேன். இப்பொழுது அந்தக் கன்றுகள் இலங்கையின் பல இடங்களிலும் உள்ளன. சாய்ந்தமருதில் கவிஞர் அனார் வீட்டில் ஒரு மரம் காய்க்கத் தொடங்கியிருக்கிறது. மருதமுனையில் எனது மகன் முறை டாக்டர் எச்.எம்.எம். முஸ்தபா வீட்டில் ஒரு மரம் நன்கு வளர்ந்து காய்க்கும் பருவத்தை எட்டியிருக்கிறது. தெஹிவளையிலும் ஒரு மரம் நிற்கிறது. அருமை நண்பர் உமா வரதராசன் வீட்டிலும் ஒரு மரம் வளர்கிறது.

இதில் விசேஷம் என்னவென்றால், அனார் வீட்டில் நான்கு ஆண்டுகளிலேயே அந்த மரம் காய்ப்பதற்கு வந்து விட்டது. அடிக்கடி பலாவைப் பார்த்து கவிதை பாடுவதினால் அந்த மகிழ்வில் அந்த மரம் காய்க்கத் தொடங்கியதோ நானறியேன்.

□ ஏப்ரல் 29, 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதம் மாமாவும் பலா மரத்தடியும்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பலாவிற்கு கொண்டாட்டம்தான். பலாவில் தங்கும் கிளிகளும், மைனாக்களும், குருவிகளும் வெள்ளாப்பில் இசையொலி கிளப்பி சிறகுகளை "படபட"த்தடித்து ஊரையே எழுப்பிவிட்டு... இரைதேடிப் போகும்.

பொழுது விடிஞ்ச கையோட, ஆதம் மாமா அவர்ர சாணைக்கல், சவரக் கத்தி, விரிப்பு, தண்ணிச் சொம்பு சகிதம் ரெண்டு துண்டு பாயுடன் பலா மரத்தடியில் தஞ்சமாவார்.

பலா மரத்தோட மாமா வாகாகச் சாய்ந்திருப்பார். அவருக்கு முன்னால் தலைமுடியிறக்க, சேவ் எடுக்க என்று எங்கட அல்லசல் ஆம்பளைகள் வரிசையாக அமர்ந்திருப்பார்கள். ஒவ்வொருவராக மாமாக்கு முன்னால் துண்டுப்பாயில் அமர்ந்த வண்ணம் தலையைப் பணித்துக் கொடுப்பார்கள்.

மாமாவின் இடது கைப்பக்கம் சின்னஞ்சிறு மண் பானையில் தண்ணீர்...

ஒரு சுரங்கைத் தண்ணியை அள்ளி — கள்ளிக்காடாக குத்திட்டு நிக்கும் ரோமங்களுக்கிடையில் அவருடைய கைவிரல்கள் பத்தையும் புகுத்தி — தலையைப் பிசைந்து பிசைந்து உருட்டி மயிர்களை மழிப்பதற்கு வளமாக்குவார்.

ஆதம் மாமாவின் கை தல மயிருக்குள் இறங்கிய மறு கணம் - முன்னாலிருப்பவரின் கண்கள் இரண்டும் கிறங்கி தூக்கம் அவரிடம் சரணடையும். சிலர் மாமாவின் மடிக்குள் குப்புற விழுவதுமுண்டு. வளைத்திருப்பவர்கள் அந்த நேரம் பார்த்து கொல்லென்று சிரிப்பார்கள். மாமா தலையில் ஒரு குட்டுப் போட்டு தூக்க கலக்கத்தை விரட்டுவார்.

முடி இறக்கின அண்டைக்கு ஒரு தண்ணி... முடி வெட்டி போட்டு போய் ஒரு தண்ணி... மாமா மனசுக்குள் சபிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தில திரளும் ஊத்தய அவ்வப்போது இடது பக்க தொடைல கிடக்குற தோள் துண்டுல வழிச்சு துடைப்பார்.

தலைமுடி இறக்கிய கையோடு லெப்ப தம்பி பரிசாரியார் காச்சின பொன்னாங்கண்ணி தயிலத்தில் மூன்று சொட்ட உஞ்சந் தலைல விட்டு திரும்பவும் தனது பலம் கொண்ட மட்டும் தலையை உருட்டி உருட்டி மசாஜ் போடுவார். அது ஒரு தனிச் சுகம். டோலக் அடிப்பதிலும் உஸ்தா ஆதம் மாமா பிரசித்தம். மாமாவிற்கு குஷி வந்தால் இளவட்டங்களின் தலையை டோலக்காக நினைத்து காரியம் ஆற்றுவதும் உண்டு.

☐ ஜூன் 28, 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போன பலாப்பழம்

*1976*ம் ஆண்டு கண்டியில் வத்தேகம கால்நடை வைத்தியர் காரியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றேன். அப்பொழுது வத்தேகம நகரம் (வத்துகாமம்) கலகலப்பாக இருந்த நாட்கள். எங்கு பார்த்தாலும் தமிழர் கடைகளும் தமிழ் சினிமாப் பாடல்களும் தோட்டத் தொழிலாளர்களின் உரையாடல்களும் நகரத்தில் நிறைந்து கிடக்கும்.

மடவள பசாரில் நண்பர் கே.எம். வஸீர் ஆசிரியருடைய தாய்மாமன் வீட்டில் தங்கியிருந்தேன். அங்கு எனக்கு ஏராளம் நண்பர்கள். இரவில் விடிய விடிய பாட்டுக் கச்சேரி நிகழும்.


இப்படியான ஒரு நாளில் எனது வாழ்வில் மறக்க முடியாத ஒரு சம்பவம் இடம்பெற்றது. மடவள பசார் மதீனா மகாவித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றிய அன்பு நண்பர் பாறுக் அவர்களோடு மிக நெருக்கமான உறவை வைத்திருந்தேன். பின் நாளில் இவர் மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றிருக்கிறார்.

மதீனா மத்திய கல்லூரியின் தேநீர்ச் சாலையை முக்தார் நானா என்பவர் நடத்திக் கொண்டிருந்தார். அவருடைய தேயிலைப் பானையையும் வடியையும் பார்த்தால் யாரும் அவரிடம் பிளேன்டீ குடிக்கவே மாட்டார்கள். அற்புதமான வாசனை அவருடைய தேநீர்ச்சாலையிலிருந்து கிளம்பும். இருந்தாலும் நானும் ஆசிரியர்களான வஸீர் மற்றும் அதிபர் ஆகியோரும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் பிளேன்டீ குடிக்கப் போவோம்.

முக்தார் நானா தேநீர்ச் சாலையுடன் ஒவ்வொரு வாரமும் ஹூளு கங்கை வாராந்தச் சந்தைக்கும் சென்று வருவார். இவ்வாறு சென்றவர் ஒரு நாள், மிகப் பெரிய வருக்கன் பலாப்பழத்தைச் சுமந்து வந்தார். இரவில் வீட்டுக்குக் கொண்டு செல்ல முடியாத காரணத்தால், கென்டீன் காவலாளியான மாடசாமியிடம் பழத்தைப் பொறுப்புக் கொடுத்து விட்டு வீட்டுக்குச் சென்று விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாடசாமி மடவள பசார் பூரா பிரபலம். நான்கு பேர் சாப்பிடும் சஹனை அவர் தனி மனிதராக இருந்து வழித்துத் துடைத்து வயிற்றுக்குள் அனுப்பி விடுவார்.

விடிந்ததும் வந்த முக்தார் நானா, மாடசாமியிடம் பலாப்பழத்தைக் கேட்க, தனக்குத் தெரியாது என்று சர்வ சாதாரணமாக மாடசாமி சொல்லியிருக்கிறார். விடயம் உடனடியாக அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அதிபராலும் விசாரித்து உண்மையைக் கண்டறிய முடியவில்லை. நான்கு பேர் கொண்ட குழுவொன்றை நியமித்து இன்று மாலையில் விசாரணையைத் தொடர்வதாக அதிபர் உறுதியளித்தார். விசாரணைக் குழுவில் பின்வருவோர் அடங்கியிருந்தனர்.

அதிபர் பாறூக் அவர்கள், எஸ்.எல்.எம். ஹனீபா, கே.எம். வஸீர் ஆசிரியர், எஸ்.ஏ.எஸ். அஸீஸ்.

நான்கு பேரும் மாடசாமியை மாறி மாறி விசாரித்தோம். முடிவில் எங்கள் விசாரணைக்குத் தாக்குப் பிடிக்க முடியாத மாடசாமி இவ்வாறு கூறினார்:

"மணம் பொறுக்க முடியல்ல, சாமி!"

☐ மார்ச் 25, 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கறவைப் பசுக்களும் கன்றுகளும்

*1970*, 75 காலகட்டம் என் வாழ்வின் மறக்க முடியாத பொழுதுகளாகும்.

வெலிகந்தையிலிருந்து வடக்கே 16 மைல் தொலைவில் திருக்கோணமடு கிராமம். அழகான செம்மண் பாதையில் எனது புராதன காலத்து சைக்கிள் வண்டியில் பயணம். பாதையின் இரு மருங்கிலும் அடர்ந்த கானகம். எனக்கு முன்னால், வீதியைக் குறுக்கறுத்து யானைகள், கரடிகள், சிறுத்தைகள், மான்கள் என்று பாய்ந்து செல்லும் காட்சி. அந்த ஜீவராசிகளுடன் நானும் ஒருவனாகப் பயணிப்பேன்.

காலையில் மாட்டுப் பண்ணையைப் பார்ப்பதும், 9 மணிக்குப் பிறகு தூண்டிலில் மீன் பிடிக்கப் போவதும், தேன் வெட்டுவதும் இரவில் வேட்டையாடுவதும், மகாவலி கங்கையில் குளிப்பதும் குசவை வெட்டையில் வேளாண்மை செய்வதுமாக எனது காலம் கழிந்தது. பரவசம் மிகு நாட்கள்.

மகாவலி கங்கைக் கரையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரையிலும் தனியாருக்குச் சொந்தமான மாட்டுப் பண்ணைகள் இருக்கும். குருத்து மணலில் வெள்ளைக் கொக்குகள் போல் பாட்டம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டமாக கறவைப் பசுக்களும் கன்றுகளும். அவைகளின் பெயர்களில் இருநூறுக்கு மேல் எனக்கு ஞாபகம் இருந்தது.

இதோ ஞாபகத்தில் கரையேறும் சில பெயர்கள்:

அஞ்சல, பூச்சி, தேமல், கறுப்பி, கட்டச்சி, ஒத்தக் கொம்பி, கொட்டவாலி, சிங்கி, சாம்பல், மைல, சிவப்பி, வெள்ளச்சி, சிவத்தாள், பொட்டு, பூமால, முடத்தி, நாவல், வழிகாட்டி, நஜீமா, கமலம், குதிரைமால, சின்னாள், அன்னம், செவ்வந்தி, நிறயம், தொப்புள், பண்ணைக்காரி, ராணி, நாகூரு, துரயம், சந்தனம், கறுத்தாள், அரசமால, கோமல், அலங்காரி, வெள்ளயம்மா, சௌந்தரி, பட்டிக்காவல், கூந்தல், செல்லம், நிறயம், கன்னிமால...

☐ அக்டோபர் 21, 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினையும் மூறா எருமைகளும்

*1990*, முஸ்லிம்களின் நடமாட்டம் புலிகளால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்குப் போக முடியாது. கிராமங்களைச் சுற்றி வளைத்து துப்பாக்கிகள் இரவு பகலாக காவல் காத்தன.

இப்படியான ஒரு நாளில்தான், அந்தத் துயரம் நடந்தது.

ஓட்டமாவடியில் உமறுக் காக்காவின் எருமை மாட்டுப் பட்டி பிரபல்யம் மிக்கது. கட்டித் தயிர் தின்ன வேண்டுமென்றால், அவர் பட்டிக்குச் சென்று ஒரு கலன் பாலை வாங்கி வந்து, உறை போட்டால், தயிர் ரெடி. அற்புதமாக இருக்கும்.

உமறுக் காக்காவுக்கு 200க்கு மேல் எருமைகள். அதுவும் இந்திய வம்சமான மூறா எருமைகள். ஒரு எருமையில் சராசரியாக 6 லிற்றர் பால் கறக்கலாம். நிறையுணவு வழங்கினால் 10 லிற்றர் வரையிலும் கிடைக்கும். மிகவும் சாதுவானவை. கண்ட இடத்தில் சுடுநீரைக் கொண்டு அதன் பால் மடியைக் கழுவினால், பால் பொங்கிச் சுரக்கும். அவ்வளவு சாந்தமான மாடுகள். இங்கே என்னோடு படத்திலிருப்பது அந்த இனத்தின் ஆண்.


உமறுக் காக்கா, எருமைகளை காகிதாலையின் தெற்குப் புறமாக உள்ள பெரு நிலத்தில் அடைத்து வந்தார்.

இப்படியான ஒரு நாளில், இரவு மேய்ச்சலுக்குச் சென்ற கறவை எருமைகள் மறுநாள் காலையில் வரவில்லை. நள்ளிரவு நான்கு மணிக்கெல்லாம் கன்றுக் காலையடியில் வந்து வட்டக்களறி இட்டு அசை போட்டுப் படுக்கும் எருமைகள், காலை 10 மணி ஆகியும் வரவில்லை. கன்றுகள் கதறிக் கதறி அழத் தொடங்கின. பெரு வெட்டையில் சூரியனின் வெப்பம் வேறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு மேய்ச்சலுக்குச் சென்ற அத்தனை எருமைகளையும் பொடியன்கள் கடத்தி விட்டார்கள் என்று காற்றில் செய்தி வந்தது.



காகிதாலையில் முகாமிட்டிருந்த கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி பிரிகேடியர் சில்வா அவர்கள் ஸ்தலத்திற்கு விரைந்து வந்தார். செய்தி அறிந்து நானும் அவ்விடத்திற்குச் சென்றேன். என்னால் அந்தக் கொடுமையைப் பார்க்க முடியவில்லை.

நானும் பிரிகேடியரும் கதைத்துக் கொண்டிருந்த பொழுது, மேற்கிலிருந்து பெரும் கனைப்போடு எருமைகள் சில, புழுதி கிளம்ப கன்றுக் காலையை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தன. ஐம்பதுக்கு மேற்பட்ட கன்றுகள், நாலைந்து எருமைகளையும் முட்டி முட்டி மோதின. எருமைகளின் கழுத்திலிருந்து பீறிட்ட இரத்தம் வயிற்றின் கீழ்ப் பாகத்தால் ஓடி மடி வழியே வந்து காம்புகளில் இரத்தமும் பாலுமாக கன்றுகள் பருகத் தொடங்கின.

பெரும் கயிறு கொண்டு, கட்டிப் போட்ட எருமைகள் தங்களின் கன்றுகளை நினைத்து பாசக் கயிறை அறுத்துக் கொண்டு பதறியடித்துக் கொண்டு நாலு கால் பாய்ச்சலில் வந்திருந்தன. பால் கொடுத்த சிறிது நேரத்திற்கெல்லாம் எருமைகளில் சில வெட்ட வெளியிலேயே குண்டடி பட்ட மான் போல் வீழ்ந்து மடிந்தன. மீதி எருமைகள் வரவேயில்லை. நூற்றுக்கு மேல் எருமைகள். ஐம்பது கன்றுகள் அளவில் தாயை இழந்து தவித்துக் கிடந்தன.

அந்த நிலம் இரத்தக் கறை படிந்த போர் நிலமாக இன்னும் என் மனத்தில். என்னால் அந்தக் கொடுமையை மறக்க முடியவில்லை நண்பர்களே!

□ மே 30, 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினையும் இறைச்சிக் கோழிக் குஞ்சும் (புரொய்லர்)

மதிப்புமிகு சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக்காலம்.

சமாதான விருட்சம் முறிந்து விழ, சண்டை தொடங்கிய நாட்கள். பொலன்னறுவையுடன் ரயில் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டது.

வாரத்தில் இரண்டு நாட்கள் கொழும்பிலிருந்து புரொய்லர் கோழிக் குஞ்சுகள் ரயிலில் வரும். நாளை வரும் கோழிக் குஞ்சுகளை பத்திரமாக எடுத்துக் கொள்வதற்காக முதல் நாளே பொலன்னறுவைக்குச் சென்று இரவில் தங்கி காத்தான்குடியிலிருந்து வரும் தம்பி அக்பரின் வாகனத்தில் இடம்பிடித்து கோழிக் குஞ்சு ஊர் வரும்.

சில நாட்களில் முதல் நாள் போக முடியாமல் போகும். பொலன்னறுவைக்கு வந்த கோழிக் குஞ்சுப் பெட்டிகளை அங்குள்ள சிங்கள ஊழியர்கள், கொளுத்தும் வெய்யிலில் இறங்கும் மேடையிலேயே அடுக்கி வைத்திருப்பார்கள். நூற்றுக்கு நாற்பது வீதம் செத்து விடும். பொருட்கள் வைக்கும் களஞ்சிய சாலை இருந்தாலும், கோழிக் குஞ்சுகளை அவர்கள் ஒரு போதும் பாதுகாக்க மாட்டார்கள். அதற்கான ஒரே காரணம், அது தமிழ்ப் பிரதேசங்களுக்குச் செல்லும் கோழிக் குஞ்சுகள். எக்கேடு கெட்டாலும் எமக்கென்ன என்ற மனோபாவம்!

ஒரு தடவை இது பற்றி நான் பொலன்னறுவை புகையிரத நிலைய அதிபரிடம் முறையிட்ட போது, அவர் என்னை ஒரு தற்கொலைக் குண்டுதாரி போல் முறைத்துப் பார்த்தார்.

இந்த நாட்டில் வேரோடிப் போன இனப்பிரச்சினையில் கோழிக் குஞ்சுகளும் சிக்குண்டு செத்து மடிந்த அந்த நாட்களை மறக்க முடியவில்லை.

☐ மே 20, 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தனே வருக!

மடியில் நெருப்பும், முகத்தில் புகையுமாக நாளாந்தம் உலா வரும் சென்னை வாழ் மனிதர்களின் நடுவே, அந்த முகம் மட்டும் எனக்குக் குளிர் தரும் தென்றலாக புத்தனின் புன்னகையை நினைவூட்டி அருகே அழைத்தது.

நேற்றுப் போல் இருக்கிறது. பதினேழு வருடங்கள், தமிழினி 2000 எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஒன்றுகூடலில்...

அங்குதான் நான் எஸ். ராமகிருஷ்ணனை முதன் முதலில் சந்தித்தேன். இன்று போல் ராமகிருஷ்ணனை தமிழிலக்கிய எழுத்துலகம் அறியாத காலம்.

1990களின் ஆரம்பத்திலேயே அவரின் *"தாவரங்களின் உரையாடல்"* சிறுகதைகளைப் படித்திருந்தேன்.

உரையாடலை ஆரம்பிப்பதற்கு அந்தக் கதைகள் போதுமான ஓர்மத்தை எனக்குக் கொடுத்தது.

ஓர் அந்திப் பொழுது, ஜனவரி மாதத்தின் இதமான குளிர், அந்த ஹோட்டலில் படிக்கட்டில் நாங்களிருவரும்...

எனது கதை முடிந்ததும், ராமகிருஷ்ணன், தான் எழுதவிருக்கும் நாவலின் கதையைச் சொல்லத் தொடங்கினார்.

ஆடித் தூறலாக அந்த உரை என்னை வசப்படுத்திற்று.

பாரதி சொன்ன "மந்திரம் போல் வேண்டுமடா சொற்கள்" அவர் அதரங்களிலிருந்து தூவானமாகி...


அவரொரு மந்திரக் கதை சொல்லிதான்.

## புத்தனின் பல்!

தாய்வானிலிருந்து இரண்டு இளைஞர்கள் இலங்கை தேசத்தின் கண்டிக்கு வருகிறார்கள். அங்குதான் காணாமல் போன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புத்தனின் பல் தங்கப் பேழையில் இருக்கிறது என்ற அவர்களின் மூதாதையரின் வாய்வழிக் கதையை நம்பி, இலங்கைக்கு வந்த இளைஞர்கள் அரசனின் படையினரால் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு தண்டனை விதிக்கப்படுகிறது. தலதா மாளிகையில் தவத்திற்கான கோபுர மணியை அசைத்து ஒலியெழுப்பும் கர்மத்திற்குள்ளாகிறார்கள்.

இருபது வயது இளைஞர்கள், எழுபது வயதைக் கடந்த நேரம் தாங்கள் வந்த காரியத்தை நினைவுக்குக் கொண்டு வருகிறார்கள். களவு போன புத்தனின் பல்லை மீண்டும் தாய்வானுக்குக் கொண்டு செல்ல வந்த இளைஞர்கள், தங்கள் நிலையை மீட்டிப் பார்ப்பதே, நாவலின் உள்ளடக்கம்.

அந்தப் பல்லை தாய்வானின் மண்ணில் புதைத்தால்தான் மீண்டும் அங்கே விளைச்சல் அதிகரித்து செல்வச் செழிப்போடு வாழ முடியும் என்ற பெரும் இலட்சியத்தோடு வந்த இளைஞர்களின் கதையை ராமகிருஷ்ணன் சொல்லிக் கொண்டிருந்தார்.

மேற்கே பொழுது மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருந்தது.

இலங்கைக்கு மீண்ட நான், ராமகிருஷ்ணனின் உரையாடலை ஒரு பேட்டியாக தினகரன், அமுது சஞ்சிகையில் பிரசுரித்தேன்.

அதுவே, ராமகிருஷ்ணனின் முதல் நேர்காணலாகவும் இருக்கும் என்று நம்புகிறேன்.

☐ ஜூலை 31, 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சு.ரா.

சுந்தர ராமசாமியின் எழுத்துக்களை என்னுடைய பதினாறாவது வயதிலேயே படித்து விட்டேன். 1960களில் மட்டக்களப்பு வாசிகசாலையின் அறிவிப்புப் பலகையில் அடுத்த மாதம் 1ம் திகதி வெளிவரும் நூல்கள் என அந்தந்த நூல்களின் அட்டைப் படங்களை குண்டூசி மூலம் குத்தித் தொங்க விடுவார்கள்.


அவ்வாறு ஒரு நாள் "புளியமரத்தின் கதை" என்ற அவருடைய நூலின் அட்டைப் படம் காணக் கிடைத்தது. தமிழ் புத்தக ஆலயம் நூலை வெளியிட்டிருந்தது. விலை 5 ரூபாய் மட்டுமே. உடன் நான் 10 சதம் முற்பணம் கட்டி நூலைப் பதிவு செய்திருந்தேன். அன்று தொடக்கம் இன்று வரையிலும் நான் அவரின் வாசகனாக...

வாழ்நாளில் ஒரே ஒரு தடவை அவரைச் சந்தித்து உரையாடினேன். பின்னர் அவரைக் காணவும் கதைத்திருக்கவும் ஆசைப்பட்டேன். அந்த எண்ணம் முளையிலேயே கருகி விட்டது. அதன் பின்னர் அவருடைய குடும்பத்தினருடனான உறவு இன்றும் தொடர்கிறது.

1991ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ம் திகதி சென்னையில் இந்த நூலை வாங்கியிருக்கிறேன். இதை சென்னை இலக்கிய சிந்தனை அமைப்பினர் நூலாக்கம் செய்திருக்கிறார்கள்.

இந்த நூலில் நன்றியுரை கூற வந்த சு.ரா. அவர்கள்

"நீண்ட கட்டுரை எதையும் இன்று வரை எழுதியிராத நான் உடல் நலம் வெகுவாகக் குன்றியிருந்த நிலையில் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த நேரத்தில் முடித்துத் தர முடியாதோ என்ற பதற்றம் ஏற்பட்ட போது, "ஏண்டா ஏற்றுக் கொண்டோம்" என்று இருந்தது. ஆனால் உணவுப் பத்தியத்தோடு பிச்சமூர்த்தி என்ற பத்தியமான, ஆரோக்கியமான சிந்தனை உணவும் சேர்ந்து உடல் நிலையைச் சற்று இதப்படுத்திற்று என்று நினைக்கிறேன்."

இந்த நூலை எழுதுவதற்கு அவர் கைக்கொள்ளும் மொழி வியப்புக்குரியது. தமிழில் ஓர் புதுமைக் கவிஞரைப் பற்றியும் அவரது கவிதை பற்றியும் பெரும் வியத்தலுடன் அவர் பயணிக்கிறார்.

நூலின் 31ம் பக்கம் நமது கவிதை பற்றி இவ்வாறு சொல்கிறார்.

"தமிழில் இன்று கவிதை எழுதும் இளம் கவிஞர் பலருக்கு கவிதை மொழியே இல்லை. கவிதை மொழிக்கான தேடலும் இல்லை. வசனத்திற்குரிய வார்த்தைகளை வசனத்திற்குரிய ஸ்தானங்களில் அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அல்லது தேய்ந்து போன நேற்றைய கவிதை இன்று தன் வரிகளில் கொள்ளும் பிரதிபலிப்பையே தன் ஆக்கம் என மயங்கிக் கொண்டிருக்கிறார்கள். வாழ்க்கையைப் பற்றி இளம் கவிஞனின் "எந்தையும் தாயும்" சொல்லிக் கொண்டிருந்த விஷயங்களைச் சொல்வதற்கான தேவைதான் அவனுக்கும் இருக்கும் என்றால் அவன் கவிதைத் துறைக்கு வராமல் இருப்பது நல்லது. அவனுக்கு எவ்வளவு சாமர்த்தியங்கள் இருந்தாலும் அவன் நேற்றைய விஷயத்தை வைத்து இன்றைய கவிதையை உருவாக்க முடியாது. இன்றைய வாழ்க்கையின் சிக்கலை அவனுக்குப் பார்க்கத் தெரியவில்லை என்றால், இன்றைய வாழ்க்கைக்கும் அவனுக்குமான முரண்பாடுகள் எதுவுமில்லை என்றால், அவனுக்கு நெருக்கடியோ விசனமோ இல்லை என்றால், அவன் நிம்மதியாக இருக்க வேண்டிய பாக்கியசாலி. கவிதையை அவன் மறந்து விடலாம்." சு.ரா.

□ செப்டம்பர் 3, 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தளம் சென்றாலும் புத்தளம் செல்லாதே!

இந்த நாட்டின் எல்லா முஸ்லிம் கிராமங்களிலும் இந்தச் சொலவடை சர்வ சாதாரணமாகப் புழக்கத்திலிருக்கும். 1980களில் அரசியல் பழிவாங்கல் என்ற போர்வையில், புத்தளம் மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றேன். புத்தளத்தில் தெரிந்த ஒரே மனிதர் கவிஞர் ஜவாத் மரைக்கார்தான். என்னுடைய 22 வருட அரச சேவையில் கிட்டத்தட்ட 18 இடங்களுக்கு இடமாற்றம் கிடைத்திருக்கிறது. நானும் வலு சந்தோஷமாகச் சென்றிருக்கிறேன்.

1980களில் ஒரு அரசியல் மேடையில் தம்பி பிரபாகரனுக்கு ஓட்டுப் போட்டாலும் ஐயா பிரேமதாசாவுக்கு ஓட்டுப் போட மாட்டேன் என்று பகிரங்கமாகக் கூறியிருக்கிறேன். பின்னர் இடமாற்றத்திற்குக் கேட்கவா வேண்டும். 1990களில் என்னுடைய 40 வயதில் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டேன்.

புத்தளத்திற்குச் சென்ற போது, ஒரு நாள் நானும் ஜவாத் மரைக்காரும் அவருடைய பிறந்த பூமியான நுரைச்சோலைக்குச் சென்றோம். அவ்வப்போது நுரைச்சோலைக்குச் சென்று வருவது எங்களுக்குச் சிறந்த பொழுதுபோக்காகவும் இருந்தது. ஜவாத் மரைக்காரின் வீட்டுக்கு முன்னால் ஒரு சிறிய பள்ளிவாசல். பள்ளிவாசலுக்கு முன்னால் ஒரு கொட்டுக் கிணறு. பக்கத்தில் நாகை மரம். அந்தத் தண்ணீரில் அள்ளி முகம் கை கால் கழுவினால் ஜில்லென்று இருக்கும். புத்தளத்தில் உப்புத் தண்ணீர். நுரைச்சோலையில் அமிர்தமான தண்ணீர்.

பள்ளிவாசலுக்குப் பக்கத்தில்தான் ஊரில் பூனை மரைக்கார் என்று பெயர் பெற்ற நெய்னா மரைக்காரின் தோட்டம். நெய்னா மரைக்கார் கொழும்பு ஸாஹிராவில் கல்வி கற்றவர். மு. நல்லதம்பிப் புலவரின் மாணாக்கர். தமிழிலும் மிகவும் அக்கறை கொண்டவர். ஒரு நாள் எனக்கும் ஜவாத் மரைக்காருக்கும் அவர் கையால் சமைத்து உணவு பரிமாறினார். மறக்க முடியாத கோழிக்கறியும் சோறும். சாப்பிடும் போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தளம் போனாலும் புத்தளம் போகாதே என்ற சொலவடை பற்றிக் கேட்ட நேரம், அவர் இவ்வாறு சொன்னார்:

“எங்களுக்குக் கற்றுத் தந்தவர் நல்லதம்பி வாத்தியார். ஒரு தடவை புத்தளத்திற்கு வந்த பொழுது, எங்களூரின் வசதி படைத்தவர்களிடம் சென்று கடனாகக் காசு கேட்டிருக்கிறார். அவர்கள் மறுக்கவே உடனடியாக அவர் இவ்வாறு பாடினார்:

*“எத்தளம் நீ சென்றிடினும்*
*எவ்வாறு நொந்திடினும்*
*புத்தளம் நீ போகப்*
*புறப்படேல்*
*புத்தளத்தார் பாத்திருக்க உண்பார்*
*பசித்த முகம் பார்த்தருளார்*
*கோத்திரத்திற்குள்ள குணம்”*

இந்தப் பாடல் ஊர் முழுக்கப் பரவியது. ஊரின் முக்கியஸ்தர் பலருக்கும் நமது ஊரைப் பற்றி இவ்வாறு புலவர் பாடிவிட்டாரே என்ற கவலையில் ஒரு நாள் நல்ல தம்பி வாத்தியாரை அழைத்து அவருக்கு பணமுடிப்பை அன்பளிப்புச் செய்திருக்கிறார்கள்.

உடனே புலவர் மாற்றிப் படித்திருக்கிறார்.

*“எத்தளம் நீ சென்றிடினும்*
*எவ்வாறு நொந்திடினும்*
*புத்தளம் நன்றென்று*
*போய் அடைக.*
*புத்தளத்தார் பார்த்திருக்க உண்ணார்*
*பசித்த முகம் பார்த்தருள்வார்*
*கோத்திரத்திற்குள்ள குணம்”*

என்று பாடி, புத்தளத்தின் முக்கியஸ்தர்களை மகிழ்வித்திருக்கிறார். பொற்காசுக்காகப் பாடிய புலவர் வரிசையில் நாம் நல்ல தம்பி ஆசானைச் சேர்க்க முடியாது.

□ ஜூலை 3, 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகானும் மூன்று சிங்கங்களும்

அந்த ஊரில் அவர் மகான். மக்கள் போற்றும் ஆன்மீகவாதி. இறைவனோடு மிகவும் உவப்பான அந்தரங்கம் பூண்டவர். அவரின் நடை, உடை, பேச்சு அனைத்திலும் அமைதியும் அழகும் மோனத்தவமியற்றும்.

பல மைல் தூரமிருந்து இந்த மகானைத் தேடி இன்னொரு பெரும் மனிதர் மகானின் வீட்டுக்கு வருகை தருகிறார்.

"வீட்டில் யாருமில்லையா?"

"யாரைத் தேடி வந்தீங்க?" வீட்டுக்குள்ளிருந்து காட்டமான சத்தம்.

வந்தவர் திடுக்கிட்டுப் போனார்.

"மகானைத் தேடி..." அவர் சொல்லி முடிப்பதற்குள், கதவை வேகமாகத் திறந்த மகானின் மனைவி, "யாரு மகானா? மகான் என்ற பேர்ல கழுதையைத் தேடில்ல வந்திருக்கீங்க!" மகானின் மனைவி அலறிப் புடைத்தார்.

'வீடு பிழைத்துப் போனதோ?' தேடி வந்தவரின் மனம் அசை போட, மறுகணம், "ஊரிலுள்ளவர்களெல்லாம் கழுதையைக் காட்டி மகான் என்றால், நீங்களும் நம்பறதா?" மீண்டும் மகானின் துணைவியார் உரத்த குரலில்.

"அது சரி, அவங்க இப்ப எங்க?" வந்தவர்.

"இந்த வழி நெடுகப் போங்க, ஊரின் தொங்கலில பெரிய காடு வரும். அங்கதான் விறகு கொண்டுவரப் போயிருக்காரு நீங்க தேடி வந்த மகான்"

முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கச் சொன்னார்.

'நமக்குத்தான் இப்படியென்றால், மகானுக்கும் இப்படியா?' தேடி வந்தவரின் மனம் அசை போட, காட்டை நோக்கி நடக்கத் தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணக் களைப்பும் பசியும் தாகமும் ஒன்றையொன்று துரத்தின. காட்டை நெருங்கியதும், மர நிழலில் அமர்ந்து இளைப்பாறிய போது, நாவறண்டு தாகம் எடுத்தது. கண்ணயர்ந்து போன சிறிது நேரத்திற்கெல்லாம் தண்ணீர் குமிழ் விடும் சத்தம் அவர் காதைத் தீண்டுகிறது. திடுக்கிட்டு எழுந்தவரின் எதிரில் சிறிய ஊற்றிலிருந்து தண்ணீர் கொப்பளிக்க, தன் இரு கைகளாலும் அள்ளி அள்ளி தாகந்தீரப் பருகுகிறார்.

தான் தேடி வந்தவர் மகான்தான் என்று அவரின் உள்மனம் சொல்கிறது.

மீண்டும் நடை. கொஞ்சத்தூரம் சென்றிருப்பார். அவரால் நம்ப முடியவில்லை. எதிரே இரண்டு சிங்கங்களைப் பிணைத்து அதன் மேல் பெரும் பெரும் விறகுக் கட்டைகளை ஏற்றி, மகான் வந்து கொண்டிருந்தார். இவரைக் கண்டதும் மகான்,

"வீட்டுக்குப் போனீர்களா?"

"ஆம்" என்றார்.

"என்ன வந்தீங்க?"

"இல்ல, காட்டுச் சிங்கத்தைக் கட்டி விறகு ஏற்றி வரப் பழக்கிட்டீங்க. வீட்டுச் சிங்கத்த...?" வந்தவரின் கேள்வி இடையில்.

"அது அப்படித்தான்" மகான் இரண்டு வரியில் பதில் சொல்கிறார்.

"என்னைத் தேடி என்ன வந்தீங்க?" மீண்டும் மகான்.

மறுகணமே, மகானைத் தேடி வந்த மனிதர் வந்த வழியே பயணத்தைத் தொடங்குகிறார்.

"என்ன எதுவும் பேசாமப் போறீங்க?" மகான்.

"வந்த காரியம் முடிந்தது."

மகானின் முகத்தில் குறுநகை.

☐ மே 5, 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூறாவளிக் கதை - 1

*1978* நவம்பர் 23 வியாழக்கிழமை சூறாவளி அடித்து ஓய்ந்த மறுநாள் மாலை ஒரு நான்கு மணி வாக்கில் நான் எங்கள் வீட்டின் குறுக்கு வீதியில் நின்று கொண்டிருந்தேன். ஓட்டமாவடி ஊரின் எடுபிடி திலகங்களில் ஒருவரான மாப்பிள்ளை சாச்சா அவர்கள் "கடல் பொங்கி கிண்ணியடிக்குப் போய் முறாவடையால வருகுதாம்." என்றார். சாச்சாவின் திடீர் அறிவித்தலில் மீராவோடையும் ஓட்டமாவடியில் ஒரு பாதியும் சுனாமியாக மாறுகிறது.

அதென்னடா? கடல் கிண்ணயடிக்குப் போய், முறாவடையால திரும்புற?

வதந்தியோ வதந்தி.

நான் வாழும் வீதியில் இருபத்து நான்கு அடி நீளமும் நான்கு அடி அகலமுமாக பிளேற் போட்ட வீடு என்னுடையது மாத்திரம்தான். உடனடியாக நான் எனது வீட்டை சுற்றி வாழ்ந்த சிறுவர் சிறுமியரை எல்லாம் அந்த பிளேற்றில் ஏற்றி விட்டேன். பயத்தில் சில சிறுவர் சிறுமியர் எனது பிளேற்றை அபூர்வ சூ பெய்து நனைத்து விட்டார்கள்.

எங்கள் வீட்டிலிருந்து மூன்றாவது வீட்டில் வசித்து வந்த செய்னம்பு பீவி, அழகிய வாழைக்குமரி. பாவாடை சட்டையோடு பதறி ஓடி வந்தாள். "சனூவாட வாப்பா என்னையும் தூக்கி உங்கட பிளேற்றில் ஏத்துங்க" நான் இரண்டு கைகளையும் அகல விரித்து "வாடி தங்கம் வா, உனக்கில்லாத பிளேற்றா?" என்றேன். இந்தக் காட்சியை பார்த்திருந்த பக்கத்து பெண்மணிகளெல்லாம் கொல்லென்று சிரிக்க சூறாவளி போல் ஓடி வந்த செய்னம்பு சுனாமியைப் போல் திரும்பிச் சென்றாள்.

காலையில் உயிர் தப்பினால்... கதை சொல்லுவோம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களே! மரங்களே! உங்களுக்காகப் பிரார்த்திக்கிறேன். தங்கங்களே! செய்னம்பூக்களே!

☐ டிசம்பர் 2, 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூறாவளிக் கதை - 2

எனது உசுக்குட்டிப் பருவத்திலிருந்து இந்த கொரோனா பருவம் வரையும் நான் கண்ட அனர்த்தங்கள் ஏராளம். வெள்ளம், புயல், போர்க்காலம், தமிழ் முஸ்லிம் இனக்கலவரம், தேர்தல் கலவரம், சுனாமி, தனிமனித குரோதங்கள் என்று எதுவாக இருந்தாலும், நான் சார்ந்த சமூகம் வாய் பேசாத ஒரு அப்பிராணி மாட்டையோ அல்லது ஓர் ஆட்டையோ அறுத்துக் கறி பங்கு போடுவதில் ஆனந்தமுறும்.

சூறாவளி அடித்த மறுநாள் வெள்ளிக்கிழமை பகல் பத்து மணி போல் மாவடிச்சேனையிலிருந்து பாரூக் தம்பி (வேங்கையர் முஸ்தபா சாச்சாவின் மூத்த மகன், தற்போதைய மஸ்கட் வியாபாரி) வீட்டுக் கடப்பில் தலையைச் சொறிந்து சொறிந்து நின்றான்.

"என்ன பாருக்கு?" கையில இருந்த பார்சலை நீட்டினான்.

"என்னடா இது?"

"இறைச்சி, காக்கா."

"ஏதடா"

"மாவடிச்சேனைல சனங்களுக்கு கறி இல்லண்டு எங்கட வண்டி மாட்ட அறுத்து வாப்பா எல்லாருக்கும் இறைச்சிய குடுத்துட்டாரு."

"அப்ப ஒத்த வண்டிக்கு காளை மாட்டுக்கு எங்கடா போற?"

என்னுடைய இந்த எழுபத்தைந்து வயதுக்கும் வேங்கையர் முஸ்தபா சாச்சா போன்ற ஒரு இரக்கமுள்ள மனிதனை காண்பதரிது.

சூறாவளி அடித்த அன்று மாவடிச்சேனை மக்களுக்கு முதல் நிவாரணம் சாச்சாவின் ஒத்த வண்டி கரத்தையின் சலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை போட்ட சந்தன வெள்ள நாம்பன்தான். சாச்சா வபாத்தாகிப் போனார். அந்த அற்புத மனிதனை அல்லாஹ் பொருந்திக் கொள்ளட்டும்.

□ டிசம்பர் 3, 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூறாவளிக் கதை - 3

சூறாவளி அடித்து மூன்று நாட்களில் கிழக்கு மாகாணத்திற்கான முதலாவது நிவாரண லொறி ஓட்டமாவடி மூன்றாம் வட்டாரத்திற்குள் பிரவேசிக்கிறது.

கண்டி, மடவளை பசாரைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் (ரஷீன், உபைதுல்லாஹ், ஹைதர் அலி, நௌசாத், பாரூக்) பொருட்களைச் சேகரித்துக் கொண்டு வந்தார்கள். இவர்களில் உபைதுல்லாஹ் ஜே.வி.பி.யினரால் ஷஹீதாக்கப்படுகிறார். ஏனையவர்கள் கடந்த நாற்பது வருடங்களாக இங்கிலாந்திலும், கனடாவிலும் வசிக்கிறார்கள்.

மடவளை பசாரிலிருந்து அந்த லொறி ஓட்டமாவடிக்கு வந்ததும் திரும்பிப் போனதும் உலக அதிசயங்களில் ஒன்று. அரிசி, தேங்காய், சீனி, தேயிலை, புதிய பழைய உடுப்புகள் என்று எனது சிறிய வீடு நிறைந்தது.

இந்தப் பொருட்களை வழங்கப் பொருத்தமான இடமாக வேங்கையர் முஸ்தபா சாச்சா மாடு அறுத்துக் கொடுத்த இடமான மாவடிச்சேனையையே தெரிவு செய்தேன்.

பெரும்பாலானவர்கள் கைம்பெண்கள். இரவோடு இரவாக மிக இரகசியமாக இந்தப் பொருட்கள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. எனது தாயாருக்கும் ஒன்றரைக் கொத்து அரிசியும் தேங்காயும் கொடுத்தேன். ஒரு வாரம் கழித்து உம்மாவைப் பார்க்கச் சென்றேன். உம்மாவை வளைத்து பெண்டுகள் வட்டக்களறி போட்டிருந்தார்கள்.

"உங்களுக்கு என்ன மச்சி, மகனுக்கு லொறில சாமான் வந்தயாமே!"

"ஓ எல்லாருக்கும் போல ஒன்றரை கொத்து அரிசியும் இரண்டு தேங்காயும் தந்தாரு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. உம்மாவே இப்படிச் சொன்னால், ஊரவர்கள் எப்படிச் சொல்லியிருப்பார்கள்! வேதனையோடு வீடு திரும்புகிறேன். அப்பொழுதுதான் பள்ளி விட்டு வீடு திரும்பி வந்த எனது மூத்த மகள் சனூபா என்னிடம் ஓட்டமாய் ஓடிவந்து, “நம்மட இந்தியாகார பரகதுல்லாஹ் நானாட பொஞ்சாதி என்ன கிட்ட கூப்பிட்டு, வாப்பா நீங்க மட்டக்களப்பில் வாங்கிட்டு வந்த நான் போட்டிருக்கிற இந்த கவுன காட்டி இதுவும் கண்டி லொறில வந்த சாமானுக்கயா இருந்த எண்டு கேட்டா.”

நண்பர்களே! சமூக சேவை செய்யப் போனால் உம்மாவும் கதைப்பா, சம்சாரமும் கதைப்பா, சமூகமும் கதைக்கும்.

□ டிசம்பர் 4, 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூறாவளிக்கதை - 4

சூறாவளி அடித்து நான்கைந்து நாட்களில் எனது நண்பர் பி.எச்.ஐ. பத்மநாபன் வீடு தேடி வந்து இரண்டு குளோரின் பெரல்களைக் கையளித்து, "எஸ்.எல்.எம். சூறாவளியில் குடிநீரெல்லாம் மாசடைந்து போய்விட்டது. ஒரு கிணற்றுக்கு நெருப்புப் பெட்டி மூடியளவு குளோரினை நீருடன் கலக்க வேண்டும். கிணறுள்ளவர்களுக்கு இதைப் பகிர்ந்தளியுங்கள்" என பாரிய பொறுப்பை என் தலையில் போட்டார்.

இந்தப் பணிக்கும் நான் உதவியாக வேங்கையர் சாச்சா முஸ்தபாவைதான் அழைத்திருந்தேன். அவரிடம்தான் பெரிய கேரியல் பூட்டிய சைக்கிள் இருந்தது. எங்கள் வீட்டிலிருந்த குளோரின் டின்களை அவரின் சைக்கிளில் ஏற்றி மர்ஹூம் எம்.கே. அஹமட் முஹைதீன் ஹாஜியார் கடைக்கு முன்புறமாக இருந்த, காத்தான்குடி உ.ப. ஹாஜியாரின் விறாந்தையில் டின்னை வைத்தோம். ஹாஜியாரிடமே ஒரு கத்தியை வாங்கி டின்னையும் திறந்தோம்.

ஒரு நெருப்பு பெட்டியளவு கொள்ளக் கூடிய கடதாசிகளை அளவாக வெட்டி, அளவான ஒரு சிறிய அகப்பையையும் வைத்துவிட்டு நான் ஹாஜியாருடன் கதைத்துக் கொண்டும், இடையிடையே அங்கு வருகை தந்த கிணற்றுச் சொந்தக்காரர்களுக்கு பாவனை முறை பற்றி அறிவுரை சொல்லிக் கொண்டும் இருந்தேன்.

கதையின் சுவாரசியத்தால் குளோரின் டின்னை மறந்த நான், திடீரெனத் திரும்பிப் பார்த்தேன். மீராவோடையில் இருந்து உதுமான் தம்பி பத்து சதம் பெறுமதியான சிறிய சீமெந்து பேக்கினுள் அகப்பையால் குளோரினை அள்ளி அள்ளிப் போட்டுக் கொண்டிருந்தான்.

"டேய் இளவு காப்பாய், என்னடா செய்றாய்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நீங்க கூப்பன் மா குடுக்கிங்களாம்டு கதைச்சாங்க, அதான் காக்கா வந்தன், நானும் மா எடுத்துட்டுப் போய் ராவைக்கு ரொட்டி சுடலாம்டு...”

“தங்கம், இது கூப்பன் மா இல்லடா, குளோரின் மா டா” உதுமான் மலங்க மலங்க என்னைப் பரிதாபமாகப் பார்த்தான்.

□ டிசம்பர் 8, 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துறைக்காரருடைய மகன் - 01

இரண்டு தினங்களுக்கு முதல், குடாப்பொக்குன கிராமத்திலிருந்து இந்த நண்பர் என்னை நலம் விசாரிக்கத் தேடி வந்தார்.

1972களில் நான் திருக்கோணமடு முஸ்லிம் கிராமத்தில் வாழ்ந்தேன். அந்த வாழ்க்கையின் இரத்த சாட்சியமாகத் திகழ்பவர் துறக்காருடைய மகன் இப்ராஹீம்.

வாரத்தில் இரண்டு நாட்கள் திருக்கோணமடு கிராமம் ஒரு துறைமுகப் பட்டினமாக மாறும். ஏறாவூர் புகையிலை வாடி லொறிகள் வருவதும் போவதுமாக இருக்கும்.

துறையில் நூற்றுக்கணக்கான வண்டில் மாடுகளை அக்கரைப் படுத்துவதும் இக்கரையிலிருந்து அக்கரைக்குச் சாமான்களைக் கொண்டு போய்ச் சேர்ப்பதும் துறைக்காரருடைய பாரிய பணி.

வெள்ளம் கூடி வரும் நாட்களில் பெரும் அச்சுறுத்தலுக்கு மத்தியில் இந்தத் தொழில் நடைபெறும். அன்று அந்த ஊரின் அடுப்புகளெல்லாம் புகையத் தொடங்கும்.

அத்தகைய ஒரு நாளில்தான் நானும் அந்த ஊருக்குப் போகிறேன். நானும் இப்ராஹீமும் ஒரு நாளைக்கு சராசரியாக 30 தொடக்கம் 40 வரையான விரால் மீன்களை அந்த வேலவை ஓடையில் பிடிப்போம். அத்தனையும் கெண்டையில் பிடிப்போம்.

நான் நான்கு வருடங்கள் அங்கு வாழ்ந்தேன். அவை என் வாழ்நாளில் மறக்க முடியாத மகிமை பொருந்திய நாட்களாகும். பின்னர் இடமாற்றம் பெற்று நான் வத்தேகம சென்ற போது, என்னிடத்திலிருந்த ஆறு ஆடுகளையும் இப்ராஹீம் வசம் கொடுத்து விட்டு வந்தேன்.

அதன் பின் இரண்டு வருடங்கள் கழித்து அந்த ஊருக்குச் சென்றேன். இப்ராஹீமையும் ஆடுகளையும் பார்த்து வருவதுதான் நோக்கமாக இருந்தது. நான் சென்றது ஆடுகள் தம் காலைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏறும் மாலை நேரம். மாலை பட்டுக் கொண்டு வந்தது. இப்ராஹீம் ஆடுகளைச் சாய்த்துக் கொண்டு வந்தார்.

"இப்ராஹீம் யாருடைய ஆடு? இவ்வளவு ஆடு?"

"எல்லாம் உங்கடையும் என்டையும்தான்" என்றார்.

எண்ணிப் பார்த்தால், ஆறு ஆடும் இரண்டு வருடங்களில் இருபத்து நான்கு ஆடுகளாக மாறியிருந்தது.

அவர் நினைத்திருந்தால் ஆறு ஆட்டுக்கும் எனக்கு பன்னிரண்டு ஆடுகளைத் தந்திருக்கலாம்.

அந்த சம்பவத்தை நினைக்கும் போதெல்லாம் எனக்கு சூரதுல் கஹ்ப் என்ற திருக்குர்ஆன் அத்தியாயம் ஞாபகத்திற்கு வரும். அத்தகைய மறக்க முடியாத ஒரு மனிதர் அவர். உண்மையாளி.

அவருக்காக நான் பிரார்த்திக்கிறேன். அவருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளையும் பிரார்த்தனைகளையும் சமர்ப்பிக்கிறேன்.

□ மே 20, 2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைக்காரருடைய மகன் - 02

அப்பொழுது துறைக்காரருடைய மகன் இப்ராஹீமுக்கு வயது பத்து அல்லது பன்னிரண்டு இருக்கும். போட்டிருக்கும் ரீ ஷேர்ட்டுக்கு மேலாக சாரனை இறுக்கக் கட்டிக் கொண்டுதான் அவர் எங்கள் வீட்டுக்கு, நான் வாழ்ந்த குவார்ட்டசுக்கு வருவார்.

வாசலில் பிரம்மாண்டமான புளிய மரம். எனது வீட்டிலிருந்து வெளியே பார்த்தால், 100 மீற்றர் தூரத்தில் யானைகள் மேயும். ஒவ்வொரு நாளும் யானைகள் இரவில் வந்து வீட்டில் தேங்கி நிற்கும் தண்ணீரைக் குடித்து விட்டுப் போய்விடும். அப்படியான உறவு விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் இடையில் நிலவியது. திடீரென்று மான் கூட்டங்களும் எங்கள் வீட்டை ஊடறுத்துச் செல்லும்.

இப்ராஹீம் என்னுடைய இரண்டு மக்களினதும் கூட்டாளியுமாக இருந்தார். காடு, களனி, வாய்க்கால், வரப்பு, குளம், குட்டைகள் என்று என் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு போவார். அவருக்கு நெஞ்சில் நிறைந்த நண்பர்களாக இரண்டு வயது, மூன்று வயது நிரம்பிய எனது பிள்ளைகள் திகழ்ந்தார்கள்.

அவர்களை அழைத்துக் கொண்டு பாலப்பழம் பழுக்கும் சீஸனுக்குப் போய்விடுவார். ஒரு நாள் அப்படிப் போன நேரம், எனது மகன் கையால் பறித்துத் தின்னுவதற்குப் பதிலாக ஆடுகள் போல் அந்தப் பழங்களை மேய்ந்து கொண்டிருந்தான். அதைப் பார்க்க மிகவும் வேடிக்கையாக இருக்க, நானும் இப்ராஹீமும் சிரித்து மகிழ்ந்தோம்.

அங்குதான் நான் விரால் மீன்கள் தங்கள் குஞ்சு குருமான்களைக் கூட்டி வந்து மேய்க்கின்ற அதிசயத்தைப் பார்த்தேன். மகாவலி கங்கையிலிருந்து பிரிந்த கிளையாறுகள் கிழக்கு நோக்கி ஓடும். அவ்வாறான ஒரு மாவிலையாற்றில்தான் இறுதி யுத்தம் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஆற்றின் படுதாவில் பிரமாண்டமான பாளிகள். அந்தப் பாளிகள் நிறைய மீன்கள். அந்தப் பாளிகளுக்குள்ளிருந்து வெளிவரும் பெரிய விரால் மீன் தன் குஞ்சுகளைக் கூட்டி வரும். நெருப்புத் தணல்களாக, தீக்குச்சிகளாக அந்த விரால் குஞ்சுகள் தெரியும். 40, 50 குஞ்சுகள் மேய்ந்து கொண்டிருக்கும்.

சிறிய அசைவொன்று ஏற்பட்டாலும் தாய் மீன் தனது வாயை அகலத் திறக்கும். உடனே விரால் குஞ்சுகள் அனைத்தும் தாயின் வாயினுள் புகுந்து விடும். தாய் அப்படியே குஞ்சுகளை விழுங்கிய மாதிரியே பாளிக்குள் இறங்கி விடும். அந்தக் காட்சி அபூர்வமான காட்சி. காணக் கிடைக்காத காட்சி. எல்லாம் ஒரு நொடியில் நிகழ்ந்து விடும்.

ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதத்தின் நடுப்பகுதியில் இந்தப் பகுதியில் உள்ள குளங்களெல்லாம் வற்றி விடும். மீன்களும் கருவாடுகளுமாக ஊர் நிறையும். திருக்கோணமடு கிராமத்திற்கு கிழக்கே உள்ள வாகரை, கட்டுமுறிவு, பால்ச்சேனை, கதிரவெளி போன்ற ஊர்களிலிருந்து தமிழ்ச் சகோதரர்கள் மீன் பிடிக்க வருவார்கள். வண்டில்களில் தேங்காயை ஏற்றிக் கொண்டு வெள்ளாப்பில் வருவார்கள். அப்படி வருபவர்களில் பொன்னையா மாமாவும் ஒருவர்.

"என்ன மாமா, எங்க இருக்கிறீங்க?" என்று நான் கேட்பேன்.

"தம்பி, விதான பொண்டாட்டி வீட்டிலதான் இருக்கிறேன். அவதான் நமக்குத் தங்கச்சி இங்க. தேங்காய அங்கதான் போட்டிருக்கிறேன். வேண்டுமென்டா, வந்து வாங்கிப் போங்க" என்பார்.

பால்ச்சேனை தேங்காய், பெரிய பெரிய தேங்காய்கள். எந்த அப்பழுக்குமற்ற அழகான தேங்காய்கள். அந்த மனிதர்களும் அப்பழுக்கற்ற மனிதர்களாகத்தான் இருந்தார்கள்.

அவர் தேங்காயை விற்று விட்டு கருவாட்டை வாங்கிக் கொண்டு போவார். அல்லது தேங்காய்க்குப் பதிலாக காசை வாங்குவார். அல்லது நெல் விளையும் காலங்களில் நெல்லை வாங்கிப் போவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசை கொண்டு, குளோரினை வீசி மீன்களைக் கொல்லாதவர்கள் வாழ்ந்த காலம். தாங்கள் வீசுகின்ற வலைகளில் சின்ன மீன்கள் அகப்பட்டால், மெதுவாக அவற்றைக் கழற்றி விடுகின்ற மனிதர்கள். அது வளர்ந்து பெரிதான பின்னர் பிடிப்போம் என்று தொழில் அறங்களைப் பேணிய மனிதர்கள் வாழ்ந்த காலம்.

மான் அகப்பட்டாலோ அல்லது காட்டு மாடு அகப்பட்டாலோ எல்லோருக்கும் அன்று கறி கிடைக்கும். எல்லா வீட்டிலும் கறி மணக்கும். நாம் கேட்காமலேயே நமக்குரிய பங்கு வந்து சேரும்.

அந்த மகாவலிப் படுதாவில், அடர்ந்த மருதஞ் சோலைகளின் உச்சியில் சகலவிதமான பறவைகளும் கூடு கட்டி குடும்பம் நடத்தும். மொட்டைத் தலையன், தாக்கத்தி வாயன், இருவாய்க் குருவி, வெள்ளைக் கொக்கு, நாரைக் கொக்கு, சாம்பல் கொக்கு என்று எண்ணிலடங்காத இனங்கள்.

எனது கடமையிலிருந்து திரும்பியதும் நான் இப்ராஹீமோடு சேர்ந்து இந்தக் காட்சிகளையெல்லாம் கங்கையின் படுதாவில் கண்டு களிப்பேன்.

அங்கு ஆண்களும் பெண்களும் ஒன்றாகவே ஆற்றில் குளிப்பார்கள். அந்தக் காட்சி கேரளத்தை எனக்கு ஞாபகத்தில் கொண்டு வரும். அங்கு எந்த வேற்றுமையும் பாகுபாடும் இருக்காது.

கட்டுமுறிவு, பால்ச்சேனை பகுதியிலிருந்து வருகின்ற பழங்குடி மக்கள் அந்தக் கிராமத்தின் மேற்கே உள்ள காடுகளில் தேன் வெட்டுவார்கள். ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் குடம் குடமாகத் தேன் கொண்டு வருவார்கள். எங்கள் வீட்டுக்கு வந்து எங்களிடம் பெரிய பெரிய வாளிகளையும் குடங்களையும் பெற்றுக் கொண்டு, தேயிலைத் தூளும் சீனியும் எடுத்துக் கொண்டு போவார்கள். மாலையாகியதும் வாளி நிறைந்து குடம் நிறைந்து தேன் வரும். ஒரு போத்தல் தேன் 2.50 சதம் விற்ற காலம் அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று மூடை மூடையாக சீனிகளைக் காட்டுக்குக் கொண்டு போய் அங்கே பதமாகக் காய்ச்சி தேன் அறுவடை செய்கிறார்கள். இந்த சூட்சுமம் எல்லாம் தெரியாத மக்கள் வாழ்ந்த காலம் அது.

அந்த நாட்களில் நானும் வாழ்ந்தேன் என்று பெருமிதமடைகிறேன்.

□ மே 22, 2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைக்காரருடைய மகன் - 03

திருக்கோணமடு வாழ்வை நினைக்கும் போதெல்லாம் என்னுள் ஒரு பரவச நிலை ஏற்பட்டு மகாவலி நதியில் மூழ்கடிக்கப்பட்டு எதிர் நீச்சல் போடுவேன். அது ஒரு இன்பம். எழுபத்தேழு ஆண்டுகால வாழ்வில் அந்த நான்கு ஆண்டுகளும் என்னுள் என்னவெல்லாமோ மாயங்களைச் அள்ளிச் சொரியும்.

துறைக்காரருடைய மகன் இப்றாஹீமை நினைக்கும் போது இவர்களும் வரிசையில் வலம் வந்து கண் சிமிட்டுகிறார்கள். ரபீக்காட உம்மா, சஹாப்தீன்ட உம்மா, யூனுஸ் போடியாரும் பொஞ்சாதி புள்ளயளும், யாக்கூப், மஜீத், முறக்கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த அ. சிவலிங்கம், செனவிரட்ன, நிக்கலஸ் (மிகச் சிறந்த வேட்டைக்காரன்).

நிக்கலசைப் பற்றி கொஞ்சம் சொல்ல வேண்டும். சாராயம் என்ற பெயரில் கண்டநிண்ட எல்லாவற்றையும் குடிப்பார். நான் வாழ்ந்த நான்கு ஆண்டுகளில் ஒரு நாளும் அவரை சுயம்பு நிலையில் நான் காணவில்லை. துவக்கை நிலத்திலிருந்து தூக்கும் போது அவர் கை நடுங்கும். ஆனால் நெஞ்சில் அணைத்துச் சுடும் போது சரியாக மானின் கழுத்தில் குண்டு பாயும்.

இவர்களோடு அப்துர் ரஸ்ஸாக், அப்துல் மஜீத், அஹமது லெவ்வை, அண்மையில் தொண்ணூற்றெட்டு வயதில் காலமாகிய லோயர், பள்ளிவாசலில் இருந்த மருதமுனை லெப்பை, கலந்தர் லெவ்வை, நூர் வட்டவிதானை எல்லோரும் இன்றும் நினைவில் மறக்காமல் குடியிருக்கிறார்கள். வெள்ளம் வரும் காலங்களில் இரவு வேளையில் நானும் இப்றாஹிமும் ரூபசிங்கவும் வேலவை ஓடைக்கு மீன் வெட்டப் போவோம். ஓடையில் அணி வகுத்து மீன்கள் செல்லும். கொக்கிசான் ஒரு பாட்டம். பால் கணையான் மறு பாட்டம். விரால் மீன்கள் ஒரு பாட்டம். சுங்கான் மீன்கள் ஒரு பாட்டம். இடைக்கிடையே பனையான் மீன்கள். நான் மீன்களைப் பார்த்துக் கொண்டே இருப்பேன், என்னை மறந்த நிலையில். இப்றாஹீம் என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதட்டி விடுவான், மீன்களை வெட்டுங்கள் என்று. அடுத்த கணம் மீன்களை வெட்டத் தொடங்குவோம். ஒரு சுறங்கை நேரத்தில் கூடை நிரம்பி விடும்.

இன்னொரு தடவை நானும் இப்றாஹீமும் லோயர் மஃமூது லெவ்வையும் பகல் வெடிலுக்கு போனோம். ஊரிலிருந்து ஒரு மைல் தூரத்தில் ஒரு பெரிய மடுவில் காட்டெருமை ஒன்று கொம்பால் சேற்றை வாரி வாரி அடித்துக் கொண்டு சுகமாகப் படுத்துக் கிடந்தது. அதன் தலை மட்டும் கிழக்குப் பக்கமாகவும் பின் பகுதி மேற்குப் பக்கமாகவும் இருந்தது.

நாங்கள் பின் பகுதியில் நின்று கொண்டிருந்தோம். எங்களை எருமை கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. உடனடியாக நாங்கள் பாலை மரங்களில் மறைந்தோம். அடுத்த கணம் லோயர் மஃமூது லெவ்வையின் துவக்கிலிருந்து வெடில் பறந்தது. இடுப்பெலும்பு உடைந்த எருமை முன்னங்கால்கள் இரண்டையும் சேற்றில் புதைத்து உன்னி எழும்ப எத்தனித்தது. எவ்வளவு முயற்சித்தும் அதனால் எழும்ப முடியவில்லை. அன்று பொழுது படும் வரையிலும் நாங்கள் மாட்டைப் பார்த்துக் கொண்டே இருந்தோம். கிட்ட நெருங்க எங்களுக்குப் பயம். கடைசியாக இன்னுமொரு தோட்டாவை செலவழித்து எருமையின் கதையை முடித்து விட்டோம். பிறகென்ன, அன்றிரவு அந்தக் கிராமத்துக்கே வேட்டைதான் கறி.

விதானையார் பொஞ்சாதியின் இறைச்சிக்கறியின் வாசனை இன்றும் நாசித்துவாரங்களில் மணக்கிறது.

□ மே 25, 2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று வந்தான் ஒரு மனிதன்

"நாளை வருவான் ஒரு மனிதன்" என்று சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் புரட்சிக் கமால் ஒரு பாடலைப் பாடுகிறார். பாடல் முழுமையாக எனது நினைவில் இல்லா விட்டாலும், அந்தப் பாடல் பின்னர் ஸ்ரீமாவோ அம்மையாருடைய ஆட்சிக் காலத்தில், எச்.எம்.பி. முகைதீன் என்ற புகழ் பெற்ற எழுத்தாளரினால் (அவருக்கு சீன மொழியும் தெரியும்) சீன மொழிக்குப் பெயர்க்கப்பட்டு, சீன மக்கள் குடியரசின் மக்கள் தினசரியில் பிரசுரமாகின்றது.

சீன மொழியில் ஒரு தமிழ்க் கவிஞனுடைய கவிதை மொழிபெயர்க்கப்பட்ட வரலாறு இதுதான்.

ஆம், அந்த மனிதன் எப்போது வருவான் என்று நான் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக காத்துக் கொண்டிருந்தேன்.

அந்த மனிதன் இரண்டு தினங்களுக்கு முன்னர் என்னைத் தேடி வந்தான். அவர்தான் முகம்மட் அலீ யாஸிர் அரபாத். இந்தப் பெயருக்குள் இரண்டு மாபெரும் வீரர்களுடைய பெயர்கள் இணைந்திருக்கின்றன. ஒருவர் அகில உலக அதிபார குத்துச் சண்டை வீரர் முகம்மட் அலீ. அடுத்தவர் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தானைத் தளபதி யாஸிர் அரபாத்.

அந்த இளைஞர் என்னை வந்து கண்டதும் என்னைக் கட்டியணைத்து முத்தமிட்டார். ஓர் அரச பரம்பரையைச் சேர்ந்த இளைஞரோ என்று எண்ணுமளவுக்கு அத்தகைய வசீகரமும் அழகும் அவரிடம் வெளிப்பட்டன.

நாங்கள் நேரெதிராக அமர்ந்து கொண்டோம். எங்களுக்கு அருகில் ஏறாவூர் வாசிப்பு வட்ட ஸப்ரியும் அமர்ந்திருந்தார்.

ஏதோ ஒரு கட்டத்தில் நான், உண்மையான வரலாறுகளை கதைகளிலும் கவிதைகளிலும்தான் காண முடிகின்றது என்றேன். பல கதைகளை நானும் எழுதியிருக்கிறேன். இந்தப் பகுதியிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு சிலரும் எழுதியிருக்கிறார்கள். நாங்கள் பெயரை மட்டும்தான் மாற்றிப் போட்டுக் கொண்டிருக்கின்றோமே தவிர வரலாறு எல்லாமே ஒன்றுதான் என்று கதைத்துக் கொண்டு சென்ற நான், வரலாற்றின் பக்கங்களெல்லாம் பொய்யும் புரட்டுமாக இருக்கின்றது என்று சொன்னேன்.

உடனடியாக அந்த இளைஞர், வரலாறு என்னும் அடையா நெடுங்கதவு கொண்ட அந்தப் பெரிய மாளிகைக்குள் என்னை அழைத்துச் செல்லத் தொடங்கி விட்டார்.

இலங்கையை மட்டுமல்ல, இந்தியா, பாரசீகம், இந்தோனேசியா, மலேசியா, சீனா என்று தென்கிழக்காசிய நாடுகள் எல்லாவற்றையும் இரண்டு மணி நேரங்களில் சுற்றிச் சுழன்று வந்தார். இலங்கை பற்றி அவர் சொன்ன வரலாறும் யாழ்ப்பாணத்து முஸ்லிம்கள் பற்றி அவர் சொன்ன வரலாறும் நாம் கேட்ட வரலாறாக இருந்தாலும் உண்மைக்கு மிக நெருக்கமாக அவை இருந்தது கண்டு நான் அசந்து போனேன்.

நாங்கள் வரலாற்றைப் பேசும்போது எங்களுக்கு வாசியாக அந்த வரலாற்றைத் திரிபுபடுத்தி விடுவோம். இந்த இளைஞர் உண்மையை உண்மையாக, தான் அறிந்ததை, அனுபவித்ததைப் புட்டுப்புட்டு வைத்தார்.

யாழ்ப்பாணத்தில் முதன்முதல் சுடுபட்ட உதவி அரசாங்க அதிபர் மக்பூல் அவர்கள் தன்னுடைய உறவினர் என்று கூறினார். தனது சாச்சா அப்போது வவுனியாவில் ஒரு DMO ஆக இருந்தார் என்றும், சாச்சா தனது ஜீப்பில் யாழ்ப்பாணம் சென்று வவுனியாவுக்கு தன்னந்தனியாக மக்பூல் அவர்களது சடலத்தை ஏற்றி வந்த அந்த நிகழ்வை அவர் விவரித்த போது நான் திடுக்கிட்டுப் போனேன். யாழ்ப்பாண முஸ்லிம்களுடைய வரலாற்றை பலரும் பலவிதமாக எழுதியிருந்தாலும் இவரிடமிருந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பட்ட அந்த உண்மைகள் சத்தியத்துக்கு மிக நெருக்கமாக இருந்தன.

முஸ்லிம்களை அங்கிருந்தவர்கள் நிம்மதியாகக் குடியிருக்க விடவில்லை. வெள்ளைக்காரர்களும் அதற்குப் பின்புலத்தில் இருந்தார்கள். எங்கெல்லாம் முஸ்லிம்கள் சென்று குடியேறினார்களோ அங்கெல்லாம் வெள்ளக் காடுதான். மழை பெய்தால் அந்தப் பகுதி முழுவதும் வெள்ளமாகி விடும். இவ்வாறுதான் வவுனியாவில் எனது மாமா VOG ஆக கடமையாற்றிக் கொண்டிருந்த வேளை, யாழ்ப்பாணத்தில் மர்ஹூம் மக்பூல் அவர்கள் புளொட் உறுப்பினரான நெடுமாறனால் சுட்டுக் கொல்லப்பட்டார். எனது மாமா தன்னந்தனியாக, யாழ்ப்பாணம் சென்று மையத்தை மீட்டு வந்தார். முஸ்லிம்களுடைய வாழ்க்கை அங்கு எப்போதும் கேள்விக்குறியாகவே இருந்திருக்கிறது. பின்னர் ஒருநாள் ஒட்டுமொத்தமாக அவர்கள் அங்கிருந்து துரத்தியடிக்கப்பட்டார்கள்.

இன்று எங்களுடைய இளைஞர்கள் அனைத்துப் பரீட்சைகளிலும் சித்தியடைகின்றனர். ஆனால் பாட்டனது பெயரைக் கேட்டால் அவர்களுக்குத் தெரியாது. வரலாறில்லாத சமுதாயம் வாழ்வதற்கு வக்கற்ற சமுதாயம் என்று நாங்கள் அடிக்கடி பேசக் கேட்டிருக்கிறோம். ஆனால் அதைத் கொஞ்சமாகவேனும் தேடி வைக்க வேண்டும். தமது குடும்பத்தின் வரலாறையாவது அறிந்து வைக்கின்ற அளவுக்கு எங்களுடைய உள்ளத்திலே அதற்கான எண்ணமுமில்லை, உழைப்புமில்லை.

நான் உரையாடிக் கொண்டு சென்ற நேரம் எனது மனதில் பேராசிரியர் ஹஸ்புல்லாஹ்வின் ஞாபகம் வந்து சென்றது. ஹஸ்புல்லாஹ்வுக்கு பாசிக்குடா ஹோட்டலில் 40,000 அல்லது 50,000 ரூபா செலவில் தங்குமிடம் ஒழுங்கு செய்தாலும் அவர் எனது வீட்டுக்கு வந்து பாயும் தலையணையுமாக உறங்கிச் செல்வார். நாங்கள் இருவரும் விடிய விடியக் கதைத்திருப்போம்.

அவரின் இடைவெளியை நிரப்பத்தான் இந்த யாஸிர் அரபாத்தின் வருகையோ நானறியேன். உடல் நலமில்லாமல் இருந்தாலும் நேற்று நான் கொஞ்சம் உற்சாகமாக இருந்தேன். அவருடன் இரண்டொரு மணி நேரம் பேசித் தீர்த்தேன்.

□ மார்ச் 27, 2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர் குகதாசன் ஐயா

நேற்றுப் போலிருக்கிறது. கிழக்கில் தமிழ் முஸ்லிம் இனச்சங்காரம் நிகழ்ந்து 32 வருடங்கள்.

அந்த சித்திரை மாதம், எனக்குள் பெரும் வேதனையையும் வலியையும் விளைவித்தது. அந்த வலி இன்னும் தொடர்வதுதான் மிகப் பெரும் கொடுமை.

அந்த ஏப்ரல் மாதத்தில் ஒரு நாள், வாழைச்சேனையில் டாக்டர் குகதாசன் MBBS ஐயா அவர்களின் வீட்டின் முன்னால் பெரும் கும்பலொன்று திரண்டு நிற்பதாகச் செய்தி கிடைத்தது.

ஊரில் அப்பொழுது நான் பெயர் பெற்ற LTTE ஆதரவாளன்.

அந்த இடத்திற்கு உடனே விரைந்தேன். அங்கே, குகதாசன் ஐயா முன் விறாந்தையின் நிலைப்படியில் தவித்துக் கொண்டிருந்தார்.

பெண்கள், பிள்ளைகள் என்று அவரைச் சுற்றி பதட்டத்தோடு நின்றார்கள். அந்தக் காட்சியை விபரிப்பதற்கு வார்த்தைகள் இன்றி முட்டுப்படுகிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைக் கண்டதும் இளைஞர்களில் சிலர் பின்வாங்கினார்கள். இன்னும் சிலர் என் முன்னாலேயே கண்களில் தீப்பிழம்பாக காட்சி தந்தார்கள்.

அவர்களை நோக்கி, நான் இவ்வாறு சொன்னேன்:

"தம்பிமாரே! நீங்கள் ஒவ்வொரு பிள்ளையும் உங்கள் தாயின் வயிற்றில் இருந்த பொழுது, இந்த டாக்டர் ஐயாதான் அந்த வயிற்றைத் தடவி உங்களையும் தடவி நீங்கள் சௌக்கியமாக இருப்பதாக உங்கள் தாயிடம் சொல்லி தைரியமூட்டியவர். என்ன நியாயம், நீங்கள் இன்று இந்த மனிதருக்கு முன்னால் இந்தக் கோலத்தில் நிற்பது? உடனடியாக இந்த இடத்தை விட்டு நீங்கள் விலகிச் செல்ல வேண்டும். இல்லாவிட்டால் நடப்பது வேற விடயம்" என்றேன்.

தெருச் சண்டியர்களுக்கு ஒரே பதில். நாமும் ஒரு தெருச் சண்டியராக மாறுவதுதான்.

வந்தவர்கள் ஒவ்வொருவராக திரும்பிப் போனார்கள்.

நான் உள்ளே போய் அமர்ந்து ஆறுதல் சொல்லி விட்டு வந்தேன். சில நாட்களில் ஐயா அந்த வீட்டைக் காலி செய்து விட்டு திருகோணமலைக்கு அவரது உறவினர் வீட்டுக்குச் சென்று விட்டதாக அறிந்தேன்.

குகதாசன் ஐயா அவர்கள், 1958ல் வாழைச்சேனை அரசினர் ஆரம்ப வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாகக் கடமை புரிந்தவர்.

எனது தகப்பனாரின் நண்பர். பின்னாளில் எனக்கும் நண்பர். எனது மனைவி கருவுற்ற போது, அதிக அக்கறையும் அன்பும் காட்டியவர்.

1957ம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம் அமுலுக்கு வந்ததும் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறி, வாழைச்சேனை மர்ஹூம் ரி.எல்.ரி. ஹாஜியாருடைய வீட்டில் தனியார் மருத்துவமனை நடத்தியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்குடாத் தொகுதியின் முதலாவது தனியார் மருத்துவமனையும் இதுவே.

மருந்துக்காக ஒரு ரூபா ஐம்பது சதம் அல்லது இரண்டு ரூபா. இதுதான் அவரது ரேட்.

வைத்தியத் துறையை தெய்வ பணியாக முன்னெடுத்துச் சென்றவர்.

இத்தனைக்கும் ஐயா சாயி பக்தர்.

பின்னாளில் வந்தாறுமூலை பல்கலைக்கழகத்திலும் ஒரு வருகை தரு விரிவுரையாளராகப் பணி புரிந்தார்.

மேலே என்னுடன் இருப்பவர், அவருடைய பேரன் வைத்திய கலாநிதி, கேசிகன் சயலொளிபவன். (தற்போது சிங்கப்பூரில் வாழ்கிறார்.) அடுத்தவர் அருளினியன்.

நேற்று அருளினியனின் கேரள டயறீஸ் நூல் வெளியீட்டு விழா இடம்பெற்றது.

இங்குதான், டாக்டர் குகதாசனின் பேரப்பிள்ளைகளை நான் சந்தித்தேன்.

இந்த சந்தர்ப்பத்தை எனக்கு வழங்கிய அருளினியனுக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

☐ செப்டம்பர் 18, 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்ரஃபைக் கண்டேன்!

1969களின் நடுப்பகுதி, அக்கரைப்பற்று பீச் ரோட்டில் எனது உறவினர் வீட்டில் தங்கியிருந்த நாட்கள். எனக்கு அண்மையில் மர்ஹூம் அ.ச. அப்துஸ்ஸமதும் வாழ்ந்து கொண்டிருந்தார். மாலைப்பொழுது, பெரும் மகிழ்ச்சியாகக் கழிந்த நாள்கள்.

அப்படியொரு நாளில்தான், அருமை நண்பர் மர்ஹூம் எம்.எச். எம். அஷ்ரஃப் அவர்களைச் சந்திக்கிறேன். எனது உறவு முறை ராத்தாவின் வீட்டில் சாப்பு அறையில் தூங்கிக் கொண்டிருந்த போது, மருமகன் யஹ்யா (தற்பொழுது ஆசிரியராக இருக்கிறார்), "மாமா! உங்களைத் தேடி யாரோ வந்திருக்கிறார்கள்" என்றார். வெளியில் வந்து பார்க்கிறேன். மூன்று இளைஞர்கள் இருக்கிறார்கள். ஒருவர் சிராஜ் மஷ்ஹூருடைய தகப்பனார் மசூத் மௌலவி அவர்கள். மற்றவர் சித்தீக் எனும் நண்பர். இன்னுமொருவர் அந்த நாட்களில் சின்னப் பள்ளிவாயல் முஅத்தினாராக இருந்தவரின் மகன். இவர்களுடன் அபூ தாஹிரும் வந்த ஞாபகம் எனக்குண்டு.

அஷ்ரஃப் ரொம்ப அழகான இளைஞனாகத் தோற்றம் தந்தார். என்னைக் கண்டதும், "காக்கா! நான்தான் எம்.எச்.எம். அஷ்ரஃப். அவ்வப்போது கவிதைகள் எழுதுவேன். உங்களிடம் இந்த நூல்களைக் கொடுத்து விடுமாறு எனது தமிழாசிரியர் சண்முகம் சிவலிங்கம் தந்தார்".

அவர் கதைத்து முடிவதற்கு முதல், "போன வாரம் *வீரகேசரியில்* மூதூர் இக்பால் சனசமூக நிலையம் நடத்திய கவிதைப் போட்டியில் உங்களுக்குத் தங்கப் பதக்கம் கிடைத்த கவிதையைப் படித்தேன். நல்ல கவிதை. தொடர்ந்து எழுதுங்கள்" என்று அவரை உற்சாகப்படுத்துகிறேன்.

மீண்டும் நான், இப்பொழுது என்ன செய்கிறீர்கள் என்று கேட்கிறேன். "ஏ.எல். பரீட்சை எழுதிவிட்டேன். முடிவைப் பொறுத்து சட்டக் கல்லூரிக்குச் செல்லும் எண்ணமுண்டு" என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அத்தோடு எங்கள் பேச்சு முடிவுக்கு வருகிறது. அனைவரும் அக்கரைப்பற்று பசாருக்குச் சென்று பிளேன்டீ குடித்து விட்டு, அஷ்ரஃப் அவர்களை கல்முனை பஸ்ஸில் ஏற்றி விட்டு நான் தங்கும் அறைக்கு வருகிறேன்.

அன்று, அவருடைய மாணவப் பருவத்தில் தொடங்கிய நட்பு, இந்த நாட்டு முஸ்லிம்களின் உன்னத தலைவனான அந்தஸ்தை எட்டும் வரையிலும் தொடர்ந்து வந்தது. அவரைப் பற்றி எழுதவும் பேசவும் விமர்சிக்கவும் நிறைய விஷயங்கள் உண்டு.

☐ செப்டம்பர் 16, 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூணாம் நம்பர்

1987 ஜூலை 24 அன்று கிண்ணியாவில் திருகோணமலை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் முன்னாள் அமைப்பாளர் எம்.எம். மஃறூப் அவர்களின் தாய் வீட்டின் மொட்டை மாடியில் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் நடுநாயகமாக வீற்றிருக்கிறார்.

கிழக்கே உதித்த சந்திரன் தலைவரின் தலையில் பட்டு பால் வார்க்கும் காட்சி அற்புதமாக என் கண்களுக்குத் தெரிகிறது. தலைவரைச் சுற்றி நான், ஹிஸ்புல்லாஹ், மர்ஹூம் மில்க்போட் ஹனீபா, சீனிவாப்பா, காசிம் மௌலவி, இறமுளார், மன்சூர் பிஏ, றூபி முகைதீன், கவிஞர் காத்தான்குடி நஜீர், கல்குடா தொகுதி முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுவின் தலைவர் எம். எல்.எம். சுபைர், முகைதீன் அப்துல் காதர் என்று அரசியல் சதஸ் கூடிற்று.

அஷ்ரப் அவர்கள் அரசியல் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். திருகோணமலைக்குச் சென்ற முதல் முஸ்லிம் காங்கிரஸ் குழுவும் இதே. அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த அஷ்ரப் அவர்களின் இரத்த பந்தங்களோ அல்லது இதயக்கனிகளில் ஒருவரோ அன்று அவர்களுடன் சும்மாவாவது வரவில்லை.

தலைவர் அஷ்ரப் அவர்கள் இந்திய அரசியல் வானில் பெரும் சக்தியாக வர்ணிக்கப்பட்ட ஒரு மாபெரும் ஆளுமையைப் பற்றிய சுவாரசியமான கதையொன்றை சொல்லிக் கொண்டிருந்தார். (அவரின் பெயரை நான் தவிர்த்திருக்கிறேன்)

1960களில் பாரத தேசத்தின் அந்த அரசியல் மகா புருஷர் அமெரிக்காவைத் திட்டித் தீர்ப்பதில் அலாதி பிரியம் கொண்டவர். சோவியத் ரஷ்யாவின் செல்லப்பிள்ளை. அமெரிக்க-இந்திய நட்புறவுக்கு பெரும் இடைஞ்சலாக இருப்பவர் என்பதைப் புரிந்து கொண்ட அமெரிக்கா, பாரத தேசத்தின் ஆளுமையை அமெரிக்காவின் அரசியல் விருந்தினராக அழைத்திற்று. அவரும் தட்டிக் கழிக்க முடியாத நிலையில் ஏற்றுக் கொண்டார். அமெரிக்காவின் பெரும் ஆடம்பர ஹோட்டல்களில் உபசரிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அற்புத அழகிகள் அவருக்குக் கைடுகளாக... அவர் பாடு பெரும் கொண்டாட்டம்.

அமெரிக்காவிலிருந்து திரும்பிய கொஞ்ச நாட்களுக்கெல்லாம் மீண்டும் அமெரிக்காவைத் திட்டத் தொடங்கினார். ஒரு நாள் அவரின் பெயருக்கு அமெரிக்க வெளிவிவகார அமைச்சிலிருந்து அந்தரங்க முத்திரையோடு ஒரு போட்டோ அல்பம் கடித உறையில் வந்திற்று. அமெரிக்காவின் அத்தனை உபசரிப்புகளும் அங்கு வண்ணப்படங்களாக. கைடுகளும் கண் சிமிட்டினார்களோ. அன்றிலிருந்து அரசியல்வாதி அமெரிக்காவைப் பற்றி கப்சிப்.

கதை முடிந்ததும் அஷ்ரப் அவர்கள் மாற்றுக் கட்சிக்காரர்களை வளைத்துப் பிடிக்க வேண்டுமானால், ஆட்சியாளர்கள் மூன்று காரியங்களை மேற்கொள்வார்கள் என்றார். 1. அதிகளவு பணம் கொடுத்து அவர்களை விலைக்கு வாங்குவது. 2. பணத்துக்கு மசியாதவர்களுக்கு பணத்துடன் கூடிய பாரிய மந்திரிப் பதவியையும் வழங்கி தக்க வைத்துக் கொள்வது. 3. இவை இரண்டிற்கும் அடிபணியாதவர்களுக்கு அரசியலில் இருக்கவே இருக்கிறது மூணாம் நம்பர்!

தலைவர் அவர்கள் மீண்டும் கதையை அந்த இடத்தில் பிரேக் போட்டுவிட்டு எங்கள் அனைவரையும் ஒரு நோட்டமிட்டார். பிறகு அஷ்ரப் அவர்கள் பாரத தேசத்தின் பெருமைக்குரிய மனிதன் என வர்ணிக்கப்பட்டவரை அழகி ஒருத்திதான் அரசியலில் வீழ்த்தினார். உங்களில் யாராவது முஸ்லிம் காங்கிரஸை விட்டும் என்னை விட்டும் மாற்றுக் கட்சிக்குப் போக விரும்பினால், நீங்கள் எதற்காகப் போவீர்கள் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் சதஸ் ஆட்டம் கண்டது. ஒவ்வொருத்தரும் அடுத்தவர் முகங்களையே பார்க்கத் தொடங்கினோம்.

நாங்கள் அனைவரும் சமூகத்திற்காக உயிர் கொடுக்க முன்வந்தவர்கள்?! எங்களைப் பார்த்து தலைவர் இப்படிக் கேட்கிறாரே! என்பது போல் ஒவ்வொருவரின் புருவங்கள் மேலெழுந்தன. மௌனம் நீண்டது. உடனே நான் துரும்பைத் தூக்கிப் போட்டேன்.

"பணம், பதவியை விடவும் அற்புதமான அழகிய மூணாம் நம்பர் ஒன்று கிட்டுமானால், உங்களை விட்டும் கட்சியை விட்டும் நான் போய் விடுவேன்" என்றேன். அரசியல் சதஸ் கலகலத்திற்று.

பின்னாளில் அரசியல் செய்வதற்கு இந்த மூன்று இலக்கங்களுமே பொருந்தி வர வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள நான் நீண்ட நாட்கள் காத்திருக்கவில்லை.

வாழ்க மூணாம் நம்பர்!

□ ஆகஸ்ட் 21, 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்ஹூம் அல்ஹாஜ் டாக்டர் பதியுதீன் மஹ்மூத்

1956ல் அமரர் பண்டாரநாயக்க அவர்களுடன் இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தோற்றத்திற்கு வித்திட்டவர்களில் முன்னணி வீரராகத் திகழ்ந்தவர் இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தின் கண்ணியத்துக்குரிய தலைவர் மர்ஹூம் அல்ஹாஜ் டாக்டர் பதியுதீன் மஹ்மூத்.

எனது அரசியல் வாழ்வில் பதியுதீன் மஹ்மூத் அவர்களுடனான நினைவுகள் ஏராளமுண்டு. இப்பொழுது ஒரு பொறி மட்டும்.

1975ல் மட்டக்களப்பு வாடி வீட்டில் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் அதிகாரியான ராஜன் செல்வநாயகத்தின் அனுசரணையுடன் வரவேற்பு உபசாரமும், விருந்துபசாரமும் இடம் பெற்றது. ஓட்டமாவடியிலிருந்து நானும், நண்பர் உதுமாலெப்பை ஆசிரியரும் கலந்து கொண்டோம். ஏறாவூரிலிருந்து ஜெமீல், MC. முஹம்மது போன்றவர்களும். காத்தான்குடியிலிருந்து ஜவாத், சம்மேளனத் தலைவர் மர்ஹூம் அஹமது லெப்பை, சின்ன லெப்பை, AK. அபூபக்கர் என்று ஏராளம் காத்தான்குடி பிரமுகர்கள். இவர்களில் பலரும் மர்ஹூம்களானார்கள்.

அஸர்த் தொழுகையின் பின்பு வாடி வீட்டின் முன்னாலிருந்த வாகை மரநிழலில் நாங்கள் இளைஞர்கள் பலரும் கதைத்துக் கொண்டிருந்த வேளை, காரிலிருந்து இறங்கியவராக நிந்தவூர் முஸ்தபா எம்பி எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

எங்களைப் பார்த்த அவர், இவ்வாறு சொன்னார்.

"தம்பிமார், நான் இன்டைக்கி SLFPயில் இணைந்து கொள்ளப் போகிறேன். எனது வருகை பதியுதீன் மஹ்மூத் அவர்களுக்கு விருப்பமில்லை. கட்சியில் அவரின் செல்வாக்கு குறைந்து விடும் என்று எண்ணுகிறார். அவ்வாறான சந்தர்ப்பத்தில் நீங்கள் எனக்காக வாதிட வேண்டும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விருந்தும் கூட்டமும் முடியும் தறுவாயில் சபைக்கு முஸ்தபா அவர்களின் வருகை பற்றிய உரையாடல் தொடங்குகிறது. எல்லாவற்றையும் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த அமைச்சர் பதியுதீன் அவர்கள் முஸ்தபாவை நோக்கி இவ்வாறு கூறினார்கள்.

"முஸ்தபா! எல்லாக் கட்சியிலயும் நாங்கள் முஸ்லிம்கள் இருக்க வேண்டும். இப்போதைக்கு நீங்கள் யுஎன்பியிலதான் இருக்க வேண்டும். அது உங்களுக்கும் கிழக்கிலங்கை முஸ்லிம்களுக்கும் சிறப்பாக அமையும்" என்றார்.

உடனே முஸ்தபா எங்களைப் பார்த்து

"தம்பி மார், எப்டி நான் சொன்னது சரியா" என்றார்.

அவர் சொல்லி முடிக்க முன்பு,

"எந்தப் பிரச்சினையுமில்ல, நீங்கள் தாராளாமாக வரலாம். இன்னும் இரண்டு வருஷத்துக்குத்தான் இந்த ஆட்சி இருக்கும்" என்று பதியுதீனுக்கேயுரிய சிங்களத் தமிழில் கூறினார்.

ஸ்ரீமாவோ அரசில் இரண்டு ஆண்டு காலம் உதவி நீதி அமைச்சராக அலங்கரித்த முஸ்தபாவின் அரசியல் வாழ்வு அத்துடன் அஸ்தமனமானது. அதற்குப் பிறகு அவர் போட்டியிட்ட அத்தனை தேர்தல்களிலும் தோல்வியைத் தழுவினார். அவர் பறிகொடுத்த ஐக்கிய தேசியக் கட்சியின் கிழக்கிற்கான ஆட்சியதிகாரம் கல்குடாவின் முறு.தேவநாயகம் அவர்களின் கைக்கு மாறியது. அன்று பதியூதீனின் அறிவுரையை முஸ்தபா கேட்டிருந்தால்...

இந்தப் பத்திக்கு இப்படியொரு தலைப்பு வைத்தால் எப்படியிருக்கும்.

"முஸ்தபாவின் தந்திரமும், பதியுதீனின் தூரநோக்கும்"

□ அக்டோபர் 8, 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வந்தி நீ எங்கே...?

52 வருடங்கள் அவனையோ அவளையோ இலகுவில் மறக்க முடியவில்லை. பகல் 12 மணி இருக்கும் வழமைக்கு மாறாக அன்று அதிக பசி எடுத்தது பொத்துவில் வீதியிலிருந்து அக்கரைப்பற்று குயின்ஸ் ஹோட்டலை நோக்கி என்னுடைய மிதிவண்டி அதறப் பதற பாய்ந்தோடியது. திடீரென நிமிர்ந்து பார்த்தேன் எனக்கு முன்னால் அவன்தான் போய்க்கொண்டிருந்தான். நேராக போய்க்கொண்டிருந்தவன் இடது பக்கமாக திரும்பி கோளாவில் வீதியில் அவனது சைக்கிள் சென்றது. கொஞ்சம் இடது பக்கமாக கூனல் விழுந்த முதுகு. ஆயிரம் பேர் உள்ள கூட்டத்திலும் அவனுடைய பல் வரிசை பளீரென்று அவனை அடையாளம் காட்டித்தந்துவிடும்.

நானும் விடவில்லை வேகமாக சைக்கிளை மிதித்து அவனை இடைமறித்தேன். அவனுடைய முகத்தில் பளீரென்ற தேஜஸ் என்னை அடையாளம் கண்டுகொண்டான். எனக்கு பசி ஒருபக்கம் நான்கைந்து வருடங்களுக்கு பிறகு பிடித்தமான நண்பனை சந்தித்த பரவசம் ஒருபக்கம். என்னை பசி வெற்றி கொள்ளத் துடித்தது. அடி வயிற்றிலே இருந்து எழும்புமே அந்த பசி கொழுந்து விட்டெரியும் காமத்தீயின் பசியை விடவும் கொடியதா இனியதா? நண்பர்களே! நீங்களே தீர்மானியுங்கள்.

அவனைக் கண்ட ஒரு பத்து நிமிடத்திற்குள் ஏழு எட்டு ஆண்டுகளின் வாழ்க்கை சிறு சிறு காட்சிகளாக பட்டும்படாமலும் ஒட்டியும் வெட்டியும் ஒரு நவீன முழுநீள மலையாளத் திரைப்படம் போல் அந்தத் தருணம் குதூகலித்தது.

“எஸ்.எல்.எம் நீ எங்கடா?”

“நான் ஒரு வாரமாக அக்கரைப்பற்றில்தான் புதிதாக தொழில் கிடைத்து வந்திருக்கிறேன்.”

“நீ எங்கடா?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோளாவிலில் ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில் ஒரு ஓலை வீட்டில் வாழ்கிறேன்."

நான் அவனிடம் விடை பெற துடிக்கிறேன் அவனோ என்னை அவன் வீட்டுக்கு அழைத்துப்போக அவாவுகிறான். அவன் வாழ்ந்தது வீடா, ஓலைக்குடிசையா அல்லது சொர்க்கத்தின் ஒரு துண்டு நிலமா! அது நிச்சயம் கவிஞன் வாழும் இல்லம்தான். இவ்வளவும் சொல்லிவிட்டேன் இன்னும் அவன் யாரென்று உங்களுக்குச் சொல்லவில்லை அவன் தான் என் நேசத்திற்குரிய நண்பன் அழகிய கவிதைகளின் சொந்தக்காரன் சி. கனகசூரியம்.

நான் அந்த வீட்டுக்கு போன நேரம் வெளி அடுப்பிலிருந்து சூட மீன் பாலாணம் நாசித்துவாரங்களை நிறைக்கிறது. தொட்டிலுக்குள் சந்தனக்கட்டை போல் ஒரு சிறு குழந்தை வேறு அசைகிறது.

வெண்மணற் பரப்பிய முற்றம், வாசலில் சிறு பந்தல், பந்தலின் இடது புறம் நீர் நிரம்பி சிரட்டையால் மூடிய மண்குடம், சற்றுத்தள்ளி பாலாணத்தின் கமகம வாசம். "கனீபா பிள்ளை பிறந்து ஒரு வாரம்தான்" இன்னும் பெயர் வைக்கவில்லை என்று சொல்கிறான். வாசலில் இருந்த கொட்டுக் கிணற்றில் ஒரு வாளி தண்ணி எடுத்து கைகால்களை அலம்பிவிட்டு தொட்டிலில் இருந்து பிள்ளையை எடுக்கிறேன். குழந்தை என்னைப்பார்த்து புன்னகைத்து... பூரித்து...

"கனகசூரியம் இந்த குழந்தைக்கு பெயர் சூட்டி விட்டியா?"

"இல்லையடா"

"நானொரு பெயர் சூட்டட்டா?"

"தாராளமாக" என்கிறான்.

தாராளமாக தாராளமாக என்று சொல்லி கணவனும் மனைவியும் மகிழ்ச்சியில் ஆரவாரம்.

பார்த்தசாரதி எழுதிய மணிபல்லபம் நாவலில் வருகின்ற செவ்வந்தி அடிகளாரின் பெயரைச்சொல்லி மூன்று தடவைகள் குழந்தையின் காதருகில் செவ்வந்தி என்று அழைக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று கண்ட செவ்வந்தியை அதன் பிறகு 30 ஆண்டுகளுக்குப்பிறகு மீண்டும் ஒட்டமாவடி பிரதேச செயலகத்தில் காண்கிறேன்.

நேற்றிரவு செவ்வந்தியும் கனகசூரியமும் எனது கனவில் வந்து போனார்கள். கனகசூரியத்தின் அதே முத்துப்பல் வரிசை கனவு கலைந்தும் கண்களை விட்டும் நீங்கவில்லை.

செவ்வந்தி நீ எங்கே...?

வலி கொஞ்சம் குறைந்தது போல் இருக்கிறது.

□ ஜூன் 26, 2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர்கள் வந்தார்கள்!

நேற்றுக் காலையில் அவர்கள் எனது இல்லம் தேடி வந்தார்கள். சின்னஞ்சிறிய வீட்டையும் சிதறிக் கிடந்த நூல்களையும் அங்குலம் அங்குலமாக அளந்து பார்த்தார்கள். கடைசியில் அவர்கள் கையில் அழகிய அந்தக் கத்தி அகப்பட்டது. (Butting Knife)

வந்தவர்களில் ஒருவர் அந்தக் கத்தி பற்றி கேட்டார். அவருக்கு எடுத்துரைத்தேன்.

பார்த்துவிட்டு என்னிடம் கையளித்த மறுகணமே மற்றவர், எனது கையிலிருந்த கத்தியை பறிப்பது போல எடுத்துக் கொண்டார்.

சோதனைகள் முடிந்து அவர்கள் எனது காணியை விட்டு கிளம்பும் நேரம் கத்தியை என்னிடம் கையளிக்கவில்லை. எனது வேண்டுகோளின் பேரில் லண்டனில் வாழும் ராம் ராமலிங்கம் அனுப்பி வைத்த அன்பளிப்பு அது.

எனக்கு என்னவோ போல் இருந்தது. உடன் நான் அந்த வீரனின் கைக்குள் மறைந்திருந்த கத்தியைப் பறித்தெடுத்தேன்.

அந்த ஓர்மம் எங்கிருந்து என்னிடம் வந்தது. இதை எதிர்பாராத அவன் சிங்கள மொழியில் என்னவெல்லாமோ திட்டித் தீர்த்தான். முகத்தில் எள்ளும் கொள்ளும்.

முப்பதாண்டு காலப்போரில் இப்படியொரு அனுபவம் எனக்கு கிட்டவில்லை.

எனது மனக்கண்ணில் பிரிகேடியர் சில்வா, கொழும்பு நாவலையைச் சேர்ந்த பிரிகேடியர் விமலதுங்க, கண்டியைச் சேர்ந்த பிரிகேடியர் பூஜாபிடிய, பொலன்னறுவையைச் சேர்ந்த பிரிகேடியர் தேவாலகம அனைவரும் வந்து போனார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவர்கள் இராணுவ வீரர்களாக மட்டுமல்லாது மனிதர்களாகவும் தரிசனம் தந்தவர்கள்.

நமது விதியை நாம் எப்படி மாற்றலாம்? நண்பர்களே!

எனக்குப்புரியவில்லை.

சதத் மண்ட்டோ எழுத மறந்த இந்தக் கதையை எழுதுபவர் யாரோ?

□ மே 22, 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீரா நினைவுகள்

1950களில் எங்கள் மீராவோடை கிராமம் மிகவும் சிறியது. துண்டு துண்டாக நிலங்கள். ஆங்காங்கே குடில்களும் இரண்டறை வீடுகளும். வீடுகள் களிமண்ணாலும் குடில்கள் ஓலைக் கிடுகுகளாலும் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. ஜன்னல்களோ கதவுகளோ இல்லாத குடியிருப்புகள். இன்று போல் அன்று வீட்டைச் சுற்றி மதில்கள் இல்லை. நிழல் தரும் கிளிசீரியா, பூவரசு தடிகளை நட்டு தங்கள் காணிகளுக்கு எல்லை போட்டிருப்பார்கள். விருட்சமாக வளர்ந்த மரங்களின் கிளைகள் குடில்களுக்கும் வீடுகளுக்கும் குளிரூட்டிக் கொண்டிருக்கும். அப்படியான ஒரு நாளில்தான் நான் முதற்தடவையாக கூட்டாளிமார்களுடன் முஸ்தபா அண்ணாவிச் சாச்சாவின் கோலாட்டம் (களிகம்பு) பார்க்கப் போனேன்.

அது பெருநாள் காலம். பெருநாள் தினத்திற்கு ஏழெட்டு நாட்களுக்கு முன்னரே பெருநாள் மணக்கத் தொடங்கி விடும். ஊரின் தெருக்கள் மணக்கும். வீடு வாசல்கள் மணக்கும். மரஞ்செடி கொடிகள் மணக்கும். மனிதர்களும் மணப்பார்கள். ஒட்டுமொத்த பிரபஞ்சமே மணக்கின்ற ஒரு மாயையை மனத்திலும் நாசித் துவாரங்களிலும் காற்று வெளி நிறைத்து விட்டுச் செல்லும். பெருநாட்கள் முடிந்தும் அந்த மணம் எங்களை விட்டுக் கடந்து செல்ல நாட்கள் பல எடுக்கும்.

பெருநாள் மணக்குமா?

அருமை நண்பர்களே! உண்மையாகவே அந்த நாட்களில் பெருநாள் உயிர் பெற்று மணத்தது என்பதை என்னால் உறுதியாகப் பதிவு செய்ய முடியும். மீராவோடைக் கிராமத்தின் நடுநாயகமாகத் திகழ்ந்த ஆலையடி வெட்டையில் பெருநாள் கொண்டாட்டம்.

அலிக்குட்டி ஓடாவியாரின் தொட்டிலூஞ்சல், அண்ணாவிச் சாச்சாவின் கோலாட்டம், பூலா மீராசாய்வு (ஓடக்கரை, தற்போது பதுறிய நாகர்) சர்ப்பனாவுடன் கூடிய இசைக்கச்சேரி, பையன்னா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாச்சாவின் சர்பத் கடை, காத்தான்குடி உமர் மூத்தப்பாவின் சும்பு முட்டாசு என்று அந்தத் துண்டு நிலம் களி கொண்டாடும்.

அஸர் தொழுகைக்குப் பின்னால் அண்ணாவியாரின் கோலாட்டம். ஆலையடி வெட்டையின் மத்தியில் மேடை அமைத்திருப்பார்கள். கிட்டத்தட்ட நாற்பதடி சுற்றளவும் இரண்டடி உயரமும் உள்ள மேடை. கோலாட்டத்தில் எட்டுப் பேர் பங்கெடுப்பார்கள். கைவைத்த வெள்ளை பனியனும் காரிக்கண் துணியில் சிறுவாலும். சிலர் அழகாக தலைப்பாகை கட்டியிருப்பார்கள். பன்னிரண்டு மதங்கொண்ட ஆனைக்குட்டிகள் போல் ஆட்டக்காரர்கள் திகழ்வார்கள்.

மேடையின் ஒரு பக்கமாக "களிகம்பு" குவிக்கப்பட்டிருக்கும். இந்தக் களிகம்பு பற்றி கொஞ்சம் சொல்ல வேண்டும். பெரும் சோலை வனங்களில் வைரம் பாய்ந்து முற்றிய "விப்பனை" எனும் பெயர் கொண்ட கம்புகளை வெட்டி அழகாக சீவி எடுப்பார்கள். இவ்வாறு பல வகையான கம்புகளை வனங்களில் தேடி வெட்டி எடுப்பார்கள். அதன் பெயர்கள் தற்போது எனக்கு ஞாபகத்திலில்லை.

ஒவ்வொரு வகைக் கம்பும் ஒவ்வொரு வகை ஒலியை ஆட்டத்தின் போது எழுப்பும். அந்தக் கம்புகளைச் சீவி அதன் அடியில் இரண்டு சலங்கை மணிகளைக் கட்டி அதன் ஒலிக்கு மெருகேற்றி அந்த ஆட்டம் ஆரம்பமாகும். குவித்து வைக்கப்பட்டிருக்கும் ஒன்றரை அடி நீளமான அந்தத் தடிகளில் ஒன்றில் ஒன்றை உரசி, ஒலியெழுப்பி தங்கள் காதுகளுக்கும் பிடிகளுக்கும் வாய்ப்பான கம்புகளை ஒவ்வொருவரும் தெரிவு செய்து கொள்வார்கள். அழகாகக் குனிந்து நின்று அந்தக் கம்புகளைப் பொறுக்கி எடுக்கின்ற காட்சி, அதுவே ஒரு கலை...

அது ஓர் அபூர்வ தருணம். அன்றைய நாட்களில் அந்த மனிதர்கள் செய்த அத்தனை காரியங்களும் ஒரு தவமாகவே இப்பொழுது எனக்குப் படுகிறது. அவர்களது அனைத்துச் செயற்பாடுகளிலும் அழகும் அமைதியும் அடக்கமும் அவர்களுக்குப் பெரும் அணிகலன்களாக அமைந்திருந்தன.

இத்தனைக்கும் அவர்கள் முறையாகக் கல்வி கற்றவர்களுமல்ல. கண் பார்க்க கை செய்யும் வித்தையைக் கைக்கொண்டவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களி கம்புகளுடன் தங்கள் தங்கள் சோடிகளுடன் மேடையேறி வட்டமாக நிற்பார்கள். ஒரே நேரத்தில் எட்டுப் பேரும் குனிந்து கிப்லாவை (மேற்கை) நோக்கியவர்களாக மண்ணைத் தொட்டு முத்தமிடுவார்கள். அண்ணாவியார் மேடையை விட்டும் இரண்டு பாகம் தள்ளி அவருக்காக நட்டு வைத்திருக்கும் அழகான சாய்மனையில் சாய்ந்து நிற்பார்.

உடன் அண்ணாவியார் சாச்சாவின் அதரங்களிலிருந்து அழகான குரலில்

"தலாந்த வெட்டு"

தன்னான தன்னான தன்னானே
தன தான தந்தன தன்னானே
தன்னான தன்னான தன்னானே
தன தான தந்தன தன்னானே

"வெட்டு!"

ஆலம் படைத்தவனே
புவி ஆளும் ரஹ்மானே
காலமும் உள்ளவனே - எம்மைக்
காத்தருள் ஆண்டவனே!
தன்னான தன்னான தன்னானே
தன தான தந்தன தன்னா

அண்ணாவியார் பாடிக் கொண்டிருப்பார். எட்டு ஆனைக் குட்டிகளும் சலங்கை பூட்டிய களிகம்புகளோடு மின்னல் வேகமாக ஆடிக் கொண்டிருப்பார்கள்.

ஒருவரை ஒருவர் மறித்து ஒருவருக்கொருவர் புகுந்து அந்த ஆட்டம் அலை பாயும். குருத்து மணலில் கெண்டைக் கால்கள் இரண்டும் புதைந்து புதைந்து மேலெழும். ஒவ்வொரு களிகம்பும் தனது சோடியைத் தேடித் தேடி முத்தமிடும். ஒரு போதுமே பிறிதொரு கம்பை அணைக்காது. தாளம் தப்பும் தருணங்களில் விரல்களை களிகம்பு பதம் பார்க்கும். அடி பட்ட விரல்களிலிருந்து இரத்தம் சொட்டும். ஒரு போதும் தாளம் தப்பாது. அது ஒரு தவம். அது ஒரு வணக்கம். தலைவன் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணாவியாரின் அதரங்களிலிருந்து வெளிவரும் ஒவ்வொரு அசைவுக்கும் பதினாறு கரங்களும் அபிநயம் பிடித்து ஆடும்.

விளையாட்டில் ஒழுக்கம் என்பதை என்னுடைய சுட்டிப் பருவத்திலேயே அந்தக் கோலாட்டத்தின் மூலம் நான் கற்றுக் கொண்டேன். அந்த மெய் சிலிர்க்கும் தருணங்கள்தான் பின்னாளில் அகில இலங்கை விளையாட்டுப் போட்டிகளில் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் வெற்றி பெறுவதற்கு மூலவித்தாக அமைந்ததோ நானறியேன்.

அஸர் தொழுத கையோடு கோலாட்டம் தொடங்கும். மஃரிப் தொழுகைக்காக நிறுத்தப்பட்டு, இஷாவுக்குப் பின்னர் மீண்டும் தொடங்கும். நள்ளிரவு 12 மணி வரையிலும் கோலாட்டம் களைகட்டியிருக்கும். எனது வாழ்நாளில் கோலாட்டத்தில் புகழ் பெற்ற ஏராளமான கிராமங்களுக்குச் சென்று இந்தக் கலையை நான் பார்த்திருக்கிறேன்.

1968களில் பொத்துவில், அக்கரைப்பற்று, ஒலுவில், பாலமுனை என்றும், எனது சிறுபராயத்தில் ஏறாவூர், வாலிப வயதில் மூதூர், மர்ஹூம் ஷம்ஸ் நண்பனாக இருந்த காலத்தில் வெலிகம என்றும் இந்த இடங்களிலெல்லாம் நான் கோலாட்டத்தைப் பார்த்திருக்கிறேன்.

நான் மிகைபடச் சொல்லவில்லை. முஸ்தபா அண்ணாவியாரின் குழுவுக்கு நிகராக ஆடியவர்களை நான் காணவில்லை. இரண்டாவது இடத்தை நான் ஏறாவூர் சீனி முகம்மது அண்ணாவியாருக்கு வழங்குவேன். மற்ற ஊர்களில் நான் பார்த்ததெல்லாம் கோலாட்டம் போல கோலாட்டம். ஒன்றும் ஒரிஜினல் இல்லை. ஒன்றிலும் அர்ப்பணிப்பும் ஈடுபாடும் இல்லை, தேடலும் இல்லை.

□ டிசம்பர் 25, 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பியன் குளமே சௌக்கியமா?

கடந்த ஒரு வார காலமாக இயக்கச்சி நண்பன் எழுத்தாளர் கருணாகரனின் வேட்டைத்தோப்பு சிறுகதைத் தொகுதியைப் படித்துக் கொண்டிருக்கிறேன். கதைகளை மீண்டும் மீண்டும் படிக்கிறேன். யுத்தத்தின் வலிகளையும் இழப்புகளையும் மிகவும் இயல்பாகச் சொல்லும் கதைகள். கதைகளைப் படித்துக் கொண்டு போக என் ஞாபகக் கரையில் இன்னொரு நிகழ்வு கரை தட்டியது.

என்னுடைய 15 வயதில் கிளிநொச்சி விவசாயப் பாடசாலை மாணவனாக இருந்த போது, தகப்பனார் வாங்கித் தந்த எனது பிதுர்ராஜித சொத்தாக இன்றும் என்னிடம் இருக்கின்ற சைக்கிளில் இயக்கச்சி, வட்டக்கச்சி, இராமநாதபுரம், உருத்திரபுரம், பரந்தன், கிளிநொச்சி என்று ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் சுற்றித் திரிவேன், அலைந்து திரிவேன்.

கருணாகரனின் கதைகளைப் படித்ததும் அவை அந்த மண்ணில் விடுதலையின் பேரால், தமிழீழத்தின் பேரால் நிகழ்ந்துள்ள காயங்களை, தீராவலியை என்மீது கீறிப் போட்டன.

அந்த உணர்வுகளைப் பங்கிட்டுக் கொள்ள அந்த மண்ணுக்கே வரும் ஆவலோடு காத்திருக்கிறேன்.

கதைகளைப் பற்றி இங்கு எழுத இருக்கிறேன்.

இடையில் கறுப்பியன் குளம் என் கண்களுக்குள் அலை பாய்ந்தது.

விவசாயப் பாடசாலையில் பயிற்சி பெறும் போது ஒவ்வொரு வாரமும் ஆடுகளைக் குளிப்பாட்டுவதற்காக கறுப்பியன் குளத்திற்குக் கொண்டு செல்வோம். மாணவர்களில் ஐவரும் ஆடு மேய்க்கும் வெள்ளையனும் ஆடுகளுமாக கறுப்பியன் குளத்தை நோக்கிச் செல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள், ஆடுகளைக் குளத்தில் கழுவிக் கொண்டிருக்கும் போது, திடீரென்று எங்களுடைய ஆடுகளின் மாப்பிள்ளைக் கிடாய் தண்ணீருக்குள் அமிழ்ந்தது அமிழ்ந்ததுதான். எனக்குப் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

என் சந்தேகம் தீர்வதற்கிடையில் இன்னும் ஒரு கிடாய் அதே மாதிரி அமிழ்ந்து போனது. அடுத்த கணமே வெள்ளையன், "முதலை... முதலை..." என்று பெருங் கூக்குரலிடத் தொடங்கினான்.

வெள்ளையனின் இடது கை முதலையின் வாயிலும் வலது கை என் இடுப்பைச் சுற்றியும் எனது இடது கையில் இன்னுமொரு பென்னம்பெரிய ஆட்டுக்கிடாயும்.

வெள்ளையனின் இடது கையை முதலை இழுக்க, வலது கை எனது இடுப்பை இழுக்க, எனது இடது கையிலிருந்த ஆடு கரையை நோக்கிப் பாய, பெரும் மல்லுக்கட்டு.

இந்தக் காட்சியைப் பார்த்திருந்த ஏனைய நண்பர்கள் நால்வரும் கையிலிருந்த தடியைக் கொண்டு முதலையைத் தாக்கத் தொடங்கினார்கள். முதலையோ வெள்ளையனின் கையை உடைத்து பெரும் காயங்களை ஏற்படுத்தி தூளாக்கி விட்டு நீருக்குள் அமிழ்ந்து போனது.

அன்று, நாங்கள் மாணவர்கள் ஐவரும் முதலைக்குப் பயந்து ஒதுங்கியிருந்தால், வெள்ளையன் உயிரோடு தப்பியிருக்க மாட்டான்.

நான் பயிற்சி முடித்து வெளியேறும் வரையிலும் வெள்ளையன் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தான்.

அன்று குளத்தில் கண்ட வெள்ளையன்தான், இந்நாள் வரையில் நான் காணவில்லை.

என் இனிய கறுப்பியன் குளமே! சௌக்கியமா?

□ மார்ச் 22, 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறைமேளக் கூத்து

1950களில் எங்கள் கிராமத்தின் மேற்கே பத்துப் பதினைந்து பறையர் குடும்பங்கள் வாழ்ந்தார்கள், வெண்மணற் பரப்பினிலே சிறு சிறு குடிசைகள் அமைத்து குடிசைக்கு முன்னால் ஒரு பந்தலும் போட்டிருப்பார்கள். சனி ஞாயிறுகளில் நாங்கள் காடுகளில் அலைந்து தண்ணீர் தாகம் எடுக்கும் நேரங்களில் இவர்களின் குடிசைக்குச் சென்று அவர்கள் சிரட்டைகளில் தரும் தண்ணீரைக் குடித்து மகிழ்வோம். அது வெறும் தண்ணீர் அல்ல, பஞ்சாமிர்தம். வாசலில் தோண்டிய பூவலில் இருந்து அள்ளி வடித்தெடுத்த நீர். அது ஒரு பொற்காலம்.

அந்த நாட்களில் பெருநாள் காலங்களில் வீடுவீடாக பறையர்கள் பறைமேளக் கூத்தாடி பெருநாளைக்குச் சுட்ட பலகாரங்களை வாங்கிச் செல்வார்கள். எங்கள் வீடுகளில் அவர்களுக்கான பலகாரம் எப்போதும் காத்திருக்கும், களைத்துப் போன வேளைகளில் எங்கள் வாசலில் நின்ற பலா மரத்தின் நிழலின் கீழே ஓய்வெடுப்பார்கள். பொழுது சாயத் தொடங்கியதும் எழுந்து இறுதியாட்டம் பலாவிற்கு கீழே நிகழும். இவர்களில் சாமியன் தத்தியும், கொட்டான் தத்தியும் பிரசித்தம். சாமியனும், கொட்டானும் ஆடத் தொடங்கினால் பார்வையாளர்களுக்கு தலை சுற்றும். ஒருவரையொருவர் துரத்தி ஒருவர் தவிலில் மற்றவர் அடித்து வானத்தில் மிதந்து பூமியில் குதித்து... அப்படியொரு ஆட்டம் நான் இன்று வரையிலும் பார்க்கவில்லை. இந்த ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த எனது தகப்பனார் வீட்டுக்குள் சென்று புத்தம் புது சால்வையை எடுத்துக் கொண்டு வந்து வீசுவார். அது யாரின் கைகளுக்குள் அகப்படுகிறதோ அது அவர்களுக்குச் சொந்தமாகும்.

இவர்கள் அனைவரும் களுதாவளையை பூர்வீகமாகக் கொண்டவர்கள். இவ்வாறான நிகழ்வுகள் உங்கள் ஊர்களிலும் நிகழ்ந்ததா நண்பர்களே...?

☐ மார்ச் 29, 2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொச்சிமுனையாரும் காஞ்சிரங் கொட்டையும்

நான் பிறந்து வளர்ந்த மீராவோடை சட்டிபானைத் தெருவில் நொச்சி முனையார் என்று ஒருத்தர் இருந்தார். அவர் வீட்டு வாசலில் பிரமாண்டமான மாமரம். வட்ட வடிவான வெள்ளை மாங்காய். பழுத்தால் ருசிக்காது. முற்றின காய், அதன் சுவைக்கும் இன்பத்திற்கும் ஈடு இணையே இல்லை.

பாடசாலை விட்டு வந்ததும், பசியெடுக்கும். உம்மாவிடம் ஐந்து சதம் பறித்துக் கொண்டு நொச்சி முனையார் வீட்டுக்குப் போனால் மாமி பெரிசாக ஒரு மாங்காயைப் பறித்துத் தருவார். வயிறு நிரம்பி விடும்.

நொச்சி முனையாருக்குப் பாம்பு கடித்தால், விஷம் ஏறுவதில்லை. கடித்த பாம்பை கையால் தூக்கி வீசி விட்டு, "நாயே போய்ச் சாகு" என்று சொல்வார். ஊரில் இது பெரும் புதுனம்.

அந்த நாட்களில் பாம்புக் கடியில் வாரத்துக்கு ஒருவர் இருவர் மரணமாகிக் கொண்டே இருப்பார்கள். அப்படியிருந்தும் நொச்சி முனையாருக்கு மட்டும் ஏன் விஷம் ஏறுவதில்லை?

சிறு வயதிலிருந்தே, பெரும் விஷம் நிறைந்த காஞ்சிரங் கொட்டையை சிறுகச் சிறுகச் சாப்பிட்டுச் சாப்பிட்டு அவர் உடலில் விஷம் நிறைந்திருந்ததுதான் இதற்கான காரணம் என்று பேசிக் கொண்டார்கள்.

இன்றைய விஞ்ஞான உலகத்திற்கு என்னுடைய இந்த குறிப்பு சரி வருமா நானறியேன்.

பல தடவைகள் அவரைப் பாம்பு தீண்டியும் அவர் விஷமேறி மரணிக்கவில்லை. காஞ்சிரங் கொட்டைக்கு அத்தகைய ஒரு சக்தி உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரிலிருந்து 15 கி.மீ. தூரத்தில் காஞ்சிரங்காடு என்ற ஒரு கிராமமும் வயல் நிலங்களும் இன்றும் உண்டு. ஆனால் காஞ்சிரம் மரங்களை மரந்தின்னும் பேய்கள் கபளீகரம் செய்து விட்டார்கள்.

☐ அக்டோபர் 18, 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறி மணக்கும்

இந்த நினைவுகளின் தொடரில் ஒரு போதும் கற்பனைகளை அவிழ்த்து விடுவதில்லை என இதை எழுதுபவர் உங்களுக்கு வாக்குறுதியளிக்கிறார்.

இங்கே இன்றிலிருந்து விதானைப் பொண்டிலை சீமாட்டி என்று அழைக்கப் போகிறேன்.

அந்தக் கிராமத்தில் 25 இற்கும் குறைவான குடும்பங்கள், 75 வாக்குகள், அதற்கு 2 வாக்காளர் பெட்டிகள், 1 ஜீப் வண்டி, இரண்டு அரச பணியாளர்கள். நமது ஜனநாயகத்தின் மாண்பு.

பொழுதும் மறைய மாவலி ஆற்றின் சோலை வனங்களிலிருந்து ஆனைக் கூட்டங்களின் பிளிறல் காதுகளை அடைத்தது.

வாசலில் இரண்டு தோட்டுப் பாய்கள். எங்கள் உடுப்புகளை களைந்து பாயின் ஒரு மூலையில் போட்டு விட்டு நானும் எனது அதிகாரியும் அமர்ந்தோம். அந்த ஊரில் சீமாட்டிக்கு மட்டுமே மண்டபமும் வீடும். ஓலைக் கூரைக்குப் பதிலாக தகரம் அடித்திருந்தார்கள். வாசலில் அழகிய தெங்குகள். காற்றில் அசையும் ஓலைக் கீற்றுகள் ராகம் இசைத்தன.



திடீரென்று ஒரு மனிதர் இரண்டு கோழிச் சேவலுடனும் தோளில் அடப்பையுடனும் ஏறுகடப்பால் ஏறி இறங்கி வந்தார். சீமாட்டியின் வலது கரமான பக்கீரப்பா.

பத்து ஏக்கர் மும்மாரியும், மூன்று ஏக்கர் புகையிலைச் செய்கையும் மேற்கொள்ளும் அந்தக் கிராமத்தின் ஒரே ஒரு பெண், உழைப்பின் சின்னம், லேசுபட்ட உழைப்பல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராப்பகலா உழைப்பு. மகாவலி கங்கையிலும் கரையிலும் அவரின் காற்தடம் பதியாத ஒரு துண்டு நிலத்தைக் காண்பதரிது.

உடனடியாக கோழியை நானே அறுத்து உரித்து கண்டம் போட்டுக் கொடுத்தேன். அடுப்படியில் அமர்ந்திருந்த சீமாட்டி அம்மியில் அரைத்து எடுத்த மஞ்சளை கோழி இறைச்சியில் போட்டுப் புரட்டி ஒரு பக்கமாக வைத்தார். அவர் அருகே வெள்ளைப்பூடு, துப்பரவு செய்த வெங்காயம், கொச்சிக்காய் என்று பண்ணாக இருந்தது.

அடுப்பில் ஏறிய சட்டி காய்ந்ததும் அவர் கைக்கு எட்டிய தூரத்தில் பென்னம் பெரிய மண் அண்டாவிலிருந்து இரண்டு அகப்பையை அள்ளி சட்டிக்குள் போட்டுக் கடைந்தார். கம கம என வாசம். உற்றுப் பார்த்தேன். சட்டிக்குள் தயிர் ஆடைக் கட்டிகள் சல சலத்து நெய்யாகி உருகும் காட்சி.

அப்படியொரு மணம். மசாலாவில் புரட்டிய கோழிக் கறியை வளித்துக் கொட்டி கறி மூடியைக் கவிழ்த்து விட்டார். கறி வாசம் காற்றில் கலந்தது. சிறு கொதியலுக்குப் பின்பு கொஞ்சம் சொட்டுப் பாலை விட்டு, பக்கீரப்பா கொண்டு வந்த முட்டைக் கத்தரியில் மூன்று காய்களை கீறு கீறாக வெட்டி கறிச் சட்டிக்கு மேலால் பரப்பி விட்டார்.

இன்று நமது வீடுகளில் சமைக்கும் நாகரிகக் கறியல்ல இது. காட்டுக் கறி, காட்டுப்பூ வாசம். கோழிக் கறிக்கு உருளைக்கிழங்குதான் நமது கூட்டு. கறி அடுப்பிலிருந்து இறங்கியதும் இரண்டு துண்டு இறைச்சியையும், இரண்டு துண்டு கத்தரிக்காயையும், அப்போதுதான் துருவிய சிரட்டையில் போட்டு எனக்கும் அந்த சிங்கள நண்பருக்கும் சீமாட்டி தந்தார்.

அது கறியில் போட்ட கத்தரிக்காய் அல்ல. ஒட்டி மீன் சினைக்கு நிகராக... அந்தக் கத்தரித் துண்டங்கள். அப்படியொரு ருசி. இந்த 48 வருடங்களில் இன்னமும் எனது அடிநாக்கில் அப்பிக் கிடக்கிறது அந்தக் கறியின் பக்குவம். அப்படியொரு கறி இன்று வரையிலும் நான் சாப்பிட்டதுமில்லை.

கறி மணக்கும்...

☐ ஆகஸ்ட் 6, 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீமாட்டி

பொழுது மேற்கு வானில் வேலவை வில்லுக்குள் மெல்ல மெல்ல இறங்கிக் கொண்டிருந்தது. கோழிக்கறி சமைத்து முடிந்ததும் இன்னும் ஓர் அடுப்பில் புளியாண சட்டி ஏறி அமர்ந்தது. அதற்குப் பக்கத்தில் ஒண்ணரைக் கொத்து அரிசிச் சோற்றுப் பானை ஒன்று புறுபுறுத்துக் கிடந்தது. எல்லாமே மண் சட்டி பானைகளும், காட்டு விறகுகளும்.

எங்களை சீமாட்டியின் வீட்டில் விட்டு விட்டுப் போன தம்பி ராசா விதானையார் கடதாசிப் பையொன்றுடன் ஆஜரானார். நான் சிரட்டையில் கறி தின்பதைப் பார்த்ததும், எனக்கும் இது ரொம்ப பிடிக்கும் என்றார்.

பொழுது இருட்டத் தொடங்கியதும் நாத்த வண்டு என்று சொல்லும் அவரை வண்டுகள் எங்களை ஆக்கிரமிக்கத் தொடங்கின.

சீமாட்டி பரபரவென்று சோறு கறி எல்லாவற்றையும் மூடி வைத்தார். தோட்டுப் பாயில் அமர்ந்த விதானையாரும் தனது சேட்டைக் கழற்றி ஒரு மூலையில் எறிந்தார். மிகவும் மெலிந்த தம்பி ராசா விதானையார் கையில் அந்தக் காலத்து நவிக்கட் சிகரட் மினுமினுத்தது. கடதாசி பேக்கை கையில் எடுத்தவர் உள்ளே இருந்து இரண்டு போத்தல்களை வெளியில் வைத்தார். களுத்துறை அர்ராக் (களுத்துறை சாராயம்).

என்னை விடவும் விதானையார் 15 வயது மூத்தவராகத் தெரிந்தார். என்னைப் பார்த்து விதானையார் "இதெல்லாம் எடுப்பீங்களா?" என்று கேட்டார். "பிஸ்மி சொல்லி குடிச்சால் எல்லாம் ஹலாலா போகும்" என்ற தத்துவத்தை முன்வைத்தார்.

சீமாட்டி வீட்டிற்குள்ளிருந்து ஒரு கோப்பையில் கறியையும், ஒரு பீங்கானில் வருத்தெடுத்த உப்புக் கண்டங்களையும் கொண்டு வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது மேலதிகாரியும் விதானையாரும் கொண்டாட்டத்தில் இறங்கினார்கள். நான் வீட்டின் மேற்கே வகிடு கிழித்தாற் போல் கிடந்த வீதியில் நின்று ஊரை நோட்டமிட்டேன். வீதியின் மேற்கு பக்கம் எங்கள் பண்ணையும் ஆரம்ப பாடசாலையும். கிழக்கில் குடியிருப்புகள். வீடுகளும் மண் குடிசைகளும் கொட்டில்களும் பந்தல்களுமாகக் காட்சி தந்தன.

அது ஒரு அழகிய ஓவியம். கிராமம் என்ற சொல்லின் அற்புத அர்த்தம்.

வீட்டு வாசல்களில் புளிய மரங்களும் தென்னைகளுமாக. இன்று வீடு என்று நீங்கள் காண்பதில் ஒன்றைக் கூட அங்கு காண முடியாது. ஆனாலும் அந்தக் குடிசையில் அந்த மக்கள் வறுமையோடும் அறியாமையோடும் போராடி வாழ்ந்தார்கள்.

1970களில் உடுதுணி இல்லாமல் அந்த மக்கள் பெரும் அவதிப்பட்டார்கள். கூப்பன் புள்ளிக்கு இரண்டு யார் துணி கொடுத்தாலும் அதை வாங்குவதற்கும் அவர்களுக்கு வக்கில்லை.

இந்தக் கருவை வைத்து "பேய்களுக்கு ஒரு வாழ்க்கை" என்ற தலைப்பில் சுடர் சஞ்சிகையில் ஒரு கதையை எழுதினேன். கதை வெளிவந்ததும் மல்லிகை டொமினிக் ஜீவா அவர்கள் உடுப்பதற்கு துணி இல்லாமல் இப்போது யாரும் இல்லையே ஹனீபா என்று சொன்னார். நீங்கள் வாருங்கள் நாம் திருக்கோணமடு என்னும் ஊருக்குப் போவோம் என்று அழைத்தேன். அப்போது SLFP, LSSP கூட்டாட்சி இலங்கையில் (1970-77).

அந்த ஊரில் பச்சைக் கொச்சிக்காய் மட்டும்தான் காசு கொடுத்து வாங்குவார்கள். மற்றதெல்லாம் அவர்களது சேனையில் உற்பத்தி செய்வார்கள்.

மறுநாள் பொழுது விடிந்ததும் நானும் தேர்தல் அதிகாரியும் விதானையாரும் பாடசாலைக்குச் சென்று வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளை கவனித்தோம்.

பகல் பத்து மணிக்கெல்லாம் 74 வாக்குகளும் அளிக்கப்பட்டு விட்டன. அந்த ஊரின் 25 குடும்பங்களில் 22 குடும்பத்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள். அபூபக்கர் என்பவரும் அவரது உடன்பிறப்புகள் சிலரும்தான் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவாளர்கள். 74 வாக்குகளில் கிட்டத்தட்ட 65 வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு விழுந்திருக்கும் என நம்புகிறேன்.

அம்முறை தேர்தலில் கே.ஏ. லீலாரட்ண விஜயசிங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் வெற்றி பெற்றார்.

☐ ஆகஸ்ட் 9, 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஞ்சு பலாக்கறி

ஐந்து வருடங்களுக்கு முதல் இந்தக் கறி பற்றி எழுத வேண்டும் என்பதற்காக நான் இந்தக் கறியையே சமைத்துப் பார்த்தேன். முடிவில் கறி ஆட்டுக்கறி போல் அமிர்தமாய் அமைந்தது.



முதலில் பிஞ்சு பலாக்காயை சிறு சிறு கண்டங்களாக வெட்ட வேண்டும். அவ்வாறு வெட்டிய கண்டங்களுடன் இரண்டு மூன்று கொறக்கா கீறுகள், அளவாக உப்பு, கூடவே இரண்டு ஸ்பூன் அளவில் மஞ்சள் தூள் இவற்றுடன் அரைத்தெடுத்த மசாலாவையும் ஊற்றி அடுப்பில் நன்கு வேக வைக்க வேண்டும். அவ்வப்போது அகப்பை காம்பால் கிளறி விட வேண்டும். காய் அவிந்து பதமாகியதும் நாசித் துவாரங்களில் மணம் ஒட்டிக் கொள்ளும். அந்த தருணத்தில்தான் தாளிதம் செய்த எண்ணையை சட்டியில் விட்டு கறியைக் கொட்டி ஒரு கப் கட்டி தேங்காய்ப் பாலும் விட்டு மீண்டும் மூடி விட வேண்டும். கறியை அடுப்பிலிருந்து இறக்குவதற்கு முன்பு கறிவேப்பிலை இரண்டு இடுங்கு உருவிப் போட்டு, கூடவே இரண்டு தக்காளிப் பழங்களையும் துண்டங்களாக அரிந்து கறிக்கு மேலால் பரப்பிவிட வேண்டும். அடுப்பிலிருக்கும் கறிச்சட்டியை நிலத்தில் இறக்கி வைக்கும் போது இரண்டு குலுக்கு குலுக்கி விட்டு வையுங்கள். சாப்பிடும் நேரம் எல்லாம் பதமாக வரும்.

சமையற்கலை என்பது மாபெரும் கலை. ஆயகலைகளில் அதுவுமொன்று. எனவே இதைப் படிப்பவர்கள் இங்கு நான் தவறவிட்ட சங்கதிகளை நீங்களாகவே வந்து பதிவிடுங்கள். எனது வாழ்நாளில் மறக்கமுடியாத பலாக் கறியை கண்டியிலும், திகாரியிலும் சாப்பிட்டிருக்கிறேன். இவையெல்லாம் கைப்பக்குவமே.

ஐந்து வருடங்களுக்கு முன்பு யாரோ ஒரு பெண்மணியிடம் உரையாடிக் கொண்டிருக்கும் போது இந்தக்கறி பற்றியும் நான் சொன்னேன். "எஸ்.எல்.எம்., நீங்கள் இப்போது என்னிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாடியதை கட்டுரை வடிவில் எழுதுவீர்கள் என்றால், ஆண்டு தோறும் ஜேர்மனி மொழியில் உலகக் கறிகள் பற்றி வெளிவரும் பருவ இதழில் நமது தேசத்தின் பலாக்கறி பற்றியும் உலக வாசகர்களுக்கு படிக்கும் வாய்ப்புக் கிட்டுவதோடு, உங்களுக்கும் நீங்கள் எதிர்பாராத ஒரு தொகை சன்மானமாகவும் கிட்டும். நல்ல படங்களும் நீங்கள் அனுப்ப வேண்டுமென்றார்."

எல்லாம் முடியும் தறுவாயில், இன்றுதான் இதனை பதிவேற்றம் செய்கிறேன்.

குறிப்பு: இலங்கையில் பரவலாக பலா விதைகளை தபால் மூலம் கொஸ் மாமா என்பவர் அனுப்பி வைத்தார். அவரைப் பற்றியும் இன்னொரு பதிவில் எழுத வேண்டும். *1940, 50* களில் இலங்கையில் நிலவிய வறுமைக்கு வடக்கு கிழக்கு மக்களின் பசி போக்கியாக மரவள்ளி, வற்றாளை, கருணைக் கிழங்கு உதவியது போல், தென்பகுதி சிங்களவர்களின் பசிபோக்கியாக இந்த பலா அவியல் இருந்தது.

□ பெப்ரவரி 6, 2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பனையான் மீன் பாலாணம்

இப்பொழுதெல்லாம் பனையான் மீன்களைக் காண்பதே அரிது. நான் சிறுவனாயிருந்த நாள்களில் வாப்பாவோடு வயலுக்குப் போவேன். வரப்பின் நான்கு மூலைகளிலும் பனையான் மீன்கள் குதித்துக் குதூகலிக்கும். பகல் 11 மணிபோல முல்லைக்காரன், அத்தாங்கைக் கொண்டு நாலு தரம் வரம்பு மூலைகளை வாரியெடுத்தால் கடவம் நிறைய மீன்கள்.

வேளாண்மை வெட்டுக்காரரில் சிலரும் சேர்ந்து வளைத்திருந்து மீனை அறுப்பார்கள்.

அறுத்த மீன்களை வாய்க்காலில் கழுவுவதும் ஒரு கண்கொள்ளாக் காட்சியே.

அடுப்பில் சேனைக் கொச்சிக்காய், சின்ன வெங்காயம், கல்லுப்பு, நல்ல செங்காய்களாக மூன்று நான்கு புளியங்காய்... சட்டியில் அவியும் பருவத்தில் அகப்பையால் நசித்து துவையலாக பொரு பொருவென... நீர்வற்றி மணக்கும் தறுவாயில் கழுவிய மீனை சட்டியில் கொட்டி மூடிவிடுவா உம்மா.



உள்ளே மீன் பொரு பொருவென... கம்மென்ற மணம் நாசித் துவாரங்களை முத்தமிடும்... சட்டியைத் தூக்கி இரண்டு மூன்று குலுக்கல்... தண்ணிப்பாலை ஊற்றி மீண்டும் மூடி இரண்டு கொதி கொதித்ததும்... கட்டிப்பால் அல்லது தலைப்பால் சட்டிக்குள் ஊத்தி அகப்பையால் ஒரு ஆத்தல்.

பனையான் மீன் பாலாணம் முறுகி மணக்கும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டியை அடுப்பிலிருந்து இறக்கும் வேளையில்... துப்பரவு செய்த குட்டித்திராயில் நான்கு பிடிகளை தூவிய கையோடு கறிச்சட்டி நிலத்தில் அமரும்...

பனையான் மீன் பாலாணம் சாப்பிட்டவர்கள் கைதூக்குங்கள்...

□ ஜூலை 3, 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப்புக் கண்டம்

கேள்விப்பட்டிருக்கிறீர்களா? 1970களின் ஆரம்ப நாட்கள். வெலிக்கந்த இலிருந்து 25 கி.மீ. வடக்கே திருக்கோணமடு கால்நடைப் பண்ணையும் கிராமமும் உண்டு. அங்கு கால்நடை அபிவிருத்தி போதனாசிரியராக சென்றிருந்தேன்.

மகாவலி கங்கையின் கரையோரம். அடர்ந்த மரச்சோலைகள். ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் நானும் எனது சாரதி ஆத்தர் ரூபசிங்கவும் ஆற்றுக்கு மீன்பிடிக்கப் போவோம். வம்மிப் பழத்தை இரையாகக் குத்தி பெரும்பெரும் வாளை மீன்களைப் பிடிப்போம். ஒரு மீன் 20 கிலோ எடையிருக்கும். பல மீன்களைப் பிடித்து ட்ரக்டரில் கட்டி இழுத்து வருவோம். நான் தங்கியிருந்த விடுதிக்கு வந்ததும் துண்டங்கள் போட்டு, அவற்றை உப்புக்கண்டமாக்குவோம்.


உப்புக் கண்டம் போடுவது எப்படி?

மீன்களைத் துண்டு துண்டாக வெட்டி, உப்பு, மஞ்சள், கொரக்கா அனைத்தையும் உரலில் போட்டு இடித்து, துண்டங்களில் நன்கு பூசி, சாக்குப் பையில் சுற்றி, மூன்று தினங்கள் நீர்வடிய விட்டு, பின்னர் உலர்த்தி, சேமித்து வைப்போம். பெரும் மழை காலத்தில் இந்த சேமிப்பு உற்ற நண்பனாகக் கைகொடுக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தக்காளி பெரிய வெங்காயத்துடன் உப்புக் கண்டங்களை நறுக்கிப் போட்டு ஒரு வரட்டல் போட்டால் அள்ளிக் கொள்ளி கொத்தும்.

□ நவம்பர் 09, 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறால் வேட்டை

எனது வீட்டிலிருந்து மேற்காக நூறு மீற்றர் தூரத்தில் வங்காள விரிகுடாவை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறது பேராறு. மத்திய மாகாணத்தில் மழை பொழிந்தால், ஆறு நுங்கும் நுரையுமாக — *'வாடி வாசல்'* நாவலில் காவேரி பற்றி சி.சு. செல்லப்பா சொல்கிறாரே — அந்தக் காட்சியை எங்களூரிலும் எங்கள் ஆற்றிலும் அவ்வப்போது காணலாம்.

ஆறு மாதம் நன்னீர், ஆறு மாதம் உவர்நீர். காடாறு மாதம், நாடாறு மாதம் எங்கள் ஆற்றுக்கும் வலு சோக்கு.

ஆற்றின் கரையைச் சுற்றி கண்டல் காடு. ஆயிரம் விழுதுகள் பரப்பி ஆற்றிற்கும் ஊரிற்கும் அரணாக நிற்கும். சுனாமி வந்தாலோ சூறாவளி வந்தாலோ அசைந்து கொடுக்கும், அழிவைக் கொடாது. இயற்கையின் இரும்பு அரண் இந்தக் கண்டல்.

இந்த விழுதெனும் கூண்டிற்குள்தான் அரிதான மீன்களும் இறால்களும் சினை பீச்சி குஞ்சு வளர்க்கும்.

எனது பதின்ம வயதில், நானும் நண்பன் தாவூதும். (*மக்கத்துச் சால்வையில்* வரும் பையன்னா ஹோட்டல் முதலாளியின் இரண்டாவது மகன், பசுநெய்யில் விளைந்த மஸ்கத்துக்கு நிகரானவன்) பொடியன் வயதில் மொழுமொழுவென்றிருப்பான். அவனைச் சுற்றி ஏராளம் வண்டுகள்... அவனுக்கோ இந்தக் கருத்த வண்டில்தான் அடங்காக் காதல்.

பதின்ம வயதுப் பவித்திரங்களுக்கெல்லாம் அவனே குரு, அவனே சாட்சியம்.

பொழுது பட்டால் இருவரும் ஆற்றில் இறங்கி விடுவோம். அவன் கையில் 'கரப்பு', எனது கையில் ஜேர்மனில் செய்யப்பட்ட பெட்ரோமெக்ஸ் லைட். இரவு பத்து மணிக்கு காகிதாலையின் சைரன் ஒலியுடன் இறால் கூடையும் நிரம்பி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கருவண்டன் இறால்கள் (சிங்க இறால்). அன்றைய விலை ஒரு இறால் பத்துச்சதம். இன்றைய விலை நூறு ரூபா. ஆனாலும் அந்த இறாலில்லை இந்த இறால்.

இடையில் முப்பதாண்டு கால யுத்தம். மீன்களின் இராசதானியான எங்கள் ஆற்றின் கண்டல் காடும் அழிந்து போனது. இறால்கள் எங்கு போனதோ நானறியேன்.

அந்த நாள்களில் நாங்கள் இந்த ஆற்றில் பிடித்த இறால்கள் இப்போது பணிச்சங்கேணியில் பிடிபடுகிறது. (சக்களத்தியாக)

குறிப்பு: இன்று காலையில் பேத்திக்கு பரோட்டா வாங்க வந்த வேளையில், இந்தத் தருணம் சிக்கியது. பிடிபடுவது கருவண்டன் அல்ல, வெள்ளிறால் குஞ்சுகள். இன்னும் இருபத்தைந்தாண்டுகளில் இந்த ஆறு சென்னையின் கூவமாக மாறிவிடும். அதற்கான அனைத்து முஸ்தீபுகளும் அரச அங்கீகாரத்துடன் அரங்கேறத் தொடங்கி விட்டது. ஒரேயொரு நிம்மதி, அந்த நாளில் இந்த உலகில் நானிருக்கப் போவதில்லை.

☐ நவம்பர் 28, 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போன கண்டல்காடு

எனக்கு அப்பொழுது 5 வயதிருக்கும். வாப்பாவின் கை பிடித்து ஆமையரப்பாவிடம் ஆட்டுக்குட்டி வாங்கப் போன அன்றுதான் இந்த ஆற்றையும் இதன் அழகையும் கண்டு மகிழ்ந்தேன். அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் மாலை வேளையில் ஆற்றங்கரைக்கு விளையாட வந்து விடுவேன். பொழுது பட்டு கண்டல் காடு இருட்டும் வரையிலும் விளையாட்டுத்தான்.

இந்தப் படத்தின் மையத்தில் தெரிகின்ற புட்டிதான், ஆமையரப்பாட புட்டி. அதில் ஒரு ஏக்கர் அளவு வயல் நிலமும் ஆமையரப்பாவின் ஆட்டுக்காலையும் ஏழெட்டு தென்னை மரங்களும் ஒரு புரைவாடியும் ஒரு கொட்டுக்கிணறும் இருந்தன.

ஆமையரப்பாவும் மனைவியும் ஆயிரக்கணக்கான கொக்குகளும் பறவை இனங்களும் அவருடைய சின்னஞ்சிறிய ஆட்டுப்பட்டியும். எப்படியொரு வாழ்வை ஆமையரப்பா வாழ்ந்திருப்பார்.

இந்த ஆற்றை ஒரு பெண்ணாக உருவகித்தால், ஆற்றின் பின்னணியில் தெரிவது பெண்ணின் தலையும் அவளுடைய கருங்கூந்தலும். இந்த வெள்ளையாறு அவளுடைய உடலைப் போர்த்திய பட்டுச்சேலை. மஞ்சள் பட்டுச் சேலையின் ஒரு சாண் அளவு பச்சைக்கரை வாட்டியாக இந்தக் கண்டல் காடுகள் காட்சி தந்தன.

கால ஓட்டத்தில் ஆமையரப்பாவின் வாடியும் தோட்டமும் காணாமல் போயின. எப்போது எப்படி நடந்ததென்று தெரியவில்லை.

இந்தக் கண்டல் காடுகள்தான் மீனினங்களும் இறால் வகைகளும் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். இங்கியூ பெட்டர் இரவு வேளையில் ஒரு கையில் பெற்றோல் மெக்சும் இறால் கூடையும் இருக்க, மற்றவரின் கையில் கரப்பு இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஏழு மணிக்கு ஆற்றில் இறங்கினால் 5 கி.மீ. அளவு தூரம் கொண்ட கண்டல் காடுகளில் சுற்றி வரும் போது இறால் கூடை நிரம்பி விடும்.

1990களில் மூன்றாவது ஈழப் போரின் போது காத்தான்குடியிலும் ஏறாவூரிலும் ஆயுததாரிகளால் நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்ட போது, பாதுகாப்பை முன்னிட்டு இந்தக் கண்டல் காடுகள் பாதுகாப்புப் படையினரின் மேலான ஆலோசனையின் பேரில் பொது மக்களால் முற்றாக வெட்டி நாசம் செய்யப்பட்டது. அதற்கும் காரணம் இல்லாமலில்லை. ஆற்றின் மறு கரையில் கூப்பிடு தூரத்தில் புலிகள் அரணமைத்திருந்தார்கள்.

இந்தப் பிரபஞ்சம் தோன்றிய காலத்தில் இந்தக் கண்டல் காடுகளும் தோன்றியிருக்கும். இனிமேல் ஒரு போதும் அந்தக் காட்சியை இந்தத் தலைமுறையினர் காணப் போவதுமில்லை. அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்தப் பகுதியில் கண்டல் கன்றுகளை மீள்நடுகைடநட்டார்கள். எந்தவொரு காரியமும் மக்களின் கரிசனை இல்லாத போது கண்ணெதிரே மடிந்து சாகும் என்பதற்கு இங்கு நாட்டிய கண்டல் கன்றுகளும் ஒரு சாட்சியம்.

காணாமல் போன எங்கள் கிராமத்தின் கண்டல்காடே! நான் இனி உனை எங்கு காண்பேன்?

□ நவம்பர் 10, 2015





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலை

போர்த்துக்கீசர் காலத்தில் கண்டியிலிருந்து கிழக்கு நோக்கி வந்த முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் எங்களூரிலிருந்து 12 கி.மீ. அப்பாலுள்ள அக்குறானை எனுமிடத்தில் குடியேறினர். இவர்கள் அக்குறனையிலிருந்து வந்ததினால் இந்தப் பெயர் இங்கு நிலைத்தது. சின்ன அக்குறானை, பெரிய அக்குறானை.

இந்தப் பிரதேசம் முழுக்க பெரும் வனாந்திரமாக இருந்தது. யானை, கரடி, சிறுத்தை, மான், காட்டு மாடு என்று அந்த வனாந்திரத்தில் குடியிருந்தன. வந்தேறு குடிகளான முஸ்லிம்களும் அங்கு வாழ்ந்தார்கள்.

அங்கு நிறைய பாலை மரங்களே இருந்தன. பாலப்பழம் ரொம்ப ருசியானது. பாலை பூக்கும் காலங்களில் குடம் குடமாகத் தேன்களும் அங்கு உற்பத்தியாகும். பாலை பூக்கும் காலத்தில் பெறும் தேன், கட்டியாக நல்ல கலரில் இருக்கும். இப்பொழுதும் அந்தப் பிரதேசத்தில் சுத்தமான தேனை வாங்கலாம்.


70களில் நான் வாழ்ந்த திருக்கோணமடுவில் நிறைய சிறுசிறு கண்டுகளாக பாலை மரங்கள். அந்தக் கிராமத்தைச் சேர்ந்த இப்ராஹீம் எனும் எனது நண்பருடன் மிகச் சிறந்த பழங்கள் பழுத்திருக்கும் பாலைகளைத் தேடி வனாந்தரங்களில் அலைவோம். ஆளுயரத்தில் கன்றுகள். சில பாலைகள் நிலத்தில் படர்ந்தும் கிடக்கும் கிளைகளை வெட்டாமல் சதைப்பிடிப்பான ருசியான பழங்களைத் தெரிந்து பறிப்போம்.

வீட்டிற்குக் கொண்டு வந்த நீளமான தோட்டுப் பாய்களில் அவற்றை உலர வைப்போம். நான்கைந்து நாட்கள் உலர்ந்த பின்பு பழத்திலிருந்து விதையை வேறாக்கி பெரிய பெரிய மண் பானைகளில் பழத்தைக் கொட்டி நல்ல சுத்தமான கட்டித் தேனை ஊற்றி வண்டுப் பானை போல் அழகாகக் கட்டி வைத்து விடுவோம். மூன்று மாதங்கள் சென்றதன் பிற்பாடு பானையைத் திறந்து பார்த்தால், தேனில் ஊறிய பாலைப்பழம் ஒரு திராட்சைப் பழமளவு ஊதிப் பெருத்திருக்கும். மாலை வேளைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்களும் உண்டு வீட்டிற்கு வரும் விருந்தாளிகளுக்கும் சிற்றுண்டியாக வழங்குவோம்.




இன்று அக்குறானைப் பகுதியின் அந்தப் பாலைமரங்களெல்லாம் கடைசிப் போரில் காணாமல் போயின. எனக்குத் தேன் கொண்டு வரும் ஒரு பெண்மணியைச் சந்தித்து, "தேன் ரொம்பக் குறைச்சலோ" என்று கேட்டேன். அதற்கு அந்தப் பெண்மணி, பெரும் ஆதங்கத்துடன், "ஐயா! சண்டையில நம்மட குஞ்சு குருமானெல்லாம் அழிச்சிப் போட்டானுகள்" என்றார்.

இங்கு குஞ்சு குருமான் என்பது தாங்கள் பெற்ற பிள்ளைகளைத்தான். ஆனால் அவர் சொன்னதோ தேன் பூச்சிகளை. காட்டில் வாழும் மனிதர்களுக்கு தேன் பூச்சிகளும் பாலை மரங்களும் தாங்கள் பெற்ற பிள்ளைகளன்றோ!

☐ நவம்பர் 11. 2015




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்வம் (வில்வெத்திரி)

1950களில் எமது கிராமங்களில் ஆங்காங்கே இந்த மரங்கள் காணக் கிடைத்தன. ஓரளவு வைரமான இந்த மரத்தின் கிளை இடுக்குகளில் கடினமான முட்களும் காணப்படும். இலை மூன்று அல்லது ஐந்து சிற்றிலைகளைக் கொண்டிருக்கும். பூக்கள் நல்ல மணத்துடன் பசுமை கலந்த வெள்ளை நிறத்தில் கொத்துக்கொத்தாகக் குதூகலிக்கும்.

பருவ காலத்தில் இலைகள் உதிர்ந்து அக்டோபரில் மீண்டும் துளிர்க்கும்.

காய்கள் ஒரு பெரிய விளாம்பழ அளவில் பச்சையாகவும் பழுக்கும் தருணத்தில் சாம்பல் நிறத்திலும் காணப்படும். பழத்தின் ஓடு கடினமாக இருக்கும். இந்த ஓட்டை தூளாக்கிப் பொடி செய்து நாட்பட்ட வயிற்றுளைச்சலுக்கு தேனுடன் கலந்து கொடுப்பார்கள். உள்ளே பழம் ஒரேஞ் நிறத்தில் நல்ல மணத்துடன் இருக்கும். பாதி பழுத்த பழங்கள் பசியைத் தூண்டும் வல்லமை மிக்கவை. இதன் இலை, வேர், பழம் அனைத்திலும் நோய் எதிர்ப்பு சக்தி இருப்பதாக அறிய முடிகிறது.



இலங்கையில் குருணாகல், அநுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களிலும் மலையடிவாரங்களிலும் பரவலாக இவை காணப்படுகின்றன. இதன் அருமை பெருமைகளை நன்கு அறிந்தவர்கள் நமது அயலவர்களான சிங்கள மக்களே.

புதிய புதிய மருத்துவம், மயக்கமருந்தின்றியே அறுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகிச்சை என்ற மருத்துவ துறையின் அபார வளர்ச்சி காரணமாக எமது பாரம்பரிய மூலிகை மருத்துவத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழந்தாலும் சொற்ப வருமானமுள்ள ஏழை எளிய மக்களுக்கு எமது மூலிகை மருத்துவமே அன்றும் இன்றும் கை கொடுத்து வருகிறது.

குறிப்பு: இங்கே படத்தில் உள்ள மரம் ஓட்டமாவடி 02ம் வட்டார மருங்கைக்கேணி வீதியில் எஸ்.எம். பதுறுதீன் அவர்கள் வீட்டின் முற்றத்தில் நிற்கிறது.

□ ஏப்ரல் 28, 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சல்லி மரம்

நேற்று, தனிப்பட்ட முறையில் மூதூருக்குப் போக வேண்டிய தேவை ஏற்பட்டது. மூதூர் நகரம் மிகவும் பழமை வாய்ந்தது. தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து வாழ்ந்த கிராமம். தமிழ் முஸ்லிம் உறவுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த மண். இலங்கையில் இவ்வாறானதொரு கிராமம் எங்குமே இல்லை. அவ்வளவு அந்நியோன்னியமாக தமிழர்களும் முஸ்லிம்களும் வாழ்ந்தார்கள்.

நேற்று காலையில் 8 மணி தொடக்கம் 11 மணி வரையிலும் மூதூரின் வீதிகளெல்லாம் கால் நடையாகவே சென்றேன். புகழ் பெற்ற நொக்ஸ் வீதியின் முடிவில் இந்த மரம் எனது கண்ணில் பட்டது. மரத்தின் விகாசமும் சடைத்து வளர்ந்த கிளைகளும் சிறிய இலைகளும் என்னை மிகவும் கவர்ந்தன. பக்கத்து வீட்டாரிடம் மரத்தைப் பற்றி விசாரித்தேன்.

இளவயதுக்காரர் எவருக்கும் மரத்தைப் பற்றி எதுவும் தெரியாதிருந்தது. வயதில் முதிர்ந்த ஒரு ராத்தா வீட்டினுள் இருந்து வெளியே வந்தார். என்னைப் பற்றி அறிந்து கொண்ட பின், மரத்தைப் பற்றிச் சொல்லத் தொடங்கினார்.


“தம்பி! இதுர பேரு சல்லி மரம். நாலாம் அஞ்சாம் மாசத்தில பூத்து, கச்சான் காத்துக் காலத்தில காச்சி, காத்தில பறக்கும். பூ பச்ச நிறமா, கொத்துக் கொத்தா இருக்கும். காய்கள் சதுரமா, மத்தியில ஒரு கொட்டையோட இருக்கும். நடுவுல இருக்கும் காயின் விதைகளெ குத்தி தோல் போக்கி, பாகுல போட்டு நிலக்கடலத் தட்டுப் போல செய்து சாப்பிடுவோம்.

“அம்பது அறுவது வருசத்துக்கு முதல் மூதூர்ல அங்கங்க ஒவ்வொரு வளவிலயும் நிண்டது. இப்ப மிஞ்சிக் கிடக்கிற ஒரேயொரு மரம் இதுதான். பின்னேரத்தில இந்த கொட்டெயயும் அரிசயும் வறுத்து, தேங்காய் சீனி கலந்து உரல்ல போட்டு துவைத்து உருண்ட செய்து பிள்ளைகளுக்குக் குடுப்பம். கமகமண்டு மணக்கும். இப்பவெல்லாம் இதெச் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கும் நேரமில்ல. பக்கட்டில கிடக்கிற பொரிச்சதெல்லாம் வாங்கி, பிள்ளைகள் இண்டெக்கித் தின்னுது. எங்கட காலத்தில நாங்க சாக்குச்சாக்கா இந்தக் கொட்டெகள சேமிச்சி வெச்சி நேரம் கிடெக்கிற போது வித விதமா செஞ்சி சாப்பிடுவம்.




"எண்டைக்கு நம்மட ஆணும் பெண்ணும் வெளிநாட்டுக்குப் போனாங்களோ அண்டைல இருந்து நம்மட சாப்பாடு, உடுமானம், வீடுவாசல் எல்லாம் மாறிப் பெய்த்து".

ராத்தா மிகவும் வேதனையோடு தனது கவலையை வெளிப்படுத்தினார். எனக்கோ மரம் பற்றிய தகவலை அறிந்து கொண்டது மட்டற்ற மகிழ்ச்சி.

இந்த மரத்தை நமது பகுதியில் எங்காவது பார்த்திருக்கிறீர்களா நண்பர்களே! அப்படியென்றால் என்ன பெயர் சொல்லி அழைக்கிறார்கள்?

☐ நவம்பர் 8, 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இனிய மாமரமே!

1960களில் ஓட்டமாவடி முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கிறேன். எட்டாம் ஆண்டில் பதினான்கு பேர்.

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையிலிருந்து எங்கள் அன்புக்குரிய கணித ஆசிரியர் அமரர் உயர்திரு எம். குமாரவேலு அவர்கள் எங்கள் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து எங்கள் பகுதிக்கு ஆசிரியர்களாக வந்த பலரும் பாடசாலை விடுதியிலோ அல்லது பக்கத்திலுள்ள யாழ்ப்பாண அதிகாரிகள் தங்கியிருக்கும் அரச விடுதிகளிலோ தங்குவார்கள். தவணைக்கு ஒரு முறைதான் ஊருக்குச் செல்வார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் விடுமுறை எடுப்பதே கிடையாது. பாடசாலை காணியில் தோட்டமும் போடுவார்கள். அங்கிருந்துதான் நான் விவசாயம் கற்றுக் கொண்டேனோ!


திங்கள் கிழமை பாடசாலை ஆரம்பம் என்றால், சனிக்கிழமை மாலை கோச்சியில் யாழ்ப்பாணத்திலிருந்து வாழைச்சேனைக்கு வருகை தருவார்கள். நாங்கள் மாணவர்கள் சிலர் ஸ்டேஷனுக்குச் சென்று ஆசிரியர்களின் பெட்டிகளையும் ஏனையவற்றையும் சுமந்து வருவோம்.


இவ்வாறு ஒரு விடுமுறையின் போது ஊர் சென்ற குமாரவேல் ஆசிரியர் அவர்கள், வரும்போது, இந்த மாங்கன்றைக் கொண்டு வந்தார். அம்பலவி மாங்கன்று. மூங்கில் கொட்டுக்குள் மாங்கன்று. அப்பொழுதெல்லாம் ஒட்டுக் கன்றுகளை மூங்கில் குழாய்களில் அடைப்பார்கள்.

அதிபரின் காரியாலயத்திற்கு முன்னாடி பாடசாலை வளவிலிருந்த பிரமாண்டமான ஆலமரத்தின் கிளைகளைத் தறித்து காலை கட்டி கண்ணுங்கருத்துமாக அந்த மாங்கன்றை எட்டாம் வகுப்புப் படித்த நாங்கள் வளர்த்து வந்தோம். கிட்டத்தட்ட இன்று மாமரத்திற்கு 55 வருடங்கள். பாடசாலையில் நிகழ்ந்த அனைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாறுகளுக்கும் மாமரம் ஒன்றே இன்று எஞ்சிப் போன சாட்சியமாக இருக்கிறது.

சூறாவளி, பெருவெள்ளம், முப்பதாண்டு கால யுத்தம் இத்தனையும் கடந்து வாழுகின்ற எம் இனிய மாமரமே!

அண்மையில் பாடசாலைக்குச் சென்ற நான் இந்த மாமரத்தின் வரலாறை அதிபர் நெய்னா முகம்மத் அவர்களுக்கு எடுத்துக் கூறினேன். அதன் பின்பு இந்த மாமரத்திற்கு வெள்ளை மை அடித்து கொஞ்சம் அழகுபடுத்தி இருக்கிறார்கள்.

இன்னும் பல்லாண்டுகள் இந்த மாமரம் வாழ எனது முகநூல் நண்பர்கள் பிரார்த்தனை புரியுங்கள்.

பாலிகா பாடசாலை மாணவிகளே! உங்களின் சகோதரிகளில் ஒருவர் போல் இந்த மாமரத்தைப் போஷித்து வாருங்கள்.

☐ ஏப்ரல் 22, 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# காட்டு மா

1950களில் நமது பிரதேசங்களின் வெம்பு மணற் காடுகளில் இந்தக் காட்டு மாமரம் பெரும் பெரும் விருட்சங்களாக வளர்ந்து நமது பூமியை அலங்கரித்தது.

மார்ச், ஏப்ரல் மாதங்களில் பூத்து, ஜூலை, ஆகஸ்டில் பழம். வெள்ளை நிறத்தில் கொத்துக் கொத்தாகக் காய்கள் தொங்கும். காய்ப் பருவத்தில் சரியான புளித்தன்மை உடையது. பழுத்தால் தேன் போல் இனிக்கும். காய்கள் ஒரு அங்குல நீளவாக்கில் அம்பர்லங்காயின் வடிவத்தில் இருக்கும்.

எங்கள் சிறுபராயத்தில் பழங்களைப் பொறுக்கி, கசக்கி உறிஞ்சிக் குடிப்போம். பல தடவைகள் மாங்கொட்டையும் தொண்டைக்குழியால் வயிற்றுக்குள் சென்று விடும்.

பெரும்பாலும் இந்த மரங்களை தோணிகளுக்கும், நாற்பது ஐம்பது பேரை ஏற்றி ஆற்றைக் கடக்கும் வள்ளங்களுக்கும் பயன்படுத்தினார்கள். மரங்களைத் தறித்து நான்கைந்து பேர் இரண்டு மூன்று மாதங்களாக மரத்தைக் குடைந்து தோணி அல்லது வள்ளமாக்கி வண்டில்களில் ஏற்றிச் செல்வார்கள். வேறெந்தத் தேவைகளுக்கும் இதைப் பயன்படுத்த மாட்டார்கள். விறகாக உபயோகிக்கும் பொழுது அடுப்பிலிருந்து தீச்சுவாலைக்குப் பதில் புகையே எழும்பும்.




ஞாபகத்தில் கிடந்த இனிப்பான மாமரத்தைத் தேடிப் போனால், அங்கே மரத்தின் அழிந்த எலும்புக் கூடுகளும் சிராய்களும் கிளைகளும் எச்சங்களாகக் கிடக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960களில் மாங்கன்று ஒட்டுபவர்கள் இதன் விதைகளையே நட்டி கன்று எடுப்பார்கள். இதன் மூலம் ஒட்டும் கன்றுகள் வீரியமாக வளரக் கூடியவை.

இந்த மாமரங்களை இப்பொழுது காண்பதே அரிதாகிப் போனது.

□ நவம்பர் 20, 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாறணை

சாறணைக்கீரை பற்றித் தெரியுமா நண்பர்களே!

நமது முன்னோர்களின் உணவில் குப்பைக்கீரையும் சாறணையும் முக்கிய கறிகளாகும்.

சாறணை, அதிக கிளைகளுடன் சாறு நிறைந்து நிலத்தில் படரும் தாவரம்.


இலைகள் வட்டவடிவமாகி முடிவில் கூம்பி இருக்கும்.

மிகச் சிறிய பூக்கள் இலைக்காம்பின் அடியில் மறைந்து பூக்கும்.

முற்றிக் காய்ந்த பூக்களைப் பிரித்துப் பார்த்தால் கறுப்பு நிறமுள்ள சிறுநீரக வடிவில் ஏராளம் விதைகள் குடிகொண்டிருக்கும்.

சாறணைக்கீரை மருத்துவப் பண்புள்ளது.

கல்லீரல், சிறுநீரகப் பாதிப்புக்குள்ளானவர்களின் வீங்கிப் போன உடம்பிலிருந்து நீரை வெளியேற்றுவதற்கு நமது நாட்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர்கள் கைமருந்தாகக் கொடுத்திருக்கிறார்கள். வெற்றியும் கண்டிருக்கிறார்கள்.

நாம் பெரும்பாலும் சுண்டுவதற்கும் சொதி வைப்பதற்கும் உபயோகப்படுத்தி வந்திருக்கிறோம்.

ஆட்டுப்பட்டிகள் உள்ள இடங்களில் அதிகம் காணலாம்.

மனிதர்கள் சாறணைக் கீரையை மறந்து போனாலும், அது எமது பகுதியில் ஆடு மாடுகளின் உணவில் முக்கிய பங்கு வகிக்கிறது.

கொழும்பு மருதானை பொதுச்சந்தை வீதியின் இரு மருங்கிலும் காலை வேளையில் இந்தக் கீரைகள் சிங்களப் பெண்களின் கைகளில் மதர்த்துச் சிரிப்பது மனங்கொள்ளத்தக்கது.

நண்பர்களே! டின்களில் அடைபட்டு வரும் பிளாஸ்டிக் கீரைகளை நாம் உண்ணும் காலம் வெகுதூரத்திலில்லை.

☐ பெப்ரவரி 13, 2016




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டூர் பெனி வர்க்கா

*1968* பேராதெனிய கமத்தொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் வாழ்ந்த வீதியால் போய்க் கொண்டிருந்தேன். கம கம என்று பலாப்பழத்தின் வாசனை மூக்கைத் துளைத்தது. நான் குரோட்டன் வேலிக்கு மேலால் அந்தக் காட்சியைப் பார்த்தேன். திணைக்களத்தின் தொழிலாளர் ஒருத்தர் பழத்தை அதரப்பதற சாப்பிட்டுக் கொண்டிருந்தார். இதோ அவர் சொன்ன கதை:

"சாமி! பத்து வருசத்துக்கு மொதல்ல சம்முகம்னு ஒரு பெரியவரு இங்க வாழ்ந்தாரு. பெரிய உத்தியோகத்தரு. இந்த கமத்தொழில் திணைக்களத்திற்கு கடைசியாக இருந்த தமிழ் தலைவர்னு (Director) எல்லோரும் பெருமையா பேசிக்குவாங்க. ஒருவாட்டி அவரு மட்டக்களப்புக்கு போன நேரம் புகழ்பெற்ற மண்டூருக்கும் போய் வந்தாரு. மண்டூர் கோயில் தரமகர்த்தா அவர்கள் கோயில் வளாகத்தில் இருந்த நல்லா முத்தின பலாக்காய் ஒன்டை ஆஞ்சி குடுத்திருக்காரு. அந்த மரம்தான் இந்த மரம் என்று எல்லாரும் சொல்லிக்குவாங்க. சம்முகம் ஐயாதான் இந்த







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய பங்களாவில கடைசியாக வாழ்ந்த தமிழ் ஐயா. இப்ப இந்த மரத்தின் பழத்தெ மண்டூர் பெனி வர்க்கா என்டு சொல்றாங்க."

அவன் கதையை முடிக்கும் போது வரலாறும் பலாச்சுளையின் சுவையும் எனது எண்ணங்களிலும் நாவிலும் பல வகையான சுவையாக பெருக்கெடுத்திற்று.

அந்த மண்டூர் பலாமரத்தின் ஒரு வாரிசுதான் வாழைச்சேனை மனநல காப்பகத்தில் வளர்ந்து வருகிறது. கண்ணுங் கருத்துமாக அதைப் பராமரிக்கின்ற அத்தனை நண்பர்களுக்கும் எனது நன்றிகள்.

வைத்தியசாலையின் சுற்றுச் சூழலும் மனதுக்கு இதமாக இருக்கின்றது.

கண்மலராய் முக்கனியே.

☐ ஜூன் 17, 2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் சுதந்திரம்

90 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள். திங்கட்கிழமை காலை 8 மணிக்கெல்லாம் மாகோவிலிருந்து புகையிரதம் மட்டக்களப்புக்கு வருமென்ற செய்தி அந்தக் கிராமங்களில் காட்டுத்தீயாகப் பரவுகின்றது.

தான் வாழும் குடிசையிலிருந்து நாலு கால் பாய்ச்சலில் அந்தச் சிறுமி புகையிரத வீதியின் கரையில் காத்து நிற்கிறாள்.

புகையிரதம் பெரும் அலறல் சத்தத்துடன் ஓட்டமாவடிப் பாலத்தைக் கடந்து வந்து கொண்டிருக்கிறது. கால்நடைகளெல்லாம் நாலு பக்கம் சிதறிப் பாய்ந்து செல்கின்றன. பெண்டுகள் குரவையிட்டு மகிழ்ச்சி ஆரவாரத்தில் திளைக்கிறார்கள்.

ஒவ்வொரு நாளும் அந்தக் குறித்த நேரத்தில் அச்சிறுமி புகையிரத வீதிக் கரையில் காத்து நிற்பதும், ஓட்டுநரின் உதவியாளர் புகையிரதத்தை நிறுத்தி சிறுமியைப் பார்த்து மகிழ்ந்து செல்வதும் பல நாட்கள் தொடர்கிறது. ஒவ்வொரு நாளும் சிறுமிக்காக சில நிமிடங்கள் தரித்துச் செல்லத் தொடங்குகிறது புகையிரதம். அந்தத் தரித்தலில் காதல் துளிர்விடுகிறது.

மத்தசாமி எனும் அந்த சிங்கள இளைஞனுக்கும் ஆசியா உம்மா என்ற அந்த அழகிய சிறுமிக்கும் அங்கிருந்து காதல் மலர்கிறது.

வெளியூருக்குச் செல்பவர்கள், ரயில் நிலையம் செல்லாமலே, ரயிலை நிப்பாட்டித் தருமாறு ஆசியா உம்மாவிடம் சொல்வார்கள். ஆசியா உம்மா கை போட்டால் ரயில் நிற்கும்.

சில நாட்களில் ஆசியா உம்மா, ரயிலேறி மத்தசாமியுடன் மட்டக்களப்புப் போய் திரும்பி வருவாள். ரயில் பயணம் அவளுக்குப் பெரும் கொண்டாட்டம்.

அந்தக் கிராமத்தை எதிர்த்து அந்த யுவதியும் இளைஞனும் திருமணம் முடித்து வாழத் தொடங்குகிறார்கள். அதற்காக இருவரும் ஊர் விலக்கம் செய்யப்படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிங்கள சமூகத்தைச் சேர்ந்த ஊர் பேர் தெரியாத ஒரு இளைஞன் ஓட்டமாவடியில் ஒரு முஸ்லிம் யுவதியை நூறாண்டுக்கு முதல் காதல் திருமணம் புரிந்த வரலாற்றின் ஒரு பக்கத்தை இந்த 73 ஆவது சுதந்திர தினத்தில் மிக்க உவப்புடன் பதிவு செய்கிறேன்.

மத்தசாமி என்கின்ற அப்துல் கரீம் அவர்களை நான் ஓட்டமாவடி சந்தியில் காணும் போது எனக்கு வயது பத்து இருக்கும். உம்மாவுக்கு மலைவெற்றிலையும் கண்டிப் பாக்கும் அவர் கடையில்தான் வாங்கி வருவேன்.

அவரின் எழுபத்தைந்து வயதுத் தோற்றம் பாரத தேசத்தின் புகழ்பெற்ற கவிஞர் தாகூரின் அதே தோற்றம். அவ்வப்போது அவர் இவ்வாறு சொல்லிக் கொள்வார்:

“கண்டா அப்துல் கரீம், காணாட்டி மத்தசாமி”

சிங்களத் தமிழ் சீறிப் பாயும்.

வரலாற்றை இங்கிருந்து கற்போமா?

☐ பெப்ரவரி 3, 2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் முதுசொம் - அதிபர் பிரின்ஸ் காசிநாதர்

1985 தமிழ் முஸ்லிம் இனச்சங்காரம் அரங்கேறிய சித்திரை மாதத்தின் ஒரு பகற்பொழுதில் நான் இந்த மாமனிதரை எனது மதிப்புக்குரிய ஆசான் திரு. சண்முகநாதன் (கற்குடா) ஐயா அவர்களின் வீட்டில்தான் சந்திக்கிறேன். அன்றிலிருந்து இன்று வரை இவருடனான நட்பும் நெருக்கமும் தொடர்கின்றன.

1926 ஜூலை 21ல் ஐந்து சகோதரர்களில் இரண்டாவது பிள்ளையாக மட்டக்களப்பில் பிறந்தார். சென்ற 21ம் திகதி 90 வயதை அடைந்திருக்கும் இம்மாமனிதர் எங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் பெருமை மிகு பொக்கிஷம் என்பேன்.


இவரின் ஆரம்பப் பள்ளிவாழ்க்கை மட்டக்களப்பின் புகழ்பூத்த வின்சன், சிசிலியா கல்லூரிகளின் தோழிகளுடனேயே தொடர்கிறது. பின்னர் மெதடிஸ் மத்திய கல்லூரியின் மூலமே எஸ்எஸ்சி பரீட்சைக்குத் தோற்றிய பின்னர், 1951, 52 காலப்பகுதியில் மகரகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று தாம் கல்வி கற்ற மெதடிஸ் மத்திய கல்லூரியில் ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக 35 வருடங்கள் கல்விப் பணியாற்றினார்.

இவரிடம் கல்வி கற்ற மாணாக்கர்களில் பலரும் இன்று உன்னத நிலையில் இருக்கிறார்கள். இவரின் காலம் மெதடிஸ் மத்திய கல்லூரியின் பொற்காலம் என்பார்கள்.

சிறந்த சமூக சேவையாளரான அதிபர் அவர்கள் 1989ல் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினராக இலங்கை பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். நாடாளுமன்றத்தின் கல்வி சம்பந்தமான ஆலோசனைக் குழுவிலும் அங்கம் வகித்தது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1988ல் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் மட்டக்களப்பு பிரஜைகள் குழுத் தலைவராகவும் பெரும்பணியாற்றியதுடன் சர்வதேச மன்னிப்புச் சபையினரால் ஜேர்மனியில் நடத்தப்பட்ட அனைத்துலக மாநாடு ஒன்றிலும் கலந்து கொண்டு நாட்டிற்குப் பெருமை சேர்த்தார்.

சீனா, ரஷ்யா, ஜப்பான், நெதர்லாந்து, அமெரிக்கா, பாகிஸ்தான், ஜேர்மன் என்று உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று வந்த அனுபவஸ்தர்.

அவருடனான உரையாடலின் நடுவே, "ஹனிபா! நானொரு சட்டத்தரணியாக வரவேண்டுமென்றே ஆசைப்பட்டேன். ஆனால் விதி என்னை ஆசிரியராக்கியது. அதை நினைத்து நான் பெருமைப்படுகிறேன். திருகோணமலை தொடக்கம், பொத்துவில் வரையிலும் என்னிடம் கல்வி கற்ற ஏராளம் மாணவர்கள் இன்றும் என் மீது அக்கறையும் அன்பும் காட்டி வருவது ஆசிரியர் தொழில் மூலம் நான் அடைந்த பெரும் பேறாகும்" என்றார்.

ஆங்கிலத்தில் பெரும் புலமை வாய்ந்த ஐயா அவர்கள், பெரும் பெரும் அவைகளில் நகைச்சுவையாகப் பேசி, தமது கருத்துக்களை சாதாரண மக்களிடம் முன்வைப்பதில் வல்லவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றுப் பேசிக் கொண்டிருக்கும் போது, "ஹனிபா! பிரபாகரனுக்கு முதல் நான்தான் பெரிய பயங்கரவாதி. என்ட கையால அடி வாங்காத மாணவன் எனது கல்லூரியில் எவருமில்லை" என்றார்.

"ஐயா! இப்ப அடிச்சா, பொலிஸில் நீங்கள்" நான் வெளியில் சொல்லவில்லை.

இவரின் இரண்டு பெண் மக்களான சர்மினியும் பிரேமினியும் இங்கிலாந்திலும் ஜேர்மனியிலும் வாழ்ந்து வருகிறார்கள். சுனாமியின் போது தமது மனைவியை இழந்த அதிபர் அவர்கள், பாழடைந்த பென்னம்பெரிய வீட்டில் அட்டைகள் உருக்குலைந்த சில நூறு புத்தகங்களுடனும் அழகிய பழங்காலத்து மரத்தளபாடங்களுடனும் தனிமையில் வாழ்கிறார்.

இத்துணை மகிழ்ச்சியில் வாழும் 90 வயது இளைஞனைக் காண்பதும் உரையாடுவதும் பெறற்கரிய பேறன்றோ!

எங்களின் உரையாடலின் நடுவே மாங்காய் லொறிக்காரர் மாங்காய் கேட்டு வருகிறார். நான் சிங்களத்தை தமிழ்ப்படுத்துகிறேன். அவர், "ஹனிபா! அவனுக்கிட்டச் செல்லு, வீடும் மரமும் எனக்குரியதல்ல, பைபாஸ் பண்ண பணமில்லாமல் வீட்டை விற்று விட்டேன். வீட்டின் சொந்தக்காரரோடு பேசி விட்டு நாளை சொல்கிறேன். வரச்சொல்" என்றார்.

நான் அதிர்ந்து போனேன்.

உரையாடலுக்கான அனைத்து ஜன்னல்களும் அவரின் அந்த வார்த்தைகளில் தானாக மூடிக் கொள்ள, பொழுது வலையிறவுப் பாலத்தில் இறங்கிக் கொண்டிருந்தான்.

அவரிடமிருந்து விடை பெறும் தருணம், திடீரென அவரின் கரங்களைப் பிடித்து, கன்னத்தில் முத்தமிட்டு, "எங்கள் மண்ணின் வாசனை! நீங்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ வேண்டும்" என்று வாழ்த்தி, விடைபெறும் வேளையில், ஒஸ்லோவில் வாழும் அவரின் மாணவனும் எழுத்தாளருமான சஞ்ஜயன் செல்வ மாணிக்கத்தின் அன்பான விசாரணையை எத்தி வைத்து விட்டு விடைபெற்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரைச் சந்தித்ததும்
அந்த சந்திப்பிலே
வாயால் வர்ணிக்க முடியாத
பரிவு பொங்கி வழிகிறதோ,
யாருடைய கரங்களைக்
குலுக்கும் போது
அற்புதமான காவியத்தைப்
படிப்பது போன்று
மெய் சிலிர்க்கிறதோ
யாருடைய செழுமை மிக்க இயல்புகள்
அமைதியின்மையும் பொறுமையின்மையுமான
மனத்திற்கு
ஆறுதல் அளிக்கின்றதோ
அத்தகைய மனிதர்களை
சந்தித்த நாட்கள்
மறக்க முடியாத
மகிமை பொருந்திய நாட்களாகும்.

☐ ஜூலை 24, 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுலக்சன

இன்று காலையில் லண்டனிலிருந்து வந்த சாராவின் தோழியைக் காண பொலன்னறுவை சென்றேன்.

பழைய நினைவுகள் கிளர்ந்தெழுந்தன.

1988, ஜேவிபி இயக்கம் என்று அடையாளங் காணப்பட்ட சிங்கள இளைஞர்கள் துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்டு எரியூட்டப்படும் இடமாக எங்கள் அரச பண்ணை திகழ்ந்தது.

அதேபோல், 1988, பெப்ரவரி 14 என்று ஞாபகம், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் காமினி மெதகெதர என்ற ஆங்கில ஆசிரியர் ஒரு பகற்பொழுதில் எனது கண் முன்னாலேயே ஜேவிபி இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் பற்றி பின்னர் எழுதுகிறேன்.

காலையில் 8 மணிக்கெல்லாம் நான் எனக்குரிய பகுதிகளில் எனது சைக்கிள் வண்டியில் பயணிப்பேன்.

அளுத்வெவயைச் சுற்றிய எனது பயணம் பொலன்னறுவை நகரத்தில் முடிவடையும். பத்து இடங்களில் தரித்துச் செல்வேன்.

பொலன்னறுவை றோயல் கல்லூரியின் அதிபர் எனக்கு நண்பராக இருந்தார். அவரிடம் இரண்டு அழகிய பசுக்கள் இருந்தன. கல்லூரிக்குப் பக்கத்தில் அவர் வீடு. பெரும்பாலான நேரங்களில் அங்கு தேநீர் அருந்துவேன்.

அங்குள்ள மாணவர்களிடம் கல்வி பற்றி விசாரிப்பேன்.

"விஞ்ஞானத்தில் எத்தனை புள்ளிகள்?"

"30"

"ஆங்கிலத்தில்?"

"அதைக் கேக்காதீர்கள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கணிதத்தில்?”

“அதுவும் கஷ்டம்”



றோயல் கல்லூரியாக இருந்தாலும் அந்தக் கால கட்டத்தில் அங்கு கல்வியின் நிலைமை கொஞ்சம் மோசமாகவே இருந்தது. இன்று அந்த நிலை மாறியுள்ளது.

இன்று, வெலிக்கந்த, செவனப்பிட்டியிலிருந்து என்னோடு பயணித்த றுறு. சுலக்சன என்ற ஆறாம் ஆண்டு மாணவருடன் உரையாடி வந்தேன்.

அவர் ஒவ்வொரு நாளும் காலையில் 5 மணிக்கு எழுந்து, 2 கி.மீ. தூரம் நடந்து பஸ் பிடித்து பொலன்னறுவைக்குச் செல்கிறார். தகப்பன் ஒரு எலக்ட்ரீசியன், தாய் வீட்டில் வேலை செய்பவர் என்றார். நான்கு குழந்தைகளில் தான் மூன்றாமவர் என்றார்.

முப்பதாண்டுகளுக்கு முதல் றோயல் கல்லூரி மாணவரிடம் நான் கேட்ட அதே கேள்விகளை சுலக்சனவிடமும் கேட்டேன்.

“விஞ்ஞானம்?”

“98”

“கணிதம்?”

“92”

“ஆங்கிலம்?”

“96”

“உங்கள் வகுப்பில் எத்தனை மாணவர்கள்?”

“42 பேர்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் எத்தனையாவது?"

"மூன்றாம் பிள்ளை"

எனது மனசு குளிர்ந்து போனது.

அந்த மாணவனுடைய தோற்றமும் அழகும் எனது இரண்டாவது பேரன் இஜாஸ் அஹமதை நினைவுபடுத்தியது.

மீண்டும் நான் அவரிடம்

"காலையில் என்ன சாப்பிட்டீர்கள்?"

"சோறும் சம்பலும்" என்றார்.

அதற்கும் நான் அவரிடம் சபாஷ் போட்டேன்.

தான் கென்டீனில் எதையும் சாப்பிடுவதில்லை என்று கூறி, அம்மா சமைத்துக் கொடுத்த அழகிய பொட்டலத்தைக் காட்டினார்.

அந்தச் சின்னஞ்சிறிசிடம் நான் இவ்வாறு கூறினேன்.

"சுலக்சன, நான் ஒரு முஸ்லிம். நீங்கள் ஒரு சிங்கள பௌத்தர். நமக்கு முன்னால் இருக்கின்ற நிறையப் பேர் தமிழர்கள். நாம் எல்லோரும் சேர்ந்துதான் நமது தேசத்தை அன்புடனும் புத்தன் சொன்ன அஹிம்சையுடனும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். கொஞ்சக் காலம்தான் நாம் வாழப் போகிறோம். நமக்குள் ஏன் சண்டை சச்சரவு? அன்பால் இந்த உலகத்தை வெற்றி கொள்வோம்" என்றேன்.

என்னுரையின் சாராம்சம் புரிந்தவன் போல், என்னை வியப்புடன் பார்த்து, அழகிய புன்னகையுடனும் என் தோளில் கையைப் போட்டான்.

☐ ஜூலை 19, 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழாக் காணும் எனது சைக்கிள் வண்டி

நேற்றுப் போல் இருக்கிறது, ஜி.சி.ஈ. ஓ.எல். வகுப்பில் எட்டுப் பாடங்களிலும் சித்தியடைந்தால், ஒரு சைக்கிள் வாங்கித் தருவதாக வாப்பா சொன்னார். அதை நிறைவேற்றியும் வைத்தார்.

அந்த நாள்களில் சைக்கிள் என்பது பெரும் சொத்து. அதுவும் இங்கிலாந்து தயாரிப்புகளான Raleigh, Rudge, Humber, BSA... இந்த சைக்கிள்களுக்குத்தான் பெரும் மதிப்பு. ஒவ்வொரு நாளும் துடைத்து அலங்காரம் செய்து வைத்திருப்பார்கள்.

1963ல், ஒரு ரெலி சைக்கிளின் விலை 220 ரூபா. ஒரிஜினல் சீற் பூட்ட வேண்டுமென்றால் மேலதிகமாக 25 ரூபா கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் மேடின் இங்கிலாந்து என்ற பெயருடன் "Terry seat" ஒன்று பூட்டித் தருவார்கள். வாப்பா செலவைப் பார்க்காமல் எனக்கு அந்த சீற்றிலும் ஒன்றை வாங்கிப் பூட்டித் தந்தார்.

முப்பது வருடங்களாக என் வசம் இருந்த சீற். பின்னர் ஒரு நாளில் எனது உறவினர் ஒருவரால் களவாடப்பட்டு அதற்குப் பதிலாக ஒரு லோக்கல் சீற் அணிவிக்கப்பட்டிருந்தது. அது வேறு கதை.

இந்தத் தேசத்தில் என்னுடைய சைக்கிள் போகாத இடமில்லை. பதினெட்டு வயதிலேயே இந்த சைக்கிள் யாழ்ப்பாணத்தைப் பார்த்து விட்டது. கிளிநொச்சி விவசாயப் பாடசாலையில் படித்த அந்த நாட்களில் இரணைமடுக் குளம், ராமநாதபுரம், வட்டக்கச்சி, ஹட்சன் வாய்க்கால், குமாரபுரம், பரந்தன், உருத்திரபுரம், யாழ்ப்பாணம் என்று இந்த சைக்கிள் மிக இலாவகமாக என்னை ஏற்றிக் கொண்டு வலம் வரும்.

அதே போல் வத்தேகம, பன்வில, குண்டசால, அக்குறன என்று மலைநாட்டிலும் எனது சைக்கிள் ஏறுவதும் இறங்குவதுமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த நாட்களுமுண்டு. நான் வத்தேகமவிலும் பன்விலயிலும் கடமை புரிந்த நாட்களில் மாலை நேரங்களில் முத்தையா அவர்களின் லக்கிலேண்ட் பேக்கரியில் பாணும் ரஸ்கும் வாங்க இந்த சைக்கிளில் போய் வருவேன். மிக மலிவாகக் கிடைக்கும்.

அந்த நாட்களில் சைக்கிளில்தான் கண்டியிலிருந்து லக்கிலேண்ட் பேக்கரிக்கு மா மூடைகள் வரும். அந்தக் காட்சியை நான் பார்த்து நிற்பேன்.


கெக்கிராவயில் நான் கடமை புரிந்த நாட்களில் கலாவெவ, பலலுவெவ, புத்தரின் பெரிய பிரமாண்டமான சிலை இருக்கின்ற அவுக்கன போன்ற ஊர்களுக்கெல்லாம் இந்த சைக்கிளில் போய் வருவேன். மாலை வேளைகளில் கலாவெவ அணைக்கட்டின் நீண்ட நெடுவீதியில் சைக்கிளில் பயணிக்கும் சுகம் இருக்கின்றதே, அதற்கு நிகர் இந்த உலகில் எந்தப் பயணமும் இருக்காதென்று நம்புகிறேன்.

வடமத்திய மாகாணத்தில் புத்தளத்தின் பல கிராமங்களுக்கும் எனது சைக்கிள் பயணித்து வந்திருக்கிறது. பொலன்னறுவை மாவட்டத்தில் எனது சைக்கிள் போகாத ஊரில்லை. 1970களின் ஆரம்பத்தில் வெலிகந்தையிலிருந்து திருக்கோணமடு, 24 கி.மீ. தூரம் ஒரு மணி நேரத்தில் பயணிப்பேன். போகும் பாதையில் யானை, கரடி, சிறுத்தை என்று மிக வேகமாக அதைக் கடந்து செல்வேன். ஒரு நாள், என்னையும் எனது மூத்த மகளையும் ஐந்து கி.மீ. தூரம் யானை துரத்த, யானையைத் துரத்தி துப்பாக்கிகள் சகிதம் பண்ணை முகாமையாளர் ஜீப்பில் வர, பெரும் திகில்.

1967ல் கொழும்பிலும் எனது சைக்கிள் ஒரு வருடம் இருந்திருக்கிறது. கொழும்பின் அத்தனை மூலை முடுக்குகளுக்கும் இந்த சைக்கிள் சென்று வரும். மறைந்த மலையக எழுத்தாளர் என்.எஸ்.எம். ராமையா அவர்களை அவரது வீட்டுக்கு அடிக்கடி போய் சந்தித்து வருவேன். அந்த நாட்களில் அவர் ஒரு ஹாட்வெயார் கடையில் கணக்கப்பிள்ளையாக இருந்த ஞாபகம். கிரான்பாஸ் வீதியால் நானும் ராமையாவும் சைக்கிளை உருட்டிக் கொண்டு பலாப்பழம் சாப்பிட்டுச் சென்ற காட்சி இன்னமும் மனத்தில் ருசிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படிக்கின்ற காலத்தில் எனது சைக்கிளில் பயணித்த எத்தனையோ சினேகிதிகளை, மதினிமார்களை இப்பொழுதும் நினைத்துப் பார்க்கிறேன். வேண்டுமென்றே அவர்களை சைக்கிளிலிருந்து கவிழ்த்துப் போடுவதும், எல்லோரும் குலுங்கிச் சிரிப்பதும்... அதற்குப் பெயர் கவிதை என்று சொல்வோமா?

இடையில் ஒரு விடயத்தைச் சொல்ல வேண்டும். அந்த நாள்களில் சைக்கிள் ஓடக் கற்றுக் கொள்வதென்பது ஒரு பெரிய காரியம். சைக்கிள் ஓடத் தெரியுமென்றால் அவரை மற்றவர்கள் ஒரு விமான ஓட்டிக்கு நிகராக மதிப்பார்கள்.

பழகுவதற்கென்றே சைக்கிள் பழுது பார்க்கும் கடைகளில் இரண்டு டயர்கள் மட்டுமுள்ள இறதல் சைக்கிள்களை வாடகைக்கு விடுவார்கள். ஒரு மணித்தியாலத்திற்கு பத்துச்சதம் வாடகை. இரண்டு நண்பர்கள் இரண்டு பக்கமும் பிடித்துக் கொள்ள இளவரசர் இறந்த சைக்கிளில் ஏறி அமர்வார். ஏறுவதும் விழுவதுமாக இரண்டு மாதங்கள் கடந்த பிற்பாடு ஒரு நாள் எப்படியோ சைக்கிள் இவரை ஏற்றிச் செல்லும். அப்படித்தான் நாங்கள் சைக்கிள் பழகினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுதெல்லாம் இரண்டு நாட்களில் சின்னஞ் சிறுவர்கள் சிட்டுக்கள் போல் சைக்கிளில் பறந்து செல்கிறார்கள். இதை என்னவென்பேன்?

அதே நேரம் எனது ஊரில் சைக்கிள் ஓடத் தெரியாதவர்கள் எத்தனையோ பேர் இன்னும் இருக்கிறார்கள்.

இன்று சைக்கிளுக்கு ஐம்பது வருடம். இத்தனை ஊருக்குச் சென்றும் இந்த சைக்கிளை நான் களவு கொடுக்கவில்லை. அதுதான் பெரும் சாதனை. பெரும் அதிர்ஷ்டம். (சென்ற வாரம், வாழைச்சேனை பொலிசார் ஒரு வருட காலத்திற்குள் 61 சைக்கிளைத் திருடி சாதனை படைத்த ஒரு இளைஞனைக் கைது செய்திருக்கிறார்கள்.)

நான் எனது வாழ்நாளின் பெரும் பயணங்களை சைக்கிளிலேயே கழித்திருக்கிறேன். சென்ற வாரம் என்னைப் பரிசோதித்த எனதருமை நண்பர் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் தம்பாவிற்ற அவர்கள் சைக்கிள் ஓடுவதை மெதுவாகக் குறைத்து விடுங்கள் என்று சொல்லி ஓரே போடு போட்டு விட்டார்.

எனது வயல் வரப்புகளையும் மரங்களடர்ந்த சோலைகளையும் நீரோடைகளையும் கடற்கரைகளையும் மனிதர்களையும் நண்பர்களையும் எனது மதினிமார்களையும் நான் நினைத்த நேரத்தில் காண்பதற்கு என்னை அழைத்துச் சென்ற என்னுயிர்த் தோழன் என்னுடைய இந்த சைக்கிள். எனது இறுதிப் பயணத்தில் அற்புதமான இந்த உலகை விட்டும் இந்த வாழ்வின் கடைசி யாத்திரையை எனது சைக்கிள் மூலமே நான் கடந்து சென்று மண்ணுக்குள் மறைந்தால் எப்படியிருக்கும்?

என்னருமை சைக்கிளே! உன்னிடமிருந்தும் விடை பெறுகிறேன்.

□ பெப்ரவரி 27, 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சராசரி ஏழைக் குடும்பத்திலிருந்து வந்த நான் எப்படியான வாழ்க்கையை வாழ்ந்து வந்துள்ளேன் என்பதை இந்த பத்திகள் எனக்குத் துலாம்பரமாக்குகின்றன.

எனது வாழ்நாள் பூராகவும் சிங்கள, தமிழ், முஸ்லிம் உறவுகளுக்காகவும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்காகவும் பாடுபட்டுள்ளேன். பயிர் வளர்ப்பதிலும் கால்நடைகளைப் போஷிப்பதிலும் உபதேசம் வழங்குவதிலுமாக பொழுதுகளைக் கழித்துள்ளேன்.

ஒரு நாற்பதாண்டு காலம் வேளாண்மை செய்திருக்கிறேன். அதில் இலாபம் என்பதை விட நஷ்டந்தான் அதிகம் சந்தித்திருக்கிறேன். அதற்கான உடலுழைப்பு ஏராளம்.

அரசியல் காரணங்களுக்காக இந்தத் தீவு பூராகவும் அலைந்திருக்கிறேன். சந்தோஷமாக அந்த இடமாற்றங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். புதுப்புது ஊர்களையும் புது மனிதர்களையும் காண்பதில் அடங்காத ஆசை கொண்டிருக்கிறேன்.

வாசிப்பதை ஒரு தவமாகவே கொண்டிருக்கிறேன். இலௌகீக வாழ்தலுக்கான தேடலில் இலக்கியத்தை ஊழியமாகக் கொள்ள முடியவில்லை. என்னளவில் அதுவொரு பொழுது போக்கு. எழுத்து என்பது ஒரு வரம் என்றால், வாசிப்பு தவம் என்று சொல்வேன்.

- எஸ்.எல்.எம். ஹனீபா

https://ghazal.press/

இலங்கை ரூ. 600
இந்தியா ரூ. 150

ISBN 978-624-5816-14-9
9 786245 816149

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org